MAXPRO
QUALITY STATIONER

# முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடு
# Early Childhood Learning Activities




ச.அருளானந்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


MAXPRO PUBLICATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RS. 250/=
DATE 30.10.2013
PAGE NO. 73,

# முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடு

TOWN AND GRAVETS
PRADESHIYA SABHA
22 OCT 2013
LIBRARY UPPUVELI

# Early Childhood Learnig Activities



Acc. no. 9133
370

கலாபூஷணம் கேணிப்பித்தன்
ச. அருளானந்தம். B.A, M.Lit, D.A. P.hD, SLEAS
முன்பள்ளிக் கல்வி ஆலோசகர்.

வெளியீடு :
**Maxpro Publications**
**Wellampitiya.**
**E.mail : maxpropub@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப்பட்டியல்.


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடுகள் |
| **ஆசிரியர்** | : | **ச. அருளானந்தம்** |
| வகை | : | முன்பள்ளிக் கல்வியியல் |
| © உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப் படம் | : | அ. அருள்சுலக்ஷிகா |
| முதற்பதிப்பு | : | 30 - 05 - 2012 |
| நூல் உருவாக்கமும் ஆலோசனையும் | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி, உவர்மலை-<br>திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| **விநியோகம்** | : | **லங்கா புத்தகசாலை.<br>F. L. 1. 14, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர.<br>கொழும்பு - 12.<br>தொ. பே. இல: 011-2341942** |
| ISBN | : | 978-955-0984-08-4 |
| **விலை** | : | **ரூபாய் 250.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

உலகளாவிய ரீதியில் முன்பள்ளிக் கல்வி இன்று பிரபல்யம் அடைந்து வருகிறது. சிறந்த முன்பள்ளிக் கல்வி முறைசார்ந்த கல்விக்கு உறுதியான அத்திவாரமாக அமைகின்றது. இலங்கையில் முன்பள்ளிக் கல்விக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அனுபவரீதியான பயிற்சிகளை வழங்க வேண்டும். அதற்கான நூல்கள் போதியளவு இல்லையென்றே கூறலாம். அந்தக் குறையை இததுறையில் அனுபவமிக்க திரு.ச.அருளானந்தம் அவர்கள் தீர்ப்பதில் முனைந்துள்ளார்.

திரு. ச. அருளானந்தம் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர். வடக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். முன்பள்ளிப் பாடத்திட்டத்தை வடிவமைக்கும் குழுவில் கடமையாற்றியவர். ஆங்கிலத்தில் எழுதி, அதனை அழகு தமிழில் மொழி மாற்றம் செய்து தந்தவர். வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிலிருந்து முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவித்தவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முன்பள்ளிக் கற்கைநெறியில் வளவாளராகச் செயற்பட்டவர். சிறுவர் பாதுகாப்பு நிதியம், யூனிசெப், சர்வோதயம், போன்ற நிறுவனங்களின் வளவாளராகச் சேவைசெய்தவர். இன்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமாப் பயிற்சி நெறிகளை நடத்திக் கொண்டிருப்பவர். முன்பள்ளிப் பாடத்திட்டங்களையும், அவற்றுக்கான பயிற்சிக் கையேடுகளையும் தயாரித்துக் கொடுப்பவர்.

இந்த நூலைப் படிப்பவர்கள் இலகுவாக முன்பள்ளிப் பிள்ளைகளைக் கையாளுந்திறனைப் பெற்றுக் கொள்வார்கள். பயிற்சி பெறுவதுபோலவே இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியரிடமும் இந்நூல் இருத்தல் அவசியம். ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். இந்நூலலில் குழந்தை உளவியல். மாணவமையக்கல்வி, ஆசிரியர் பங்களிப்பு, முன்பள்ளிக் கல்வித் தத்துவம். கற்பிக்கும் முறையியல், கற்றல் கற்பித்தல் சாதனப்பயன்பாடு போன்ற அத்தனையும் கொண்டுள்ளது.

'முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடுகள்' என்ற இந்நூல் முன்பள்ளி ஆசிரியர்களு க்களுக்குப் பெரிதும் பயனுடையது. மிகப் பொருத்தமாக வடிவமைக்கப் பட்டுள்ளது. இந்நூல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாது பெற்றோருக்கும் பயன்தரும் வகையில் எழுதப் பெற்றுள்ளது. சிறப்பாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பொதுவாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். இந்நூலை வாங்கிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஏ. எம். ஈ. போல்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
மாகாணக் கல்வித் திணைக்களம்
**கிழக்கு மாகாணம்**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்று முன்பள்ளிக் கல்வி முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. முறையான கல்விக்கான பாடசாலை அனுமதிக்கு முன்பள்ளிக் கல்வி முக்கிய முன்னெடுப்பாகவும், சான்றாகவும் ஆக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சியினையோ, அல்லது கொடுப்பனவுகளையோ எந்த அரசும் முன் வைக்காத போதும். முதலாந்தரத்தில் பிள்ளைகளை உள்வாங்கும் முறைசார் கல்விக்கு முன்பள்ளிச் சான்றிதழ்கள் அவசியமாகின்றன.

மாகாண அமைச்சுக்கள் முன்பள்ளிகளை முக்கியப்படுத்திச் செயற்பட்டாலும் அவை யாவும் மட்டுப்படுத்தப் பட்டதாகவே உள்ளன. முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளிக் கல்வியில் டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் இப்பட்டங்களைப் பெற முன்பள்ளி ஆசிரியர்கள் பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்தாக வேண்டும். பணத்தினைப் பெற வசதியற்றவர்கள் என்ன செய்வார்கள்?. சில அரசசார்பற்ற நிறுவனங்கள் அதற்கான உதவிகளை செய்கின்றன. ஆனால் அவைகூடப் போதியதாக இல்லை. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனத்தையும் வழங்குவதாக இல்லை. முன்பள்ளிகள் பெரும்பாலானவை தனியாரினாலேயே நடத்தப்படுகின்றன. விரல்விட்டு எண்ணக்கூடிய முன்பள்ளிகள் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்றன. வசதியான இடங்களில் அமைந்துள்ள தனியார் முன் பள்ளிகளில் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓரளவு வேதனம் கிடைக்கிறது.

பயிற்சிக்கான போதிய நூல்கள் இல்லை. பயிற்சியினை வழங்கும் பயிற்றுவிப்பாளர்களும் முன்பள்ளிக்கான கல்வியின் தரத்தினை மறந்து முதலாந்தரத்துக்கு ஆயத்தப் படுத்தும் பயிற்சியாகவே வழங்குவதை அவதானிக்கலாம்.

முன்பள்ளியில் நாம் எவ்வாறு கற்பிக்கின்றோமோ, அவ்வாறே பயிற்சி பெறும் பயிற்சி ஆசிரியர்களுக்கும் பயிற்சியினை வழங்க வேண்டும். முன்பள்ளிக் கல்வி மகிழ்ச்சி நிறைந்ததாக அமைய வேண்டும். அதற்கான முயற்சியாகவே எனது நூல்கள் அமைந்துள்ளன. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவை மட்டும் ஊட்டிவிடக் கூடாது. கல்வி அறிவு 15 வீதந்தான். கற்பிக்கும் அனுபவ மனப்பாங்கு 85 வீதமாக இருக்க வேண்டும். அதனைத் தீர்மானிப்பது சூழலும் அனுபவமும்தான். நல்ல அனுபவத்தைப் பெறும் வண்ணம் பயிற்சியின் போது செயற்பாடுகளை வழங்க வேண்டும். அப்போதுதான் நாம் வழங்கும் பயிற்சி பயனுள்ளதாக அமையும். முன்பள்ளி ஆசிரியர்களும் தாங்கள் பயிற்சியினைப் பெற்றதுபோலவே பிள்ளைகளையும் பயிற்றுவிக்க வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், அவர்களைப் பயிற்றுவிப்பவர்களுக்கும் இக்கைநூல் பேருதவியாக இருக்கும். பயிற்சியின் போது பெற்ற அனுபவங்களைப் புதுப்பிக்க வேண்டிய தேவையுமுள்ளது. அதனால் இந்த நூலை முன்வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்நூலைப் பின்பற்றி செயற்திட்டங்களை விளையாட்டு முறை ஊடாகக் கற்பிப்பது இலகுவானது. மகிழ்ச்சிகரமானது. இவ்வாறான நூலை எழுதும்படி தூண்டிய லங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு.க.சதீஸ் அவர்களுக்கும் இந்த நூலைப் படித்து அணிந்துரை தந்துதவிய கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. ஏ. எம். ஈ. போல் அவர்களுக்கும் இதயங்கனிந்த நன்றி நவில்கின்றேன்.

**கேணிப்பித்தன் ச.அருளானந்தம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பாளர் உரை

முன்பள்ளிக் கல்வி இன்று முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்கள் டிப்ளோமாப் பட்டம் பெற்றிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. டிப்ளோமாப் பட்டம் உள்ளவர்கள் மட்டுமே முன்பள்ளிகளில் சேவையாற்ற வேண்டும் என்ற நிலை வந்துவிட்டது. ஆனால் ஆசிரியர்களுக்குப் போதிய அறிவினைப் பெறக்கூடிய நூல்கள் அரிதாகவே உள்ளன. இந்த 'முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடு' என்னும் நூல் பல அரிய விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்ளைத் தாமே சுயமாக இயங்க வைப்பதற்-காகவே எழுதப்பட்டுள்ளது.

இந்த நூலை முன்பள்ளிக் கல்வியில் அனுபவம் வாய்ந்த திரு.ச.அருளானந்தம் அவர்களை அணுகி எழுதும்படி தூண்டி வெளியிடுகின்றோம். முன்பள்ளிக் கல்விதான் முதலாந்தரத்துக்கு அனுமதி பெறும் தகுதியை வழங்குகிறது. ஆதலால் ஆசிரியர்களுக்குச் சிறந்த வழிகாட்டி நூல்கள் தேவை. திரு. ச.அருளானந்தம் அவர்கள் உங்கள் அனைவருக்கும் ஏற்ற வகையில் இந்த நூலை மிக எளிமையாக எழுதியுள்ளார். அவர் பல்லாண்டுகளாக முன்பள்ளிக் கல்வியில் நாட்டங்கொண்டு உழைப்பவர். வடக்குக் கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளிக் கல்வியை முன்னெடுத்துச் செல்ல பலவழிகளில் உழைத்தவர். பல்லாயிரக்கணக்கான முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவித்தவர். இன்றும் பயிற்றுவித்துக் கொண்டிருப்பவர். முன்பள்ளிக் கல்விப் பாடத்திட்டத்தைத் தயாரித்தவர்களுள் திரு.ச.அருளானந்தமும் ஒருவர். ஆதலால் அதற்கேற்றாற் போல் எழுதிய இந்நூல் பயனுடையதாக இருக்கும்.

உங்களுக்குள் ஒளிந்திருக்கும் ஆற்றலை இந்நூல் உணரவைத்து உற்சாகப்படுத்தும். நாளுக்குரிய பாடச்செயற்பாடுகளை எவ்வாறு தயாரிக்கலாம், செயற்படுத்தலாம் என்று சொல்லித் தருகிறது. அவர் தரும் செய்திகளில் உங்களுக்குத் தெரிந்தவைகளும் உண்டு. தெரியாதவைகளும் அடங்கும். நீங்கள் படித்துப் பயன்பெறுவதற்காகவே இந்நூலை திரு.ச.அருளானந்தம் எழுதியுள்ளார். படித்துப் பயன்பெறுவது உங்களது கடமையாகும்.

**நன்றி !**

முகாமையாளர்
Maxpro Publications
Wellampitiya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்......!


- அணிந்துரை
- முன்னுரை
- பதிப்பாளர் உரை
- அறிமுகம்.
- 3 - 5 வயது முன்பள்ளி கலைத்திட்டம்
- செயற்பாட்டுப் பூங்காவின் பயன்பாடு.
- கற்றல் வட்டம்
- தன்னிச்சையானதும் சுதந்திரமானதுமான விளையாட்டு
- வகுப்பறையில் கற்றல் நிலையங்கள்
- வளப்பயன்பாடு
- மாதிரிக் கால அட்டவணை
- ஒருங்கிணைந்த கற்றல் அணுகு முறை
- முன்பள்ளி ஆசிரியரின் நடிபங்கு.
- உடலபிவிருத்தி.
- அறிவாற்றல் அபிவிருத்தி.
  1. மொழி விருத்தி
  2. கணித விருத்தி
  3. சூழலைப் புரிந்து கொள்ளல்.
- ஆக்கச் செயல் விருத்தி
  1) ஆக்கச் செயலில் சித்திரத்தின் பங்கு.
  2) சித்திரம்
  3) இசை / சங்கீத / நடன / நாடகச் செயற்பாடுகள் ஆக்க விருத்தியை விரிவுபடுத்துகின்றன.
- மனவெழுச்சி விருத்தி
- சமூக மனவெழுச்சி விருத்தி
- மனவடுக்களுக்குள்ளான பிள்ளைகளை இணைத்துக் கொள்ளல்.
- செயற்பாட்டுப் பதிவு மாதிரிப் படிவம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

நமது உலகம் மாற்றத்துக்குரியது. மாறிக்கொண்டிருப்பது. அதன் மாற்றத்துக்கேற்ப நமது பிள்ளைகளின் கல்வி நிலையில் அறிவியற் சிந்தனைகளை வளர்த்தெடுக்க முயல வேண்டும். விஞ்ஞான அறிவையும், அதனூடே பெறும் அனுபவத்தையும் அன்றாட செயற்பாடுகளில் புகுத்தி சிறார்களை வல்லமையுடையோராய் மாற்றம் பெறச் செய்யவேண்டும். அதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் நல்ல பயிற்சியினைப் பெற்றிருக்க வேண்டும்.

இக்கைநூலில் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்பள்ளிக் கல்விப் பிரிவில் நான் கடமையாற்றும்போது, தேசிய கல்வி நிறுவகம், சிறுவர் செயலகம், ஆகியவற்றுடன் இணைந்து எழுதப்பெற்று மகளிர் விவகார அமைச்சினால் சிறுவர் பாதுகாப்பு – யூனிசெவ் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' என்ற சிறந்த நூலினைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' என்ற நூலே இம்மாகாணங்களில் தற்போது நடைமுறையில் உள்ளது. இது ஒரு சிறந்த கலைத்திட்டமாக உள்ளது. மனவடுக்களில் சிக்கித் தவிக்கும் சிறார்கள் மகிழ்சியுடன் கற்றலில் ஈடுபடும் வண்ணம் விளையாட்டுமுறையை மையமாகக் கொண்டு வடிவமைக்கப் பெற்றது.

முன்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விரிவான வேலைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி அவர்களை ஆற்றல்மிக்கவர்களாகச் செயற்படுத்தும் நோக்கோடு இவ்வேலைத் திட்டம் அறிமுகமாகிறது. இச்செயற்திட்டத்தில் ஒருங்கிணைந்த கற்பித்தல் முறை புகுத்தப்பட்டுள்ளது. முன்பள்ளியில் கற்பிக்கும் எந்த ஆசிரியர்களுக்கும் உதவும் பொருட்டு இக்கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி

ஆரம்பப் பிள்ளை அபிவிருத்தியில் ஐந்து முக்கியமான அம்சங்களைக் அவதானிக்கலாம். இவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து தொடர்பு பட்டவையாக இருக்கும். அவை பின்வருமாறு:

- உடல் விருத்தி.
- அறிவாற்றல் விருத்தி
- ஆக்கச் செயல் விருத்தி.
- மனவெழுச்சி விருத்தி.
- சமூகஞ்சார் விருத்தி

என அமையும். இம் முக்கிய கட்டங்களை முதன்மைப்படுத்தியே முன்பள்ளிக்கான கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முன்பள்ளிக்கலைத் திட்டம் இரண்டு பிரிவுகளாக அமைந்துள்ளது.

- பகுதி -1. விடய விளக்கங்களைக் கொண்ட பகுதி.
- பகுதி -2. பயிற்சி விளக்கங்களைக் கொண்ட செயல்விளக்கப் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திட்டத்தில் பின்வருபவை உள்ளடங்கியிருக்கும்

**பகுதி-1** (முன்பள்ளி ஆசிரியருக்கானது)

- ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி.- கல்வித் தத்துவம்
- ஆசிரியரின் நடிபங்கு.
- குழந்தை உளவியல்
- சிறுவர் உரிமைகள்.
- பிள்ளையைப் புரிந்து கொள்ளல்.
- விஷேட தேவையுள்ள பிள்ளைகளோடு வேலைசெய்தல். (மாற்று வலுவுடையோர்)
- பிள்ளையின் பின்னணியைப் புரிந்து கொள்ளல்.
- பெற்றாருக்கான விழிப்புணர்வும், சுகாதாரமும்
- செயற்பாட்டுப் பூங்காவின் பயன்பாடு.
- கற்றல் நிலையங்களின் பயன்பாடு. (Learning Centers)
- ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறை.
- கற்பித்தல் சாதனங்களை மீளாக்கப் பொருட்களில் இருந்து தயாரித்தல்.
- தொடர்பாடல் திறன்கள்.
- முன்பள்ளி முகாமைத்துவம்.

**பகுதி -2. (பிள்ளைகளுக்குரிய கலைத்திட்டம். இது செயற்பாடுகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்)**

- உடல் விருத்தி.
- அறிவாற்றல் அபிவிருத்தி ( இது மூன்று பிரிவுகளை உள்ளடக்கும்)
    1. மொழி விருத்தி
    2. கணித விருத்தி
    3. சூழலைப் புரிந்து கொண்டு செயற்படும் விருத்தி
- ஆக்கச் செயல் விருத்தி. (இது பல பிரிவுகளைக் கொண்டமையும்)
    1. வரைதல் - (Every child is an artist) இது மிகமுக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. இங்குதான் பிள்ளையின் எழுத்தாற்றல் தொடங்குகிறது. வரைதல், நிறம் தீட்டுதல், கோலங்கள், ஒட்டுச்சித்திரம், போன்ற செயற்பாடுகளால் பிள்ளையின் அடித்தளம் வலுவுறுகிறது. கிறுக்கல்தான் எழுதுவதற்கான முதற்படி.
    2. உருவங்கள் செய்தல் - களி, பேப்பர், மணல் சிறு சுள்ளிகள் போன்றவற்றால் செய்தல்.
    3. இசையும் அசைவும். – சங்கீதம், நடனம், நாடகம் போன்ற செயற்பாடுகள்.
    4. கதை கூறுதல், புனைதல், அபிநயத்தோடு கதைகூறுதல் போன்றன.
- சமூக மனவெழுச்சி அபிவிருத்தி.
- சுகாதாரமும் போசாக்கும்.
- சுயமதிப்பீடும், மேற்பார்வை முகாமைத்துவமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்ச்சித்திட்டம் தேர்ச்சி மட்டத்தை உயர்த்துவதற்கான 3 – 5 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கானது. அதன் குறிக்கோள்களாகப் பின்வருவன உள்ளன.

- பிள்ளைகளின் சமூக உளநலத் தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களை சீரானநிலைக்குத் திருப்பும் செயற்பாடுகளைக் கொண்டிருக்கும்.
- பிள்ளைகளை முதலாந் தரத்துக்கு முழுமையாகப் பங்கு கொள்ள ஆயத்தப்படுத்துவது

இப்பாடத்திட்டம் தரம் 1 வகுப்புக்குத் தேவையான தேர்ச்சி மட்டம், திறன்கள் ஆகியவற்றைப் பிள்ளைகள் முழுமையாகப் பெறுவதற்காகத் தயாரிக்கப்பட்டது.

# 3 – 5 வயது முன்பள்ளிக் கலைத்திட்டம்

இக் கலைத்திட்டம் பல புதுமையானவைகளையும், உற்சாகந்தரக் கூடியதுமான விளையாட்டோடு ஒன்றித்த செயல்முறைகளைக் கொண்டமைந்துள்ளது. அவை:

- அறிவாற்றல் விருத்தியைத் தூண்டல்.
- தொடர்பாடல் திறன் விருத்தி – பேசுதலும் கிரகித்தலும், அறிவுறுத்தல்களுக்குத் துலங்கல் போன்றன.
- ஆரம்ப கணித எண்ணக்கரு, திறன்கள், நிறங்கள், உருவங்கள், வடிவங்கள், பொருத்துதல், எண்ணுதல் போன்ற அடிப்படை எண்ணக்கருக்கள்.
- ஆரம்ப எழுத்து, வாசிப்பு, எண்ணக்கரு, திறன் அபிவிருத்திக்கான தயார்நிலை.
- இசை
- நடனம்
- வரைதலும், பென்சிலைக் கையாளும் திறனும், கை – கண் இணைப்பாக்கமும் அத்துடன் முழுத் தசைநார்களின் இயக்க விருத்தியும்.
- வகுப்பறை நடத்தைக்கோலங்களும், எதிர்பார்ப்புக்களும்.
- ஊக்கிகளும் - ஊக்கப்படுத்தலும் மகிழ்ச்சியும். – போன்றவற்றைக் கொண்டது.

முன்பள்ளிப் பாடத்திட்டமும் கால அட்டவணையும் சுய இச்சையுடனான சுதந்திரமான விளையாட்டுக்களையும் உள்ளடக்கியுள்ளது. அவற்றுக்குக் கற்றல் நிலையங்கள் பேருதவியாக உள்ளன. ஒரே நேரத்தில் பாடங்களும், அதேவேளை கற்றல் நிலையங்களில் மேலதிக செயற்பாடுகளை நடத்தக் கூடியதாகவும் உள்ளது. ஒரு குழுப் பிள்ளைகள் ஆசிரியரோடு சேர்ந்து செயற்படும்போது, ஏனையவர்கள் கற்றல் நிலையங்களில் சேர்ந்து செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

இக் கைநூலில் பாட நிகழ்ச்சிச் செயற்பாடு கிழமை வாரியாகக் கொண்டுள்ளது. இது ஆசிரியர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியது. இதிலடங்கும் பாடவேளைகள் 3 - 5 வயதுப் பிள்ளைகளுக்கு முறையான பாடத்திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்டுள்ளது. அவை பிள்ளைகளுக்கு உற்சாகத்தை ஊட்டித் திறன்களையும், தேர்ச்சிகளையும் விருத்தி செய்வனவாகவும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பாட்டு பூங்காவின் பயன்பாடு

இதனை விளையாட்டு முற்றம் என்றும் கூறுவார்கள். கல்வியியலாளர் புரபல் விளையாட்டு முற்றத்துக்கு முன்னுரிமை வழங்கினார். முன்பள்ளிக் கல்வியின் அடிநாதமாக விளங்கும் விளையாட்டுக்குக் களம் அமைத்துக் கொடுப்பது செயற்பாட்டுப் பூங்காதான். இப்பூங்கா பிள்ளைகளின் தொடர்ச்சியாக வளரும் உடலுக்கும் வேகமாக வளர்ச்சி அடையும் உள்ளத்துக்கும் இடையில் சமநிலை பேணுகிறது.

வீட்டில் அதிகநேரம் பெற்றாருடன் நேரத்தைக் கழிக்கும் பிள்ளை விளையாட்டுப் பூங்காவில் மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து மகிழ்ச்சிகரமாக விளையாடி அனுபவம் பெறுவதற்கு இடமளிக்கிறது.



முன்பள்ளிப் பருவப்பிள்ளைகள் ஒரு இடத்தில் தொடர்ந்திருக்க மாட்டார்கள். அதேவேளை ஒரே செயற்பாட்டில் ஈடுபடவும் மாட்டார்கள். விளையாட்டில் அதிகம் நாட்டமுடையோராகக் காணப்படுவார்கள். எப்போதும் துருதுரு வென்று இருக்கும் துடிப்பான பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். அதற்கேற்றவாறு பொருத்தமான நல்ல கற்றல் அனுபவங்களைப் பெறக்கூடியதாக ஒழுங்குகளை ஆசிரியர் திட்டமிட வேண்டும்.

பிள்ளைகளின் அசைதல், நடத்தல், ஓடுதல் பாய்தல், கெந்துதல், போன்றன இயற்கையான செயற்பாடுகளாகும். இச்செயற்பாடுகளினால் அவர்களின் தலை, கை, கால், உடற்தசை நார்கள், வலுவள்ளதாகவும் உறுதியானதாகவும் விருத்தியடைகின்றன. சிறந்த உடல் விருத்தி ஏனைய விருத்திகளுக்கு வித்திடுகின்றது. தசைநார் விருத்தியடைந்த பிள்ளை எவற்றையும் திறமையாகக் கையாளும் திறனைப் பெறுகிறது. உடலின் புலனுறுப்புக்களைக் கட்டுப்படுத்தி இயைபாக்கத்தினைப் பெற்றுக் கொள்ளும்.

இவற்றை வழங்கும் இடமாக விளையாட்டுப் பூங்கா அமையவேண்டும். அப்பூங்காவில் இயற்கையான உயரமான மரங்கள், பூஞ்செடிகள், அத்துடன் செயற்கையான பல்வேறு வகையான விளையாட்டுச் சாதனங்கள் (படத்தில் உள்ளவாறு) பிள்ளைகளுக்கு ஏற்றவாறு அமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ♦ கற்றல் வட்டம்

காலையில் பிள்ளைகள் பாடசாலைக்கு வந்ததும் வட்டமாக ஆசிரியரைச் சூழ்ந்து இருப்பார்கள். கற்றல் வட்ட நேரத் தொடக்கத்தில் ஆசிரியர் பிள்ளைகளது வருகையைப் பதிவார். பின்னர் பிள்ளைகளிடம் அன்றைய வானிலை தொடர்பான செய்திகளை வானிலை மணிக்கூட்டு வடிவத்தில் கைகளை அகல விரித்துக் கலந்துரையாடலாம்.

பிள்ளைகள் வட்டமாகச் சூழ்ந்திருக்கும் போது அவர்களது எண்ணங்கள், சிந்தனைகள் பற்றிக் கலந்துரையாடச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு திங்களும் கற்றல் வட்ட நேரத்தில் அந்த வாரமுடிவில் என்ன செய்தார்கள் என்பதைக் கூறும்படிக் கேட்பது நலம். அதேவேளை பிள்ளைகளில் உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் ஆராய்வதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கிறது. அத்துடன் கற்றல் வட்ட நேரத்தில் அவர்களது அன்றைய மனோநிலையை (psychosocial) அறிவதற்கான பாடவேளையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த வேளையில் ஆசிரியர் விருப்பம், அன்பு, கருணை, அரவணைப்பு, ஆச்சரியம், முதலியவற்றைக் காட்டவேண்டும். இவற்றோடு ஆசிரியர் பிள்ளைகளது சிந்தனையைக் கிளறக்கூடிய வினாக்களையும், அவர்களைக் கவரக்கூடிய கதைகள், உதாரணங்களைக் கேட்டு உற்சாகப்படுத்தவும் வேண்டும். எந்தநேரமும் பிள்ளைகள் கலந்துரையாடும் போது அவர்களைத் தூண்டி, அவர்களது முயற்சிகளின்போது உற்சாகப்படுத்திப் போற்றியும் சந்தோசப் படுத்தவேண்டும். பாராட்டுக்களும் புகழ்ச்சிகளும் பிள்ளைகளின் தற்துணிவையும் மீண்டும் மீண்டும் முயற்சியினை மேற்கொள்ளும்படி ஏணிகளாக உயர்வையடையச் செய்வன.

## ♦ தன்னிச்சையானதும் சுதந்திரமானதும் விளையாட்டு



பிள்ளைகள் தம்மைச் சூழவுள்ள பொருட்களை பார்த்தும், கேட்டும், தொட்டளைந்தும், பேசியும் கற்கிறார்கள். சிறப்பாகக் கூறின் ஐம்புலங்களின் ஊடாகக் கற்கிறார்கள். ஆசிரியர்கள். பெற்றார் என்ற வகையில் பிள்ளைகளை எந்நேரமும் இயங்குபவர்களாக்கி இயங்க வைக்க வேண்டும். விளையாடுவதே அவர்களது பெருவிருப்பாகும். வாசித்தல், செவிமடுத்தல், கிரகித்தல், தொட்டளைதல், பேசுதல். பாடுதல் போன்ற செயற்பாடுகளைக் கொடுத்து அவர்களை வழிப்படுத்த வேண்டும். விளையாட்டுப் பிள்ளைகளைச் சிந்திக்க வைக்கிறது. செயற்பட வைத்து அனுபவம் பெற வைக்கிறது. விளையாட்டு வெறுமனே விளையாட்டுமட்டுமல்ல. அது ஒரு கற்றல் சாதனமாகும். அது ஒரு தொடர்நிகழ்ச்சியாகும். உடலாலும், உள்ளத்தாலும் ஒன்றிணைந்து உற்சாகத்தைத் தரவல்லது. புத்தாக்கத்தையும், சுய ஆராய்ச்சியையும், உடல்விருத்தியோடு உள மொழி விருத்தியையும் ஏற்படுத்துகிறது. அத்துடன் சிறந்த தொடர்பாடலையும். மனவுறுதியையும், மன அமைதியையும் தருகிறது.

எவ்வாறு கற்பித்தல், பயிர்செய்தல், மீன்பிடித்தல். போன்றவற்றில் பெரியவர்கள் ஆர்வமாக இருக்கிறார்களோ, அவ்வாறே பிள்ளைகள் விளையாட்டில் ஆர்வமாக இருக்கிறார்கள். விளையாட்டு பல்வேறு அனுபவங்களைக் கொடுக்கிறது. புதியனவற்றைக் கற்றுக் கொடுக்கிறது. வித்தியாசமான முடிவுகளை எடுக்கவைக்கிறது. அவர்கள் விளையாட்டின் மூலம் வாழ்க்கைக்கு ஆயத்தமாகிறார்கள்.

பிள்ளைகள் தாம் வாழும் சூழலில் உள்ள மனிதர்கள் அவர்களின் நடிபங்கு, பொருட்கள் தன்மை, பயன்பாடு, எண்ணிக்கை பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். அதனால் விரிந்த அறிவினைப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாடுவதால் பிள்ளைகள் பெறும் நன்மைகள்.**

- எவ்வாறு செய்யலாம் என்று புரிந்து கொண்டு இயங்குவர்.
- புது எண்ணங்களையும், சிந்தனைகளையும் பெற்றுக் கொள்வர்.
- தசைநாரைக் பலப்படுத்தி கட்டுப்படுத்துவர்.
- புதுமையாகச் சிந்தித்துச் செயலாற்றுவர்.
- பிரச்சினை தீர்க்கும் திறன்களைப் பயன்படுத்துவர்.
- சுதந்திரமாகத் தங்களுக்குத் தாங்களே கற்றுக் கொள்வர்.
- ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றை அடையாளம் காணும் சிந்தனையைப் பெற்றுத் துலங்குவர்.
- சூழலுக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற உணரச்சியைப் பெறுவர்.
- மற்றவர்களோடு ஒத்துழைக்கக் கற்றுக் கொள்வர்.
- மற்றவர்களின் சிந்தனையைப் பின்பற்றிச் செயற்படுவர்.
- மற்றவர்களோடு சேர்ந்து ஒற்றுமையாக மகிழ்ந்திருப்பர்.
- முழுமையாக யாவற்றிலும் ஈடுபடுவர்.
- விட்டுக் கொடுக்கும் திறனைப் பெறுவர்.

உடலுறுப்புக்களில் செயற்பாடுகளான -- தொடுதல், சுவைத்தல், கேட்டல், பார்த்தல், அசைதல். செய்வதன் மூலம் உணர்தல், பொருட்களைத் தொட்டுணர்ந்து பரீட்சித்தல், மொழியூடாக விளங்கி எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளல் போன்ற செயற்பாடுகளால் கற்றல் உயிர்த்துடிப்புள்ளதாக இருக்கும்.

**விளையாட்டு வெறுமனே விளையாட்டு அல்ல. அது ஒரு 'கற்றல் தொடர்நிகழ்ச்சி' யாகும். விளையாட்டு பின்வருவனவற்றுக்கு வித்திடுகிறது.**

**உடல் அபிவிருத்தி**

பல்வேறு பொருட்களோடு பிள்ளைகள் விளையாடும் போது அவர்களின் நுண்ணியக்க, பேரியக்கத் தசைநார்களின் திறன்களும், கை, கண் இசைவாக்கமும் வலுவடைந்து உறுதிபெறும். அத்துடன் வாசித்தல், எழுதுதல், கணித எண்ணக்கருக்களான வகைப்படுத்தல், தரம்பிரித்தல். கை கண் இயைபாக்கம். பொருட்களின் வித்தியாசங்களை அறிதல். போன்றவற்றை வரைதல் மூலமும், நிறந்தீட்டலின்போதும், களியினால் வடிவங்கள், துண்டங்கள், செய்யும்போதும், மணல், நீர் போன்றவற்றோடு விளையாடும் போதும் மிகத்தேவையான திறன்களான நுண்ணியக்க, பேரியக்கத் தசைநார்களின் திறன்களும் கை கண் இசைவாக்கமும் வலுவடைந்து உறுதிபெறும்.

**அறிவாற்றல் அபிவிருத்தி**

பிள்ளைகள் தங்களது மொழித்திறன்களில் பயிற்சி, புத்தாக்கச் சிந்தனைகளில் முயற்சிகளை மேற்கொள்ளல். பிரச்சினைகளை உருவாக்கி, அவற்றுக்கு தீர்வுகளைக் காணல். எண்ணச்சிதறல்களை பரிசீலித்து நல்லனவற்றை எடுக்கும் திறன்களை விருத்தி செய்தல்.

**மனவெழுச்சி அபிவிருத்தி**

பிள்ளைகள் தங்களைப் பயங்காட்டும் அல்லது அச்சுறுத்தும் நிகழ்வுகளை எதிர்கொண்டு விளையாட்டினால் வெற்றிகாணுவர். உ + ம்: பெற்றாரிடையே சச்சரவு, குழந்தையொன்றின் பிறப்பு, குடும்பத்தில் ஒருவரின் சுகவீனம் போன்றவற்றைக் கூறலாம். பிள்ளைகள் விளையாட்டின் ஊடாக இவ்வாறான மனவெழுச்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து வெற்றிகாணுவர். பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளையும் காணுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அபிவிருத்தி

பிள்ளைகள் விளையாட்டு மூலம் விட்டுக்கொடுத்தல், பேரம்பேசி உடன்படுதல், பங்குபற்றல் திட்டமிடல் போன்றவற்றில் திறன்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**வகுப்பறையில் கற்றல் நிலையங்கள்**

கற்றல் நிலையங்கள் என்பது விஷேடமான கவர்ச்சியான ஒரு பகுதியாகும். அங்கு ஆர்வமூட்டும் கற்றல் சாதனங்கள் பிள்ளைகளை ஈர்த்து இழுக்கும். பிள்ளைகளின் சிந்தனைக்கும், கற்பனா வளத்துக்கும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதலும், காரணகாரியங்களைப் பரிந்து கொள்ளவும் இடமளித்து உற்சாகமூட்டும் பூங்காவாகவும் விளங்குகிறது.

**கற்றல் நிலையங்களை அமைத்தல்.**

- கற்றல் நிலையத்துக்கான பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து ஒழுங்கு செய்து பெயரிட வேண்டும்.
- ஒவ்வொரு வேளையிலும் எத்தனை பிள்ளைகள் செயற்படலாம் என்று தீர்மானிக்க வேண்டும். உ+ம் : நீர் மணல் நிலையத்தில் 5, கணித நிலையத்தில் 6. இவ்வாறு திட்டமிட்டால் எல்லோருக்கும் போதுமான கற்றல் பொருட்களையும், இடநெருக்கடியையும் தவிர்த்துக் கொள்ளலாம்.
- ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு மேசை, பாய். பயன்படுத்த வேண்டிய பொருட்கள் என்று வேறுபடுத்தி ஒவ்வொரு பகுதியையும், மற்றதில் இருந்து பிரித்து விடலாம்.
- ஒவ்வொரு நிலையத்திலும் பெட்டி அல்லது ஒரு கொள்கலன் என வைத்துவிட்டால் அதற்குள் கற்றல் பொருட்களை வைக்கலாம். அவற்றைப் பயன்படுத்திய பின் ஒழுங்காக அவை இருந்த இடங்களில் வைப்பதற்குப் பிள்ளைகளை உற்சாகப் படுத்தினால் மீண்டும் பயன்படுத்தச் சுகமாக இருக்கும்.
- நாடக, நடன அழகியல் சார்ந்த கற்றல் நிலையங்கள் சத்தங்களை உருவாக்கும். ஆதலால் அவற்றை வாசிப்பு நிலையங்களில் இருந்து அப்பால் அமைப்பதற்குத் திட்டமிடவேண்டும்.
- கம்பம், வழுக்கி போன்ற பொருட்கள் விளையாட்டுக்கு மிக முக்கியமானவை. அவற்றை அமைப்பதற்குச் செலவும் அதிகமாகும். அவை எப்போதும் பாதுகாப்பாகவும், நல்ல நிலையிலும் இருக்க வேண்டும். இவற்றைப் பெற்றாரிடம் அல்லது நலன்விரும்பிகளிடம் இருந்து பெறலாம்.
- பழைய பொருட்கள் மாற்றப்பட்டுப் புதுப்பொருட்கள் புகுத்தப்பட வேண்டும்.
- புதிய அழகான பொருட்கள் படங்கள் பிள்ளைகளின் கண்மட்டத்தில் வைக்க வேண்டும்.
- தண்ணீர். மணல் நிலையங்களை வகுப்பறைக்கு வெளியே வைக்கவேண்டும்.
- கற்றல் சாதனங்களை கற்றல் நிலையத்தில் வைக்கவேண்டும். பிள்ளைகளால் செய்யப்பட்ட புத்தகங்கள் வாசிப்பு நிலையத்தில் வைக்கவேண்டும். எழுத்தட்டைகள் மொழி நிலையத்தில் வைக்கவேண்டும்.
- பிள்ளைகள் கற்றல் நிலையங்களில் செயற்படும்போது ஆசிரியர் அவதானத்துடன் உலாவரவேண்டும். குழுக்குழுவாக, கற்றல் நியைங்களுக்கிடையிலும், பிள்ளைகளுக்கு இடையிலும் மேற்பார்வையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.. பிள்ளைகள் தாமே செய்து பழகவும், பேசி மகிழவும் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும.

வாராந்த செயற்பாட்டு வேலைத்திட்டம் கற்றல் நிலையத்தின் செயற்பாட்டின் உயிர்துடிப்பில் தங்கியுள்ளது. திட்டமிட்ட செயற்பாடுகள் குறித்த நேரத்துக்கு முன் முடிக்கப்பட்டால் பிள்ளைகள் கற்றல் நிலையத்தில் சென்று தாங்களே செயல் மூலம் கற்றுக் கொள்ளலாம். ஆசிரியர்களே எப்போது கற்றல் நிலையங்களைப் பயன்படுத்தலாம் என்று தீர்மானிக்கலாம். ஒரு சிறு குழுவுக்கு தமிழ் அல்லது கணிதத்தில் ஒரு செயற்பாடு திட்டமிட்டிருந்தால், மற்றப் பிள்ளைகள் கற்றல் நிலையத்தைப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாதிரிக் கற்றல் நிலையங்கள்

ஆக்கச் செயற்பாடு - நாடகத்துக்கான கற்றல் நிலையம்.

கற்றற் சாதனங்களாகப் பல்வேறு பழைய ஆனால் சுத்தமான துணிகள், பழைய வீட்டுப் பொருட்கள், உ + ம்: பானை, கோப்பைகள், தட்டுக்கள், கரண்டிகள், சீப்பு, சிப்பிகள், தெங்குப் பொருட்கள், பாவைகள், வெற்றுப் போத்தல்கள், போன்றவற்றைச் சேகரித்து வைக்கலாம்.



கணிதக் கற்றல் நிலையம் கணிதச் செயற்பாட்டுக்கான வித்தியாசமான அளவுள்ள மூங்கில்தடிகள், சிரட்டைகள், சிப்பிகள், விதைகள், வெற்றுப் பேணிகள், போத்தல்கள், மூடிகள், யோகற் கோப்பைகள், கரண்டிகள், போன்ற பல்வேறு பொருட்கள் வைக்கலாம்.



**தண்ணீர், மணல் கற்றல் நிலையம்**

கற்றற் சாதனங்களாக தண்ணீர் - பெரிய பேசின், வாளி, தண்ணீர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணல் - பெரிய பேசின், 4 தடித்த மூங்கில் தடிகள் அல்லது வேறு தடிகள், மணல், சிரட்டைகள், சிப்பிகள், விதைகள், வெற்றுப் பேணிகள், போத்தல்கள், மூடிகள், யோகற் கோப்பைகள், கரண்டிகள், பப்பாசித் தண்டுகள், காய்ந்த எருக்கலத் தடிகள், புனல், போன்றன.



**மொழியும் வாசிப்புக்குமான கற்றல் நிலையத்தில்** நிலையத்தில் வாசிக்கக் கூடிய பல்வேறு வகையான புத்தகங்கள், சஞ்சிகைகள், படப்புத்தகங்கள். வகுப்பில் செய்த பல்வேறு வகையான ஆக்க வேலைகள் கொண்ட புத்தகங்களைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசை, நடன கற்றல் நிலையம்.** வகுப்பில் செய்த பல்வேறு இசைக் கருவிகள், பிள்ளைகளால் கொண்டு வரப்பட்ட இசைக்கருவிகள போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.





# வளப்பயன்பாடு

இச் செயற்பாடுகளுக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் வளப்பொருட்கள் அனைத்தும் மலிவான மாற்றீட்டு அல்லது மறுசீராக்கப பொருட்களால் செய்யக்கூடியன. உங்களுக்குத் தேவையான கற்றல் பொருட்களை உதாரணமாக பழைய பேப்பர். பெட்டிகள், சஞ்சிகைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், யோகற் கோப்பைகள். உறிஞ்சிகள் போன்றவற்றை பெற்றார் மூலம் பெறக்கூடியதாக இருக்கும். இயற்கைச் சூழலில் உள்ள தாவரங்களின் இலைகள், பூக்கள், விதைகள், சிறுகற்கள் போன்ற அனைத்தும் வளப்பயன்பாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர் திறமையான வளவாளராக இருப்பார். அவர் பிள்ளைகளைக் கவர்ந்து சேவைசெய்வார். ஆசிரியர்கள் நினைத்தால் பிள்ளைகளைச் சாதனையாளர்களாக ஆக்கலாம். பிள்ளைகள் கற்றல் சாதனங்களைக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். பெற்றார்களும் தமது பிள்ளைகள் கற்பதையே விரும்புவார்கள். அவர்கள் எப்போதும் உதவுபவர்களாகவே இருப்பார்கள். முன்கூட்டியே திட்டமிடல் மிகமிக அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாதிரிக் கால அட்டவணை**

**கால அட்டவணை**

| நேரம் | செயற்பாடு |
|---|---|
| 8:00 - 8:15 | வாழ்த்தி வரவேற்றல், ஒன்றுகூடல் - சுத்தம்,சமய நிகழ்வுகள், முதலியன. |
| 8:15 - 8.30 | வாழ்த்தி வரவேற்றல், சுகாதாரப் பழக்க வழக்கங்கள்,உள்ளகச் செயற்பாடுகள், சமய நிகழ்வுகள், உளவளக் கற்றல் செயற்பாடுகள், நாள் வேலைத்திட்டம் |
| 8:30 - 9:30 | கற்றல் நிலையச் செயற்பாடுகள், அறிவாற்றல், மனவெழுச்சிச் செயற்பாடுகள், |
| 9:30 - 10:30 | இசை / சித்திரம் / ஆக்கற் செயற்பாடுகள் |
| 10:30 - 10:45 | இடைவேளை |
| 10:45 - 11.30 | கணிதம் / மனவெழுச்சிச் செயற்பாடுகள், |
| 11:30 - 11:45 | சூழலியல் செயற்பாடுகள் வெளிக்கள விளையாட்டு உடலபிவிருத்தி |
| 11:45 - 11:00 | இசையும் அசைவும், மீளவலியுறுத்தல் / பாடல்கள் / சுத்தம் முதலியன வீடு செல்லும் பாடல். |
| 11:00 | விடுகை |

முன்பள்ளிப் பாடத்திட்டமும் கால அட்டவணையும் சுயஇச்சையுடனான விளையாட்டுக்களையும் உள்ளடக்கியுள்ளது. அவற்றுக்குக் கற்றல் நிலையங்கள் பேருதவியாக உள்ளன. ஒரே நேரத்தில் பாடங்களும், அதேவேளை கற்றல் நிலையங்களில் மேலதிக செயற்பாடுகளை நடத்தக் கூடியதாகவும் உள்ளது. ஒரு குழுப் பிள்ளைகள் ஆசிரியரோடு சேர்ந்து செயற்படும்போது, ஏனையவர்கள் கற்றல் நிலையங்களில் சேர்ந்து செயற்பாடுகளில் ஈடுபடுவர். வளங்களும், வசதிகளுக்கும் ஏற்ப ஒழுங்கு படுத்தலாம். முன்பள்ளியில் சேவையாற்றும் ஆசிரியர்களின் நடிபங்கு முக்கியமானது. அதனைச் சரிவரப்புரிந்து கொள்ள வேண்டும்.

இக் கைநூலில் பாட நிகழ்ச்சிச் செயற்பாடு கிழமை வாரியாகக் கொண்டுள்ளது. இது ஆசிரியர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியது. இதிலடங்கும் பாடவேளைகள் 3 - 5 வயதுப் பிள்ளைகளுக்கு முறையான பாடத்திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்டுள்ளது. அவை பிள்ளைகளுக்கு உற்சாகத்தை ஊட்டித் திறன்களையும், தேர்ச்சிகளையும் விருத்தி செய்வனவாகவும் உள்ளன.

## ◆ ஒழுங்கிணைந்த கற்றல் அணுகுமுறை

ஆசிரியர் ஒரு தலைப்பின் கீழ் பல்வேறு பாடங்களையும் தொடர்பு படுத்தி ஒன்றிணைத்துச் செயற்பாடுகளாக ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். முன்பள்ளியில் பல்வேறு பாடங்களைக் கற்பிக்கக் கால அட்டவணை கிடையாது. ஆசிரியரும், மாணவர்களும் சேர்ந்து ஒரு தலைப்பின் கீழ் விருப்பமான விடயங்களைத் தேர்ந்தெடுப்பர். ஒரு கருப்பொருளை மையமாக வைத்துப் பல குழுச்செயற்பாடுகளை முழுமையாக நிறைவேற்ற முயலும்போது விளையாட்டு மூலம் நிறைவேற்ற வேண்டும். கற்பனை, கண்டுபிடிக்கும் ஆர்வம், பொருட்களைச் சேகரித்தல், ஆக்கச் செயல்கள், அறிந்து கொள்வதில் ஆவல் முதலியவற்றைச் செயற்பாடுகளாக்கி வகுப்பறையின் உள்ளோ, வெளியிலோ வளங்களுக்கும், வசதிகளுக்கும் ஏற்ப ஒழுங்குபடுத்தலாம்.

எடுத்துக்கொண்ட கருப்பொருளை மையமாக வைத்தே இவற்றை ஒருங்கிணைப்பது ஆசிரியரின் கடமையாகும். தங்கள் பிள்ளைகள் எவ்வாறு இச்செயற்பாடுகளில் பங்கு கொள்கிறார்கள் என்பதைப் பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். தாவரங்கள், பறவைகள், விலங்குகள், பழங்கள், குடும்பங்கள், நண்பர்கள், தன்னைப் பற்றி அறிதல் போன்ற சில தலைப்புகளை முன்பள்ளிச்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறார்கள் மிக விரும்புவார்கள். உடல்விருத்தி, அறிவாற்றல் விருத்திகளான மொழித்திறன், பேச்சு, வாசிப்பு, எழுத்து, கணித எண்ணக்கரு, சூழல் தொடர்பான சுற்றாடல், ஆக்கச்செயற்பாடுகள், மனவெழுச்சி வெளிப்பாடுகள், சமுகஞ்சார் மனவெழுச்சி வெளிப்பாடுகள் ஆகியன தேர்ந்தெடுத்த தலைப்பைச் சுற்றிப் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். பிள்ளைகள் கற்றலில் ஆழ்ந்து ஈடுபடும்போது மகிழ்ச்சிகரமான கற்றற் செயற்பாடுகளுக்க ஏற்ற சூழல் உருவாகிறது.

ஒருங்கிணைந்த கற்றச் செயற்பாட்டில் இரண்டு முக்கியமான அம்சங்களைக் காணலாம். ஒன்று எந்தப் பாடங்களிலும் இருந்தும் தொடங்கலாம். ஒன்றோடு ஒன்று தொடர்புற்றுச் செல்வதை அவதானிக்கலாம். இரண்டாவதாக பாடங்கள் ஊடாக பிள்ளையின் உடலபிவிருத்தி, அறிவாற்றல் அபிவிருத்தி, ஆக்கச் செயற்பாடுகள், மனவெழுச்சி, அத்துடன் சமூகஞ்சார் மனவெழுச்சிக்குரிய செயற்பாடுகளும் கற்றலுடன் பின்னிப் பிணைந்து இழையோடுவதை அவதானிக்கலாம். உடலும் உள்ளமும் ஒருங்கிணைந்து செயற்படும் வண்ணம் கற்றல் அணுகுமுறை அமையவேண்டும்.




முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஒன்றிணைந்த கற்றல் பற்றிய அறிவு இன்றியமையாதது. ஒருங்கிணைந்த கற்றற் செயற்பாடு மேடையில் ஒரு நாடகம் நடிப்பது போல் அமையும். பிள்ளைகள் விளையாடுவார்கள். ஆனால் அவர்களை அறியாமலேயே அனுபவத்தைத் தங்கள் உடமையாக்கிக் கொள்கிறார்கள். விளையாட்டு என்பது வெறுமனே விளையாட்டல்ல. அது ஒரு கற்றற் செயற்பாடாகும். நீண்டகாலப் பயனைத் தருவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருங்கிணைந்த அணுகுமுறையில் குறித்த ஒரு தலைப்பின் ஊடாக விருத்தி செய்யக்கூடிய கணித எண்ணக்கருக்கள் பற்றிய ஒரு செயற்பாட்டினைப் பார்ப்போம்.**

| இல | தலைப்பு | செயற்பாடு - கணித எண்ணக் கருக்கள் இடம்பெற வேண்டும் | வழங்கப்படவேண்டிய பொருட்கள் |
|---|---|---|---|
| | விளையாட்டுச் சந்தை | 1. வகுப்பைக் குழுக்களாக்கல்.<br>2. அட்டையில் மீன், இறால், நண்டு களை வரைந்து வெட்டி எடுத்தல்.<br>3. அவற்றில் காந்தத் துண்டுகளைப் பொருத்துதல்.<br>4. வகுப்பறையில் அல்லது வெளியில் வட்டம் ஒன்றை வரைதல். அதுதான் கடல்.<br>5. அதற்குள் மீன்களைப் பரத்தி விடுதல். தூண்டிலில் நூலைக் கட்டுதல். நூலின் நுனியில் காந்தத் துண்டை முடிதல்.<br>6. குழுக்களை மீன்பிடிக்கும் படி விளக்குதல்.<br>7. பிடிக்கும் மீனை குடும்பத்தவர் சேர்த்தல்.<br>8. அனைத்துக் குழுக்களும் மீனைப் பிடிக்க வேண்டும். எந்தக் குழு அதிகம் பிடிக்கிறதோ. அந்தக் குழு வெற்றி பெற்றதாகக் கொள்ளலாம்.<br>9. மீன் பிடித்தவர்களைக் கலைத்துக் குழுவாக்கி, மீன் விற்போராகவும், மீனை வாங்குவோராகவும் நடிப்பிக்க வைத்தல்.<br>10. சந்தையில் மீன் விற்போராகவும், மற்றவர்கள் வாங்குவோராகவும் நடிக்க வேண்டும்.<br>11. சந்தையில் விலை கூறவேண்டும். பேரம்பேச வேண்டும்.<br>12. பணப்பரிமாற்றம் நடைபெற வேண்டும்<br>13. மீன்பிடித்தல் பற்றி பாடலுடன் நிறைவு செய்யலாம்.<br>இவ்வாறு செயற்படும்போது அனைத்துப் பாடங்களும் ஒருங்கிணைந்து நடைபெறுவதை அவதானிக்கலாம். | பிறிஸ்டல்போட், நிறச்சோக், நீளமான தடிகள், நூல், கத்தரிக்கோல், காந்தத் துண்டுகள், பணத்துக்கான மாதிரி நாணயங்கள், தாள் போன்றன. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளியில் சேவையாற்றும் ஆசிரியர்கள் முன்பள்ளியின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்தவர்களாக இருக்கவேண்டும். ஆசிரியர்களின் நடிபங்கு முக்கியமானது. அதனைச் சரிவரப்புரிந்து கொள்ள வேண்டும்.

# முன்பள்ளி ஆசிரியரின் நடிபாங்கு

தாயின் மடிதான் முதற்பாடசாலை எனக் கண்டோம். அடுத்து மிக முக்கியத்துவத்தைப் பெறுவது முன்பள்ளி ஆசிரியர்கள்தான். முன்பள்ளி ஆசிரியர்கள் முறையான கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைவிடவும் உன்னத நிலையில் உள்ளவர்கள். இந்தக்கூற்றை நேரடி அனுபவத்தில் காணக்கூடியதாக இருந்தது.

இன்றைய உலகில் ஒரு பிள்ளையின் வெற்றியும், வீழ்ச்சியும் முன்பள்ளி ஆசிரியரிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ளது. முன்பள்ளிச் சிறார்கள் தங்கள் தாய்க்கு அடுத்தபடியாக முன்பள்ளி ஆசிரியர்களையே நேசிப்பவர்கள். தங்கள்மேல் முன்பள்ளி ஆசிரியர்களின் அன்பும், ஆதரவும் குவியவேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள். இந்த அடிப்படை எதிர்பார்ப்புகள் உறுதியானதாக அமையும்போது பிள்ளையின் எதிர்கால வாழ்வு பிரகாசமானதாக இருக்கும். எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் பின்வரும் குணாதிசயங்களைக் கொண்டிருப்பார் என எதிர்பாக்கப்படுகிறது.

* அன்பும், ஆதரவும், கனிவாகப் பேசும் தன்மையும் கொண்டிருபார்.
* பாசமும். பரிவும், அரவணைக்கும் தன்மையும் கொண்டிருப்பார்.
* மலர்ந்த முகத்துடன் புன்னகையுடன் உரையாடுபவர்.
* அவதானித்துக் காரணகாரியங்களைப் புரிந்து செயல்படுவார்.
* பிள்ளைகளையும், அவர்களது பின்னணிகளையும் அறிந்திருப்பார்.
* பிள்ளைகளைப் பெயர்கொண்டு அழைப்பார்.
* பிள்ளைகளது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்.
* பேதங்காட்டாது அனைவரையும் அரவணைத்து உதவுவார்.
* பாடத்திட்டத்தில் நல்ல பரீட்சையம் உடையவர்.
* விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகளை ஒன்றிணைத்துச் செயற்படுத்துவார்.
* காலஅட்டவணையைப் புரிந்து செயற்படுபவர்.
* பிள்ளைகளின் கண்மட்டத்துக்குக் குனிந்து செயற்படுபவர்.
* சிறந்த வழிகாட்டியாக இருந்து பிள்ளைகளை செயற்படத் தூண்டுபவர்.
* குழந்தை உளவியலில் ஈடுபாடு உடையவர்.
* பிள்ளைகளது செயற்பாடுகளை அவர்களது கண்மட்டத்துக்குக் காட்சிப்படுத்துவார்.
* யாவற்றுக்கும் முன்மாதிரியாகத் திகழுவார்.
* கற்றல் நிலையங்களை உருவாக்குவார்.
* மீளாக்கப் பொருட்களை கற்றல் உபகரணங்களாகப் பயன்படுத்தும் திறன்கொண்டவர்.
* தனி, குழுச் செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தி கலகலப்பாக வைத்திருப்பார்.
* பல்வகைச் சமூகங்களோடு தொடர்புகளை வைத்திருப்பார்.
* பெற்றோர்களை ஈர்த்து முன்பள்ளியை முன்மாதிரியாக வைத்திருப்பார்.
* பெற்றோர்கள்தான் வளங்களின் திறவுகோல் என்பதைப் புரிந்தவர்.
* முன்பள்ளி ஆசிரியர் அனைத்தையும் இணைக்கும் பாலம் போன்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோருடன் நல்லுறவைப் பேணுதல் அவசியம். அப்பொழுதுதான் நமது கற்றற் செயற்பாடுகள் வெற்றியுள்ளதாக அமையும்.

* பெற்றோரின் உதவியினாலேயே முன்பள்ளிகள் இயங்குகின்றன.
* பிள்ளைகளைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள் பெற்றோர்கள்தான்.
* பிள்ளைகள் முன்பள்ளியில் இருக்கும் நேரத்தைவிடவும் பெற்றோருடன்தான் அதிகம் இருப்பார்கள்.
* முன்பள்ளியின் முக்கிய பங்காளிகள் பெற்றோர்களே. அவர்களது ஒத்தாசையில்லாமல் முன்பள்ளிகள் இயங்க முடியாது.
* முன்பள்ளியில் எதேனும் வைபவங்கள் நடைபெறுவதாயின் பெற்றோரின் பங்களிப்பு அவசியம்.
* பிள்ளையின் உண்மைத்தன்மையை அறிந்தவர்கள் பெற்றோர்கள்தான்.
* பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களை அறிந்தவர்கள் பெற்றோர்.
* சூழலில் அல்லது வெளிப்புறங்களில் உதவிகளைப் பெறுவதற்கு பெற்றோரின் உதவி தேவை.
* அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் உதவி பெறுவதற்கு பெற்றோரின் உதவி தேவை.
* அடிக்கடி முன்பள்ளிகளைக் கவனிப்பதில் பெற்றோர் உதவுகிறார்கள்.
* முன்பள்ளியினை ஒழுங்குற நடாத்துவதற்கு பெற்றாரின் அங்கிகாரம் தேவை.

முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளிக் குழந்தைகளிடம் பின்வரும் பண்புகளை அவதானிக்கலாம். அவற்றை அறிந்திருந்தாற்தான் பிள்ளைகளோடு இணைந்து கற்றற் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

* விளையாட்டில் விருப்பம்
* வினாக்களை வினாவுதல்.
* ஒரே இடதத்தில் தொடர்ந்து இருக்காமை
* அன்பு, அரவணைப்பு, ஆதரவு, பாராட்டை விரும்புதல்.
* பாவனை செய்வதில் ஆர்வம்.
* சுதந்திரமாக இருப்பதையே விரும்புதல்
* மகிழ்ச்சியாகவும், ஆராய்வூக்கத்துடன் இருத்தல்.
* குறைந்த அவதானம். பிழை விடுவதையிட்டுக் கவலை கொள்ளாமை.
* சுறுசுறுப்பும், முதன்மை ஊக்கமும், நிறங்களில் நாட்டமும்.
* கட்டுப்பாடுகளை விரும்பாமை.
* குறும்பு செய்வதில் ஆர்வம்.
* உள்ளதை உள்ளபடி பார்த்தலும், கூறலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பாடவும், ஆடவும், விளையாட்டுப் பொருட்களில் ஆர்வமும்.
* எதையும் கையாண்டு பார்ப்பதில் ஆர்வம்.
* தொட்டளைந்து அறிவதில் ஆர்வம்.
* தண்டனையையும். வெறுத்தலையும் விரும்பாமை.
* ஏனையோர் தலையீட்டையும், கட்டுப்பாட்டையும் விரும்பாமை.

**ஆசிரியர்கள் பிள்ளைகளது கவனத்தைப் பெறுவதற்குச் சில வழிகள்:-**

- பிள்ளைகளைப் பெயர்கொண்டு அழையுங்கள்
- அன்பையும், ஆதரவையும் காட்டுங்கள்.
- எப்போதும் புன்னகையுடன் உரையாடுங்கள்.
- அவர்களது நல்ல விடயங்களைப் பாராட்டுங்கள்.
- பிள்ளைகளின் கருத்துக்களைச் செவிமடுங்கள்.
- அவர்களது விருப்பங்களை நிறைவேற்றுங்கள்.
- பிள்ளைகளின் உணர்ச்சிகளைப் புரிந்து மதித்து ஆதரவளியுங்கள்.
- மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்குங்கள்.
- பிள்ளைகளின் நம்பிக்கையைப் பெறுங்கள்.
- தவறிடும்போது தண்டிக்காமல் அன்பான சொற்களால் திருத்துங்கள்.
- பிள்ளையின் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள்.
- உடல்நலக்குறைவு ஏற்படும்போது தாயைப் போல் அரவணையுங்கள்.
- பிள்ளைகளின் தேவைகளை அறிந்து தீர்த்து வையுங்கள்.
- பிள்ளைகளின் விருப்புக்களை அறிந்து அதற்கேற்ப செயற்படுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலபிவிருத்தி

பிள்ளைகளின் வளர்ச்சி ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். அது பிள்ளைகளின் ஒரு படிமுறை வளர்ச்சியாக இருக்கும். சில பிள்ளைகள் இப்படிமுறை வளர்ச்சியில் இருந்து விலகிச் செல்வதுமுண்டு. அது ஒரு குறைபாடாகும்.. இதனை அவதானித்து ஏற்ற சிகிச்சை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எல்லாப் பிள்ளைகளிலும் வளர்ச்சிக் கோலத்தை அவதானிக்கலாம். இவ்வளர்ச்சி ஆளுக்காள் வேறுபடுகிறது. உடல் வளர்ச்சிக்கும் தசைநார் முதிர்ச்சிக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. குழந்தை பிறந்து கை கால்களை அசைக்கிறது. புரண்டு தவழ்கிறது. எழுந்து இருந்து, நின்று நடக்கிறது. ஓடுகிறது. இயக்கவிருத்தி திறனடையும்போது தசைநார்கள் வலுவடைகின்றன.

பிள்ளையின் உடல்வளர்ச்சி பற்றி ஆசிரியர் நன்கு அறிந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாளாந்த வேலைத்திட்டத்தை பருவத்துக்கு ஏற்றவாறு ஆசிரியர் திட்டமிடலாம். முன்பள்ளிப் பருவ காலம் மிகமுக்கியமானது. அப்பருவத்தில் பிள்ளைகள் வெறுமனே ஒரு இடத்தில் இருப்பதை விரும்பாது. பத்து நிமிடங்களே பொறுமையை இழக்கச் செய்யும். இதனை முன்பள்ளி ஆசிரியர்கள் உணர்ந்திருப்பார்கள். பிள்ளைகள் தமது சக்தியை வெளிக்காட்டப் பல்வேறு செயற்பாடுகள் தேவை. ஒரு செயற்பாடு முடிந்ததும் பிள்ளைகள் கைகளை வீசி, அசைந்து, ஓடியாடிப் பாடவும் ஈடுபடுத்தல் நல்லது. விளையாட்டோடு கூடிய செயற்பாடுகளைத் திட்டமிட்டுத் தயாரிக்க வேண்டும்.

இயக்க விருத்திகளை இருவகைப்படுத்தலாம்.

1. பேரியக்க விருத்தி
2. நுண்ணியக்க விருத்தி

## 1. பேரியக்க விருத்தி.

அசைதல், ஓடுதல், பாய்தல். வீசுதல், குனிதல், நிமிர்தல் போன்றன பிள்ளைகளின் இயல்பான செயற்பாடுகளாகும். இச்செயற்பாடுகளினால் பிள்ளைகளின் தலை, கை. கால், உடற்தசைநார்கள் உறுதியானதாக விருத்தியடைகின்றன. எல்லாத் தசைநார்களையும் இயக்கம் பெறச் செய்வதன் மூலம் பிள்ளையின் உடற்தேவைகளுக்கு ஏற்ப இயங்கும் தகைமையைப் பெறுகிறது. ஆதலால் பிள்ளையின் இளமைக் காலம் முக்கியமானது.

### 3 - 4 வயதினருக்கான பேரியக்க விருத்தி எதிர்பார்ப்புகள்.

- கால்களை மேலும் கீழும் முன்னும், பின்னும் மாற்றிமாற்றி அசைத்தல்.
- நடக்கும்போதும், ஓடும்போதும் கைகால்களின் அசைவுகளை இணைப்பாக்குதல்.
- பெரிய பலகையில் மேலும் கீழும் சமநிலை பேணி நடத்தல்.
- கால் விரல் நுனியால் நடத்தல்.
- வீசும் பொருளை இரு கைகளாலும் பிடித்தல்.

### 4 - 5 வயதினருக்கான பேரியக்க விருத்தி எதிர்பார்ப்புகள்.

- ஒற்றைக் காலில் நிற்பர்.
- ஒரு கோட்டில் சமநிலை பேணி நடத்தல்.
- இரு கால்களாலும் முன்னும் பின்னும் நடத்தல்.
- ஓடும் திசைகளை மாற்றி மாற்றி ஓடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாவனை செய்து ஓடுதல்நொண்டி அல்லது கெந்துதல் - போன்றன.

தசைநார்கள் விருத்தி யடைந்தால் எதனையும் திறமையுடன் கையாளும் வல்லமையைப் பெறலாம். உடலின் புலனுறுப்புக்களைக் கட்டுப் படுத்தி இயைபாக்கம் பெறலாம். முறைசார் கற்றற் செயற்பாடுகள் தொடங்குமுன் கண், காது, கை, கால், விரல். நாக்குப் பொன்ற உடல் உறுப்புக்களின் தசைநார்கள் விருத்தியுற வேண்டும்.. அப்பொழுதுதான் பேச்சு, வாசிப்பு, எழுத்துப் போன்ற முறையான கற்றல் திறன்கள் விருத்தி அடையும்.

## 2. நுண்ணியக்க விருத்தி.

### 3 - 4 வயதினருக்கான நுண்ணியக்க விருத்தி எதிர்பார்ப்புகள்.

- பெரிய வெண்கட்டியைத் தேர்ந்தெடுத்து கையினால் எடுத்தல்.
- தூரிகையைப் பிடித்து நிறந்தீட்டல்
- கடதாசித் துண்டுகளைக் கிழித்தல்.
- கத்தரிக் கோலைப் பயன்படுத்தல்.
- ஒரு வடிவத்தைப் பதித்து வரைதல்
- முழுமையடையாத படத்தை வரைந்து முடித்தல்.
- பல் துலக்கல்.
- சட்டைப்பொத்தான்களைப் பூட்டுதல், திறத்தல்.
- ஒரு கோப்பையைத் தூக்கிச் செல்லல். - போன்றன.

### 4 - 5 வயதினருக்கான நுண்ணியக்க விருத்தி எதிர்பார்ப்புகள்.

- களியினால் உருவம் செய்தல்
- துண்டுப் படங்களைப் பொருத்துதல்.
- வளைகோட்டின் ஊடாக வெட்டுதல்.
- இலகுவான படங்களை வரைதல் - வீடு, மரம், மனிதர் போன்றன.
- இலகுவான உருவங்களை வெட்டி ஒட்டுதல்.
- உடைகளை அணிதலும், களைதலும்.
- விரல்களை மடக்கி விரித்து எண்ணுதல்.
- பாதணிகளை அணிதல், கழற்றுதல்.
- சிறுசிறு உதவிகளை வீட்டில் செய்தல். போன்றவை.

இயக்க விருத்தியினைக் கட்டியெழுப்புவதற்கான வளங்களை ஆசிரியர் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

அனைத்து வேலைத் திட்டங்களும் ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறையைக் கொண்டுள்ளதாக அமைதல் வேண்டும். ஒரு பொருளை அல்லது ஒரு கருவை மையப்பொருளாகக் கொண்டு பாடங்கள் அமைந்திருக்கும். அவை யாவும் பிள்ளைகள் வழமைக்குத் திரும்புவதற்கான உதவிகளை வழங்கக் கூடிய வகையில் பல்வேறு செயற்பாடுகளாக வடிவமைக்கவும் வேண்டும்.. பின்னர் எளிமையான எழுத்துக்களை செயற்பாடுகள் ஊடாக அறிமுகம் செய்து அவற்றில் பரீட்சையம் ஏற்படவும், அவற்றை எழுதவும் வழிவகுக்கப்படும். அத்துடன் இச் செயற்பாடுகள் பிள்ளைகளின் உளநலத்தைக் கவனத்தில் கொண்டதாகவும் மகிழ்ச்சிகரமான சூழலில் தேவையான தேர்ச்சிகளை அடைவதற்கான சந்தர்ப்பங்களையும் வழங்க வேண்டும்.

பாடசாலை வருடத்தில் பொது விடுமுறைகளும், வேறு களியாட்டங்களும் வரலாம். ஆசிரியர் அதற்கேற்ப பாடத்திட்டங்களை பாடசாலை உள்ள நாட்களுக்கு மாற்றி அமைக்க வேண்டும். பிள்ளைகளும், அவர்களது ஆற்றலும் ஆளுக்காள் வேறுபடும். சிலவேளைகளில் பாடத்திட்டங்களை ஆசிரியரால் முடிக்காது போகலாம்.. சில பிள்ளைகள் விரைந்து பற்றிக் கொள்வார்கள். சிலரால் அப்படி முடியாது போகலாம். ஆசிரியர் மீண்டும் அதே பாடங்களைக் கற்பிக்கலாம். ஆனாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பிள்ளைகளின் கொள்ளளவுக்கேற்பப் பாடத்திட்டத்தை வழிநடத்திச் செல்ல வேண்டும். அதற்குக் கற்றல் நிலையங்கள் உதவும். விளையாட்டு அல்லாத விளையாட்டு என்ற புத்தகத்தைப் படியுங்கள். 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' நூலில் உடலபிவிருத்திக்கான செயற்பாடுகள் 57 உண்டு. இவற்றை ஒரு தவணைக்கு 19 செயற்பாடுகள் என்ற விகிதத்தில் பிள்ளைகளை ஈடுபடுத்தினால் நீங்கள் எதிர்பார்க்கும் அடைவுமட்டத்தைப் பிள்ளைகள் அடைவர். செயற்பாடுகள் அனைத்தையும் அந்நூலில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. அவற்றை விரிவு படுத்திக் கற்பிப்பது பயன்தருவதாகும். இவை யாவும் விளையாட்டின் ஊடாகவே கற்பிக்கப்படுவதால் பிள்ளைகள் விளையாடிக் கற்பர்.

| | 1 ஆம் தவணை: | 2 ஆம் தவணை: | 3 ஆம் தவணை: |
|---|---|---|---|
| 1 | நூல் முறுக்குவோம் | சுரங்கத்தின் ஊடே நடத்தல் | தேனீயும் குளவியும் |
| 2 | நிலம் கழுவுவோம் | கப்பல் ஆடுது | மீனும் மீன்பிடிகாரனும் |
| 3 | எழுந்து, பாய்ந்து இருத்தல் | தண்ணீர் வழங்குதல் | கடலில் திமிங்கலம் |
| 4 | உடலைச் சுருக்குதல் | தவழும் விரிப்பு | பிள்ளைகளும் வண்ணத்துப் பூச்சிகளும் |
| 5 | விறகு கொத்துவோம் | படகு ஓட்டுவோம் | சிலந்தியும் ஈயும் |
| 6 | நண்பர்கள் சேருதல் | மீன் நீந்துகிறது | பாயும் குழாய்கள் |
| 7 | தலைவனைப் பின்பற்றல் | கூடையினுள் பந்து | பல பக்கமும் திரும்பி நடத்தல். |
| 8 | காற்று, மரங்கள் ஆட்டுகிறது | கொடிகளுடன் ஓடுதல் | வீதியால் நடத்தல் |
| 9 | உறக்கத்திலிருந்து எழுதல் | பந்துபோல் உருளுதல் | பந்தை மேலே வைத்திருத்தல் |
| 10 | வண்ணத்துப் பூச்சி பிடித்தல் | கால்களினால் பேப்பர் பொறுக்கல் | ரயரை உருட்டுவோம் |
| 11 | அசைந்து நடத்தல் | காற்றூதிய பலூன் | பனிச் சறுக்கல் |
| 12 | சுறா பிடிப்போம் | சுரங்க வழி | விமானம் இறங்குதல் |
| 13 | மீன் அசைவு | சுரங்க வழி அமைப்போம் | கயிற்றுக்கு மேலால் பந்தடித்தல் |
| 14 | பாயும் தவளை | வானிலை அறிவோம் | பொதியினுள் மணல் நிரப்பல் |
| 15 | நெளிந்து அசையும் புழு | நிலை தளர்ந்து கீழே சரிதல் | சமநிலை பேணல் |
| 16 | பூனை எழுந்து நடக்கிறது | ஒரு பொருளை விழவிடாது பரிமாறல். | பந்தால் எறிந்து விழுத்துவது. |
| 17 | ஏதேனும் ஒன்றைத் தலையில் வைத்துச் சுமத்தல். | பாலத்தின் கீழ் நடத்தல் | பந்தைப் பாத்திரத்தினால் பிடித்தல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 18 மரக்குற்றி உருட்டல். | ஆடும் பொம்மை வீசுதல் | தலைக்கு மேலால் பந்து |
| 19 மரக்குற்றி உருட்டல் | இறப்பர் வளையம் | பந்தைக் காலால் உதைத்தல் கூடையினுள் பந்து போடல் |

ஆசிரியர்களின் தேவை கருதி மேற்காட்டிய பாட அலகுகளை எவ்வாறு தயாரிப்பதென்பதற்கு முதலாந்தவணையில் உள்ள முதலாம் பாடத்துக்குரிய செயற்பாட்டை உதாரணமாகத் தருகிறோம்.

## நாளுக்கான திட்டமிடல்

1. நூல் முறுக்குவோம்

| | |
|---|---|
| பாடப்பரப்பு | உடலபிவிருத்தி |
| செயற்பாடு | நூல் முறுக்குவோம் |
| நோக்கம் | ஆக்கச் செயற்பாட்டு அசைவுக்கு தசைநார்களைப் பயன்படுத்தல். |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல். |
| அளவு | 5 நிமிடங்கள் |
| கற்றல் சாதனங்கள் | நீளமான நூல் - காட்டுக் கொடிகள் - இல்லாமலும் செய்யலாம். நூல், நீண்ட தடித்த அட்டைகள் |
| செயல் முறை | 1. வகுப்பை வட்டமாக நிற்க விடுங்கள்.<br>• பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• சிலரைத் தங்களைப் பற்றிக் கூறச்சொல்லுங்கள். உங்களுக்கு என்ன நிறம் பிடிக்கும்? வீட்டில் என்ன செய்வீர்கள்? என்ன விளையாடுப் பிடிக்கும். போன்ற வினாக்களைக் கேட்டு உதவுங்கள்.<br>• பிள்ளையிடம் ஒரு பெயர் அட்டையைக் காட்டுக. ஒரு படத்தையும் பக்கத்தில் பெயரையும் காட்டுக. மாற்றி மாற்றிக் காட்டுக. பிள்ளைகளின் பெயர்களை அட்டையில் எழுதுக.<br>• ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லவும். அந்தப் பெயருள்ள அட்டையை எடுக்கச் சொல்லவும்.<br>• பெயருக்குப் பக்கத்தில் தங்கள் படத்தை வரையச் சொல்லுங்கள்.<br>• பெயரெழுதிய அட்டைகளை மேசையில் வைக்கச் சொல்லவும்.<br>2. ஆசிரியர் நூலை முறுக்குதல் போல் பாவனை செய்யச் சொல்லலாம். நூல் அறுந்து விட்டது என்று ஆசிரியர் கூறி கைகளை விரிக்கலாம். பிள்ளைகளைத் தொடர்ந்து செய்யச் சொல்லுங்கள்.<br>3. ஒரு அடி நீளமான பிறிஸ்டல் அட்டையை இரண்டாக மடிக்கவும். இரண்டு நுனியையும் சேர்த்துக் கொழுவும் விதத்தில் வெட்டவும். வெட்டிய பகுதிகளைச் சேர்த்துச் செருகவும். மடிப்பின் மத்தியில் நூலைச் செருகவும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கற்றல் விரிவாக்கல் | நூலின் நுனியைப் படித்தால் காற்றில் அது சுழலும். பிள்ளைகளைச் செய்யச் சொல்லுங்கள். சந்தோசமாகச் செய்வார்கள்.<br>பம்பரங்களைச் செய்து முறுக்கி விடலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |

இச்செயற்பாடு முடிவில் நூல் முறுக்குவதால் தசைநார் வலுவுறும். கை, கண் இசைவாக்கம் உறுதியடையும். விளக்கத்துக்கு ஏற்ப பிள்ளைகள் செய்யும்போது மகிழ்ச்சியும், தன்னார்வமும், தன்னம்பிக்கையும், மகிழ்ச்சியான கற்றலும் இடம்பெறும். இச்செயற்பாட்டில் உடலில் உள்ள தசைநார்கள் விருத்தியுறுவதற்கான வழிகள் உண்டு. அதேவேளை மொழியாற்றல் விருத்தியும் இடம்பெறும்.

மேலுள்ள நாளுக்கான திட்டமிடல் போன்று நாளாந்தம் ஆயத்தப்படுத்தல் வேண்டும். மேலதிக செயற்பாடுகளைச் சேர்த்துக் கொளவதும் ஆசிரியரது முயற்சியில் தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாற்றல் அபிவிருத்தி

1. மொழி விருத்தி
2. கணித விருத்தி
3. சூழலைப் புரிந்து கொள்ளல்.

அறிவாற்றல் அபிவிருத்தியில் மொழியும், கணிதமும். சூழலைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் விருத்தியுறும். முன்பள்ளிக் கல்வியில் எந்தச் செயற்பாட்டை எடுத்துக் கொண்டாலும் விளையாட்டு மூலமானதாகவே இருக்கும். முழுமையான விருத்தியினைக் கொண்டதாகவே இருக்கும்.. அறிவு விசாலமானது. அதனை இலகுவாக்கிப் பல பாடங்களாகப் படிக்கிறோம். எல்லாப் பாடங்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. மொழி, கணிதம். சூழல் என அனைத்தும் ஒருங்கிணைந்துள்ளன. அறிவாற்றல் அபிவிருத்தி சூழலுக்கு ஏற்ப விரிவடைகிறது.

## மொழி விருத்தி

**3 – 4 வயதினரின் அறிவாற்றல் விருத்திக்கு ஏதுவான எதிர்பார்ப்புக்கள்.**

- 600 – 900 சொற்களஞ்சியத்தை விளங்கிக் கொள்ளுதல்.
- விளையாடும் போது தனக்குத்தானே பேசிக்கொள்ளல்.
- தைரியம் வந்தபோது பேசுதல்.
- ஏன், எதற்கு, எப்படி, என்ன, எங்கே, யார் போன்ற வினாக்களுக்கு விடைகாணுதல்.
- தன் சூழலில் நடப்பவற்றை அவதானித்து விழிப்புணர்வு கொள்ளல்.
- மற்றப் பிள்ளைகளைப் பார்த்து, விளங்கி அதைப்போல் செய்வர்.
- தனிமையிலும், சேர்ந்தும் விளையாட விரும்புதல்.
- இசையோடு அசையவும், மகிழ்ச்சியோடு தாளம் போடவும் செய்தல்.
- பாடப்புத்தகம், கதைகள், பொம்மைகள். பாடல்களை விரும்புதல்.
- மணலாலும். களியாலும் உருவங்கள் செய்தல்.
- கால எல்லைகளை அறிதல்.
- நடந்த சம்பவங்களை ஒருவாறு ஊகித்துக் கூறுதல்.
- சிறு வசனங்களைப் பேசுதல்.
- உடல் அசைவுகளை தனக்கும். பொருளுக்கும் இடையில் பொருத்துதல்.
- கற்களால் நிலைக் குத்தாகக் கோபுரங்களைக் கட்டல்.
- காரண காரியம் அறிந்து செயற்படல்.
- மனதை ஒருமுகப்படுத்தல்.
- அடிப்படைச் சொற்களைப் பயன்படுத்தி தேவையானவற்றை விளக்குதல்.

**4 – 5 வயதினர்**

- 15 – 20 வரை எண்ணுதல். ஒன்றைவிட மூன்று அதிகம் என்பதை அறிதல்.
- முன் எழுத்துச் செயற்பாடுகளில் ஆர்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கீறல், கிறுக்கல், வரைதல். நிறந்தீட்டல், விரல் விளையாட்டுக்கள் செய்தல்.
- முன் வாசிப்பில் ஆர்வம். கதை புனைதல்.சம்பவங்களைக் கிரகித்துக் கூறுதல்.
- எழுத்துக்களைப் பற்றிக் கேட்டல். நிறங்களை அறிந்திருத்தல். நிறந்தீட்டல்.
- எண்களைப் பரிசோதித்தல்.
- தனது பெயர், பாடசாலை, ஊர்பெயர்களைத் தெரிந்திருத்தல்.
- எடுத்துக் கொண்ட முயற்சியை முடித்தலில் ஆர்வம்.
- பொருத்தமான கதைகளை விளங்கிக் கொள்ளல்.
- கதைப்பதிலும், சொற்களைப் பயன்படுத்துவதிலும் மகிழ்தல்.
- தனது சூழலை ஒருவாறு விளங்கிக் கொள்ளுதல்.
- குழுக்களாகச் செயற்படுதல்.

  மொழியின் விருத்தி அதன் தறன்களில் தங்கியுள்ளது. மொழித்திறன்கள் நான்கு உண்டு.

- கேட்டல்
- பேசுதல்
- வாசித்தல்
- எழுதுதல்.
- சிறார்களின் மொழி விருத்தி முக்கியமானது. அதற்கான திறன்களை திட்டமிட்டு வளர்க்கவேண்டும்
- பிள்ளைகளில் ஒரு ஒழுங்கான மொழி வளர்ச்சியை அண்ணளவாக அவதானிக்கலாம். ஆனால் அவை ஒரேவிதமாக அமைவதில்லை.
- பிள்ளைகளின் உடல், உள. சமூக, மனவெழுச்சிகள் மொழிவிருத்தியைப் பாதிக்கின்றன. அதற்கேற்ப பொருத்தமான மொழி விருத்திச் செயற்பாடுகளைக் கவனமாகத் திட்டமிட்டு வழங்க வேண்டும்.

மொழியில் எண்ணமும், எண்ணத்தில் மொழியும் இணைந்துள்ளன. மொழி இல்லாமல் சிந்தனை இல்லை. சிந்தனை இல்லாமல் மொழியும் இல்லை. தொடர்பாடவும், உண்மைத் தேவைகளை நிறைவு செய்யவும் மொழி உதவுகிறது. எண்ணம் அல்லது கருத்துப் பரிமாறித் தெளிவடைய மொழி அவசியம் தேவையாகிறது. மொழியாற்றல் உள்ளவர்கள் சமுதாயத்தில் மதிக்கப் படுவார்கள்.

**மொழி விருத்தியின் உன்னதத்துக்கு**: பிள்ளைகளின் தொடர்பாடல்கள் முக்கியமானவை பிள்ளைகள் சொல்வதைச் செவிமடுத்துக் கிரகித்து அவர்களுடன் உரையாடவேண்டும். பிள்ளைகள் நிறைவான தொடர்பாடல்களில் ஈடுபட்டவர்களாகவும், தங்களது எண்ணங்களையும், சிந்தனைகளையும் பகிர்ந்து கொள்பவர்களாகவும் இருக்கும் பொழுது அவர்களது மொழியாற்றல் விருத்தியுறும். அவர்கள் கேட்கும் வினாக்கள், விளக்கங்களைச் செவிமடுத்து அவர்களது சிந்தனையைத் தூண்டவேண்டும். அவர்களை அடக்கி யொடுக்கி வைத்திருந்தால் மொழிவிருத்தியேற்படாது. பதிலாக ஆசிரியர் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் மொழியை மட்டுமே பிள்ளை கற்றுக் கொள்ளும். ஆதலால் பிள்ளைகளை நன்றாகக் கதைப்பதற்கு உற்சாகப் படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லமதிரி மொழிப் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு நல்ல மாதிரி மொழிப்பயிற்சிகளை வழங்கி உற்சாகப் படுத்த வேண்டும். அவர்களது மொழிநடையை திருத்துவதென்பது அவர்களை விரக்திக்குள்ளாக்கும் செயலாக மாறிவிடக் கூடும். ஆசிரியர் பிள்ளைகளோடு அன்பாக நல்ல வகையில் பேசினால் அவர்கள் பின்பற்றிக் கொள்வார்கள். தட்டினால் விரக்தியும், தடவினால் உற்சாகமும் கொள்ளும் பிள்ளைகளை அவரவர் இயலுமையைப் புரிந்து கொண்டு உரையாட வேண்டும். பயம்காட்டும் முறையை முற்றாகவே புறந்தள்ளி, பயனுடைய வழிகளைப் பின்பற்றி அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்..

**வாசித்தலும் கதை கூறலும்.**

வாசித்தலும் கதைகூறலும் பிள்ளைகளது சொற்களஞ்சிய விருத்திக்கும் மொழியறிவு, சிந்தனை வளர்ச்சிக்கும், வித்திடும். அத்துடன் புதுப்புது எண்ணக்கருக்களின் துளிர்விடும் தன்மை நாளுக்கு நாள் விருத்தியுறும். செவிமடுத்தலையும், கிரகித்தலையும், வேண்டியபோது பயன்படுத்தும் ஆற்றலையும் வளர்க்கும். அத்துடன் கதை மாந்தர்களும், அவர்களது உரையாடல்களும் காட்சிகளும் எழுத்துக்களிடையே ஊர்ந்து செல்லும்.

## எழுத்துக்களை அடையாளம் காணுதல்

### எழுத்துக்களைக் கற்றல்

எழுத்துக்களைக் கற்பதற்கு நுண்தசைநார்ப் பயிற்சிகள் தேவை. பிள்ளைகளுக்கு எழுத்துக்களின் வடிவங்களை வரைவதற்கு நிறையப் பயிற்சிகள் அளிக்கவேண்டும். அதேவேளை அவற்றின் ஒலிகளையும் அறிய வேண்டும்..

**தசைநார்ப் பயிற்சியளித்தல் :**

நிறந்தீட்டல், வரைதல், வடிவங்களுக்கு நிறந்தீட்டல். எழுத்து வடிவங்களை வரைதல்

கைகளை வளைத்து வரைதல், விரல்களை மடக்கி எண்ணுதல், விரல்களால் எழுத்துக்கள் மேல் தேய்த்தல் அல்லது அழுத்துதல்.

சில எழுத்துக்கள் ஒரே மாதிரி வளைவுகளைக் கொண்டு தொடங்குதல், வடிவங்கள் ஒரே மாதிரயாக உள்ளனவா? என்று கேட்டல்.

காற்றில் பெரிதாக விரலால் எழுதப் பயிலல், மணலில் அல்லது களியில் தடியினால் எழுத்தை வரையச் செய்தல், எழுத்தை வரைந்து அதன்மேல் விதைகளை ஒட்டுதல் போன்ற பல செயற்பாடுகளைக் கொடுக்கலாம். (இப் பயிற்சிகளின் போது பிள்ளைகள் சரியான வடிவத்தில் எழுதுகிறார்களா என்று அவதானிக்க வேண்டும்.)

ஒரே வகையான அல்லது ஒத்த வடிவமுள்ள எழுத்துக்களையும் கோலங்களையும் வடிவங்களையும் உருவாக்கல்.: உ + ம் :

cccccc ddddddd lllllll wwwwww uuuuuu bbbbbb hhhhhh.

பபபபபப டடடடடட யயயயயய மமமமமம கககககக தததததத

ஒரு வசனத்தில் உள்ள முதல் எழுத்துக்களைச் சோடிப்பது விநோதமானது. வளைந்த புத்தகம், சின்னப்புத்தகம், பெயர்கள். அட்டவணைகளை சுவரில் எழுதும்போது முதல் எழுத்தை இவ்வாறு நிறந்தீட்டி அலங்கரித்துக் காட்சிப் படுத்தலாம்.

**வளைந்த புத்தகம் ,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாளை எடுத்து விரும்பியவாறு சதுரங்களாக ஒன்றன்மேல் ஒன்றாக மடிக்கவும். 5 அல்லது ஆறு பக்கங்கள் கொண்டதாக மடித்தெடுத்தால் வளைந்த புத்தகம் உருவாகிவிடும். இவ்வாறு வளைந்து செல்லும் புத்தகத்தை ஒவ்வொருவரையும் தயாரிக்கச் சொல்லுங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் படத்தையும் எழுத்தையும் வரையச் சொல்லுங்கள். இது 'ட' என்று எழுத வழிப்படுத்துங்கள். மாணவர்களுக்கு எழுதுவதில் சிரமம் இருப்பின் ஆசிரியர் உதவவேண்டும். பாடநூலைப் பார்த்து எழுதுவதாயினும் 'பார் மறை எழுது பரிசீலனை செய்' நுட்பத்தைப் பயன்படுத்த அனுமதியுங்கள்.



முடிவில் - ஒவ்வொரு மாணவனும் தமது புத்தகத்தைக் காட்டுவார். ஆசிரியர் பாராட்ட வேண்டும்.

களியில் செய்த எழுத்துக்கள் காய்ந்தபின் மாணவர்கள் விரலால் தடவி உணரச் செய்தல் எழுத்தின் வடிவத்தை மனதில் பதியச் செய்யும் செயலாகும். சரிந்த நிலத்தில் பந்தை அல்லது பளிங்கு மாபிளை உருளச்செய்யலாம்.

**(சாண்ட்) மண்பேப்பரில் எழுத்து வடிவங்களைச் செய்யலாம்.**

கால்களிலும், மேசை, வாங்கு போன்ற பொருட்கள் மீதும் விரல்களால் எழுத்துக்களை எழுத உற்சாகப்படுத்தலாம்.

**பார், மறை, எழுது, பரிசீலனை செய் - என்னும் வழிமுறை. ( LCWC )**

- இலகுவான ஐந்து சொற்களைத் தெரிவு செய்யுங்கள்., உ.ம். அம்மா, தம்பி, சிறுமி, நாய், வீடு.
- அவற்றைக் கரும்பலகை அல்லது அட்டையில் எழுதுங்கள்.
- ஒவ்வொரு சொல்லிலும் உள்ள முதல் எழுத்தைப் பாருங்கள்.
- அதனை எழுதுங்கள்.
- மாணவர்களுக்கு அந்த எழுத்துக்களை எவ்வாறு எழுதுவதென்று காட்டுங்கள்.
- காற்றில் விரலால் எழுதும்படி கூறுங்கள்.
- அவர்களது விரலால் கையில் அல்லது காலில் எழுதும்படி கூறுங்கள்.
- எழுத்துக்களைத் திரும்பவும் பாருங்கள். கரும்பலகையில் அல்லது அட்டையில் எழுத்தின் மேல் தேய்த்து எழுதும்படி பணியுங்கள்.
- அந்த எழுத்துக்களை மாணவர்களின் கொப்பிகளில் எழுதும்படி வழிப்படுத்துங்கள்.
- அட்டவணையைக் காட்டுங்கள். அல்லது அதனை பலகையில் தொங்கவிடுங்கள்.
- அந்த எழுத்துக்களை மறையுங்கள்.
- மாணவர்களை எழுதும்படி கூறுங்கள்
- இப்போது மறைத்த எழுத்தைத் திறவுங்கள்.

பொது நூலகம் உடுப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர் எழுதியது சரியா? எனப் பார்க்கச் சொல்லுங்கள்.
- சரியாக எழுதும்படி அறிவுறுத்துங்கள்.
- வகுப்பைச் சுற்றி வந்து உதவிசெய்யுங்கள்.



பார் - **Look**



மறை அல்லது அழி - **Cover or Erase**



அதனை எழுது - **Write**

எழுதியதைப் பரிசீலனை செய்: இது சரியா? - **Check**

இதனை LCWC என அழைப்பார்கள். பிள்ளைகள் விரைந்து எழுதப்பழகுவதற்கு இம்முறை மிகப் பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ட". எழுத்தை அறிமுகஞ் செய்தல்.

1. எழுத்தை எழுதிய அட்டையைக் காட்டுங்கள். இந்த எழுத்துக்கு ஒரு பெயர் உண்டு. அதற்கு ஒரு ஒலியும் உண்டு. யாரால் சொல்ல முடியும்? எனக் கேளுங்கள்.
2. தெளிவாக மூன்று முறை எழுத்தின் பெயரைச் சொல்லவும். எனது பெயர் டானா. மீண்டும் தெளிவாக மூன்று முறை எழுத்தின் பெயரைச் சொல்லவும். பிள்ளைகளை சொல்லும்படி கூறவைக்கவும்.
3. அந்த எழுத்தின் பெயரென்ன? பிள்ளைகளிடம் கேட்கவும்.
4. எழுத்தின் ஒலிவடிவத்தைச் சொல்லவும். "எனது ஒலி ட" தெளிவாக மூன்று முறை உரக்கச் சொல்லவும். பிள்ளைகளைக் கூறும்படி செய்யவும்.. ட..ட..ட கூறும்படி செய்யவும்..
5. "அந்த எழுத்தின் ஒலி என்ன? பிள்ளைகளிடம் கேளுங்கள்.
6. எழுத்தை எழுதிய அட்டையைக் காட்டுங்கள். "ட". "எனது பெயர் டானா: தெளிவாக மூன்று முறை எழுத்தின் பெயரைச் சொல்லவும்.
7. இந்த எழுத்தில் தொடங்கும் பெயருடையவர் யாரும் இருக்கிறார்களா? எழுந்து நில்லுங்கள்.
8. அந்த எழுத்தையுடைய ஒரு சொல்லைக் காட்டுக. அவற்றைக் கரும்பலகையில் எழுதுக. "குடம் படம்" அந்த எழுத்தைச் சுற்றி வட்டமிட்டுக் காட்டுக.
9. அந்த எழுத்துக்களைக் கொண்ட சொற்களை பிள்ளைகளிடம் கேளுங்கள் அவர்கள் சொல்ல அவற்றை எழுதுக
10. பிள்ளைகளை "ட" எழுத்தைச் சுற்றி வட்டமிடச் சொல்லவும்.
11. அந்த எழுத்து வரும் சொற்களைக் கொப்பியில் எழுதும்படி கூறவும்.

### எழுத்துக்களை அடையளம் காணல் - கரும்பலகை விளையாட்டு

1. கரும்பலகையில் வரிசையாக அல்லது வட்டத்தினுள் பின் வருவனவற்றை எழுதுக:

**"ட ப ப ட ட ட ப ட ப ட ப ட ட"**

2. ஒரு பிள்ளையை முன்னால் அழையுங்கள். அவரிடம் எங்கே "ட?" என்று கேளுங்கள். "ட". எழுத்துக்களைச் சுற்றி வட்டம் வரையச் சொல்லுங்கள்.
3. இன்னும் ஒரு பிள்ளையை அழையுங்கள். எங்கே இன்னொரு "ட"?' இருக்கிறது எனக் கேளுங்கள். அந்த "ட". எழுத்தைச் சுற்றி வட்டம் வரையச் சொல்லுங்கள்.
4. எல்லா "ட" எழுத்துக்கள் முடியும் வரை அச்செயற்பாட்டினைத் தொடர்க.

### காட்சி அட்டையில் எழுத்தைக் காணல் - தொலைநோக்கி

1. அட்டையில் எழுத்தைக் காட்டுங்கள்.
2. பிள்ளைகளின் கைகளைத் தங்களது தொலைநோக்கியாகப் பாவனை செய்யச் சொல்லுங்கள்.
3. அவர்களது வகுப்பறையில் எழுத்தைக் கண்டுபிடிக்கத் தூண்டுங்கள்.
4. அந்த எழுத்தைச் சொல்லி அதனை ஒலிக்கச் சொல்லுங்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**செய்தித் தாளில் எழுத்தைக் கண்டுபிடித்தல்.**

1. ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டு செய்தித்தாளைக் கொடுங்கள்.
2. அந்த எழுத்தைத் தங்கள் கைகளில் உள்ள செய்தித்தாளில் வட்டமிடச் சொல்லுங்கள்.

**செய்தித் தாளில் இருந்து எழுத்தை வெட்டி எடுத்தல்.**

1. ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டு செய்தித்தாளைக் கொடுங்கள்.
2. தங்கள் கைகளில் உள்ள செய்தித்தாளில் இருந்து அந்த எழுத்தை வெட்டி வெள்ளைத் தாளில் ஒட்டுங்கள்.

ல வ ழ ள ற ன

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர

ல வ ழ ள ற ன

**காட்சி அட்டை விளையாட்டு – எழுத்துக்களை இணைத்தல்**

1. பல்வேறு எழுத்துக்களை தரையில் பரத்துங்கள்.
2. ஒன்றோடு ஒன்று பொருந்தக் கூடிய இரண்டு அட்டைகளை எடுக்கச் சொல்லுங்கள். அந்த எழுத்தைச் சொல்லி அதனை ஒலிக்கச் சொல்லுங்கள்.
3. எழுத்துக்களை ஒவ்வொருவரும் கைகளில் எடுக்கும்வரை எல்லோருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கவும்.
4. எழுத்துக்களை மீண்டும் வைத்துவிட்டு விளையாட்டைத் தொடரவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காட்சி அட்டை விளையாட்டு - தலை கீழாக எழுத்துக்களை இணைத்தல்

1. 10 - 12 பல்வேறு எழுத்துக்களைத் தலை கீழாகத் தரையில் பரத்தவும்.
2. ஒரு பிள்ளையிடம் இரண்டு அட்டைகளைத் திருப்பும்படி கூறுங்கள். இரண்டும் ஒத்திருந்தால் அப்படியே வைக்கச் சொல்லுங்கள். அந்த எழுத்துக்களைச் சொல்லி அவற்றை ஒலிக்கச் சொல்லுங்கள்.
3. இரண்டு எழுத்துக்களும் ஒத்திருக்காது விட்டால் அதே இடத்தில் மீண்டும் அப்படியே வைக்கச் சொல்லுங்கள்.
4. எழுத்துக்களை ஒவ்வொருவரும் கைகளில் எடுக்கும்வரை எல்லோருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கவும். எழுத்துக்களை மீண்டும் வைத்துவிட்டு விளையாட்டைத் தொடரவிடுங்கள்.

### எழுத்துக்களை நோக்கி ஓடுங்கள்.

1. எழுத்து அட்டைகளைத் தடிகளில் விழாதபடி ஒட்டுங்கள். அவற்றை விளையாட்டுத் திடலில் நிறுத்தி வையுங்கள்.
2. குழுக்களாக்கி எழுத்தையும், அதன் ஒலியையும் சொல்லுங்கள். பிள்ளைகளை எழுத்தையும். அதன் ஒலியையும், சொல்லிக்கொண்டு எழுத்துக்களை நோக்கி ஓடி அவற்றின் பக்கத்தில் நிற்கச் சொல்லுங்கள்.

### எழுத்துக்களுடன் கொடி விளையாட்டு.

1. கொடிகள் செய்து அவற்றில் எழுத்துக்களை எழுதுங்கள்.
2. மூன்று வகை வித்தியாசமான எழுத்துக்ளை பாயில் பரப்பி வையுங்கள். அதே எழுத்துக்களை எழுதி ஒட்டிய 3 பேணிகளை ஒரு மூலையில் வைக்கவும்.
3. குழுக்களாக்கி, ஆசிரியர் சொல்லும் எழுத்தைப் பாயிலிருந்து பொறுக்கி உரிய எழுத்துள்ள பேணியினுள் போடச் சொல்லுங்கள்.
4. பிள்ளைகள் ஓடும்போது ஆசிரியர் சொன்ன எழுத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஓடி, எழுத்தை எடுக்கும்போதும், பேணியில் போடும் போதும் சொல்ல வேண்டும்.

### படங்கள் - விளையாட்டு

1. மூன்று வகையான எழுத்துக்களை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்களின் படங்களைப் பாயில் பரத்தி வையுங்கள்.
2. குழுக்களாக்கி, ஆசிரியர் சொல்லும் முதல் எழுத்தாகக் கொண்ட சொற்களின் படங்களை எடுக்கும்படி கூறுங்கள். ஒவ்வொருவரும் பங்கு கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

### ஒரு எழுத்தை முதலாகக் கொண்ட சொல்லின் படம்.

1. ஒரு எழுத்தை முதலாகக் கொண்ட சொல்லின் படத்தை வரையவும்.
2. ஆசிரியர் படத்தை வரைந்து அந்தப் படத்தின் கீழ் முதல் எழுத்தில் தொடங்கும் சொல்லையும் கீழே எழுத வேண்டும்.
3. எழுத்தை வரைந்து புத்தகத்தில் ஒட்டி அதற்குரிய சொல்லையும் எழுதவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தை எழுதி மணல் போடுதல்.

1. ஒரு எழுத்தை எழுதிய வெள்ளைத்தாள் துண்டைப் பிள்ளையிடம் கொடுங்கள்.
2. பிள்ளைகளிடம் அந்த எழுத்தின் மேல் பசையைப் பூசச் சொல்லுங்கள்.
3. அதன் மேல் மணலைத் தூவும்படி கூறுங்கள்.
4. பசை காய்ந்ததும் விரலால் எழுத்தை அழுத்தித் தேய்த்துப் பார்க்கச் சொல்லுங்கள்.

## எழுத்தை விதைகளால் எழுதுவோம்.

1. ஒரு எழுத்தை எழுதிய வெள்ளைத்தாள் துண்டைப் பிள்ளையிடம் கொடுங்கள்.
2. பிள்ளைகளிடம் அந்த எழுத்தின் மேல் பசையைப் பூசச் சொல்லி விதைகளை தூவும்படி கூறுங்கள்.
3. காய்ந்ததும் விரலால் எழுத்தை அழுத்தித் தேய்த்துப் பார்க்கச் சொல்லுங்கள்.

## எழுத்தை கயிற்றால் எழுதுவோம்.

1. ஒரு எழுத்தை எழுதிய வெள்ளைத்தாள் துண்டைப் பிள்ளையிடம் கொடுங்கள்.
2. பிள்ளைகளிடம் அந்த எழுத்தின் மேல் பசையைப் பூசச் சொல்லி கயிற்றுத்துண்டை அதன்மேல் வைத்து அழுத்தி விடும்படி கூறுங்கள்.
3. காய்ந்ததும் விரலால் எழுத்தை அழுத்தித் தேய்த்துப் பார்க்கச் சொல்லுங்கள்.

## எழுத்தைத் துளைகளால் எழுதுவோம்.

1. ஒரு எழுத்தை எழுதிய வெள்ளைத்தாள் துண்டைப் பிள்ளையிடம் கொடுங்கள்.
2. பிள்ளைகளிடம் பென்சில் கூரினால் எழுத்தின் மேல் துளைகளை இடுமாறு சொல்லுங்கள்.
3. விரலால் எழுத்தை அழுத்தித் தேய்த்துப் பார்க்கச் சொல்லுங்கள். பின் அதனை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கச் சொல்லுங்கள். அதனையிட்டு விளக்குங்கள்.

எழுத்தினுள் நடத்தல்.

1. நிலத்தில் பெரிதாய் எழுத்தை எழுதிவிடுங்கள். இரண்டு கோடுகளால் இடைவெளி விட்டு எழுதினால் நல்லது. மணலிலும் எழுதலாம். அல்லது வகுப்புத் தரையிலும் வெண்கட்டியால் எழுதலாம்.
2. பிள்ளைகளை அந்த எழுத்தில் அல்லது அதன் ஓரமாக நடக்க விடலாம்.

எழுதுதல்

**"ட" எழுத்தை எழுதும் படிமுறைகள்.**

தொடங்குமுன் இரண்டு விதிமுறைகளை எழுதுக.

1. "ட". எழுத்தைச் சொல்ல வேண்டும்.
2. பெரிய எழுத்துக்களில் எழுத வேண்டும்.
3. எழுதிக் கொண்டே விரலால் பதித்தவண்ணம் மேலிருந்து கீழாகவும் பின் நேராகவும் எனக் கூறிக் கொண்டே எழுத வேண்டும்.
4. மீண்டும் கூறிக் கொண்டு எழுதுக.
5. அவ்வாறே பிள்ளைகளைப் பின்பற்றுமாறு வழிப்படுத்துக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டு விரலைப் பயன்படுத்தி விரலால் பதித்தவண்ணம் மேலிருந்து கீழாகவும் பின் நேராகவும் எனக் கூறிக் கொண்டே எழுத வேண்டும். பலமுறை குறைந்தது "ட" 10 முறைகளாவது பெரிய எழுத்தில் எழுதவேண்டும். அதேபோல் குறைந்தது "ட" 10 முறைகளாவது சிறிய எழுத்தில் எழுதவேண்டும். புத்தகத்தில் அந்த எழுத்துக்களை பதிக்க வேண்டும்.

கண்களை மூடியபடி பிள்ளைகளைக் காற்றில் எழுதும்படி கூறவும். அதேபோல் கொப்பியிலும் எழுதும்படியும் கூறுங்கள். செய்வியுங்கள். பிள்ளைகளைச் சோடிகளாக்கி ஒருவர் முதுகில் மற்றவரை எழுதும்படி வற்புறுத்துங்கள். அவர்கள் எழுதும்பொழுது மற்றவரை அதை உணரும்படி வழிப்படுத்துங்கள். கைகளை நீட்டி தங்களது கொப்பிகளில் கோடுகளில் எழுதும்படி வழிப்படுத்தி, அதனை செவ்வை பாருங்கள்.

**எழுத்தை - மெழுகுவர்த்தியினால் எழுதுவது.**

1. தாளில் மெழுகுவர்தியினால் எழுதும்படி கூறுங்கள்.
2. அதன்மேல் நீர்வண்ணத்தால் நிறந்தீட்டுமபடி கூறுங்கள். எழுத்துக்களின்மேல் நிறம் படாது.
3. எழுத்துக்களைப் பாருங்கள்.

**கண்ணுக்குத் தெரியாத எழுத்து.**

1. செவ்வரத்தம் பூவை எடுத்து ஒரு வெள்ளைத் தாளில் தேய்க்கவும்.
2. தேசிக்காய்ச் சாற்றை ஒரு சிறு பாத்திரத்தில் எடுங்கள். வாழைத்தண்டு அல்லது ஈர்க்கிள் குச்சியைத் தோயுங்கள்.
3. அந்தத் தாளில் எழுதுங்கள். அழகான எழுத்துக்கள் தெரியும்.

**கதை கூறுதல்**

1. ஒரு சொல்லைத் தெரிந்து எடுங்கள். அந்தச் சொல்லை வைத்துக் கதை சொல்லுங்கள்.
2. பிள்ளைகளை அக்கதையினைக் கூறும்படி வழிப்படுத்துங்கள்.
3. அந்தக் கதையினை நடிக்க வழிப்படுத்துங்கள்.

மொழிக்கான செயற்பாடுகள் 25 உள்ளன. அவற்றை மூன்றாகப் பரித்து முதல் தவணைக்கு 10 செயற்பாடுகளைக் கற்பிக்கலாம். இரண்டாம் தவணையில் 10 செயற்பாடுகளைக் கற்பிக்கலாம். மூன்றாந் தவணையில் 5 செயற்பாடுகளும், ஏனைய பகுதிகளில் இருந்தும் செயற்பாடுகளைத் தெரிவு செய்து கொள்ளலாம். இதே போல் தேவையான செயற்பாடுகளை நீங்களும் தயாரித்து நடைமுறைப்படுத்தல் சிறந்ததாகும். இவற்றைத்தான் கற்பிக்கவேண்டும் என்றில்லை. திறமையான ஆசிரியர் தனது மாணவரின் விருப்புக்களை அறிந்து பல்வேறுவகைச் செயற்பாடுகளைச் செய்யலாம்.

| | 1 ஆம் தவணை: | 2 ஆம் தவணை: | 3ஆம் தவணை: |
|---|---|---|---|
| 01 | என்னைப் பற்றி விபரி | நான் துப்பறிபவர் | ஒருவரின் ஆக்கச் செயலைப் பின்பற்றில் |
| 02 | சந்தைக்குப் போவோம் | பாரம் தூக்கிச் செல்லல். | புத்தகம் உருவாக்கல். |
| 03 | படத்தைக் கண்டு பிடிப்போம் | யார் வருவது? | தேடலும் சொல்லுவதும் |
| 04 | கூடையில் வைத்திருப் பது என்ன? | சொல்வதை கவனிப்போம் | ஒரு சொல் கூறுதல். |
| 05 | படத்தை நினைவில் வைத்திருத்தல் | ஆறுபக்கப் பெட்டியின் கதை | முதல் நீங்கள் பின் நான் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 06 | படத் துண்டுகளைப் பொருத்திக் கதை உருவாக்கல் | எழுத்தட்டை உலா | என்னைப் பற்றி விபரி, மீட்டல் பயிற்சி |
| 07 | அது எதைப் போன்றது | பையுள் பந்துகள் | நான் துப்பறிபவர் மீட்டல் |
| 08 | எதிரொலி | இரவினில் முன்பள்ளி | மாயக்கல் - மீட்டல் |
| 09 | மாயக்கல் | கதையை உருவாக்கல் | எழுத்தட்டை உலாமீட்டல் |
| 10 | நூலைக் குலைத்தல் | எங்கள் தொலைபேசி | மதிப்பிடல் |

ஆசிரியர்களின் தேவை கருதி பாட அலகுகளை எவ்வாறு தயாரிப்பதென்பதற்கு முதலாந்தவணையில் உள்ள முதலாம் பாடத்துக்குரிய 'என்னைப் பற்றி விபரி' செயற்பாட்டை உதாரணமாகத் தருகிறோம்.

**நாளுக்கான திட்டமிடல்**

| பாடப்பரப்பு | தமிழ் மொழி |
|---|---|
| செயற்பாடு | என்னைப் பற்றி விபரி |
| நோக்கம் | வாய் மொழி மூலம் சொல்லுதலுக்கும் கேட்டலுக்கும் பயிற்சியளித்தல் |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல். |
| அளவு | 5 – 10 நிமிடங்கள். |
| கற்றல் சாதனங்கள் | பிறிஸ்ரல் போட், இல்லாமலும் செய்யலாம், நூல், நீண்ட தடித்த அட்டைகள். |
| செயல் முறை | 1. வகுப்பை வட்டமாக நிற்க விடுங்கள்.<br>• பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• வரவேற்புப் பாடலைப் பாடுங்கள்.<br>• சிலரைத் தங்களைப் பற்றிக் கூறச்சொல்லுங்கள். உங்களுக்கு என்ன நிறம் பிடிக்கும்? வீட்டில் என்ன செய்வீர்கள்? என்ன விளையாடப் பிடிக்கும். போன்ற வினாக்களைக் கேட்டு உதவுங்கள்.<br>• பிள்ளையிடம் ஒரு பெயர் அட்டையைக் காட்டுக. ஒரு படத்தையும் பக்கத்தில் பெயரையும் காட்டுக. மாற்றி மாற்றிக் காட்டுக. பிள்ளைகளின் பெயர்களை அட்டையில் எழுதுக.<br>• ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லவும். அந்தப் பெயருள்ள அட்டையை எடுக்கச் சொல்லவும்.<br>• பெயருக்குப் பக்கத்தில் தங்கள் படத்தை வரையச் சொல்லுங்கள்.<br>• பெயரெழுதிய அட்டைகளை மேசையில் வைக்கச் சொல்லவும்.<br>• பிள்ளைகளை வட்டமாக நிற்கச்சொல்லுங்கள். ஆசிரியர் செய்வதுபோல் செய்யச் சொல்லுங்கள். பின் வருமாறு அறிவுறுத்துங்கள்.<br>• கைகளை உயர்த்துங்கள். கூரைவரை உயர்த்துங்கள். கைகளைத் தட்டுங்கள். விரல்களை மூடி விரியுங்கள் போன்றன. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | • கைகளை, விரல்களை, பெருவிரலை பதிக்கச் சொல்லுங்கள். பல்வேறு உருவங்களைப் பதிப்பியுங்கள்.<br>• ஒரு பிள்ளையைத் தனது கைகளால் பல்வேறு உருவங்களாகப் பிடிக்கச் சொல்லுங்கள். அதனைப் பார்த்து மற்றவர்களை வரையச் சொல்லுங்கள்.<br>• பிள்ளைகளை இருக்கச் சொல்லுங்கள். பேப்பரில் கைகளை வைத்து வரையச் சொல்லுங்கள். அதற்கு நிறந்தீட்டச் சொல்லுங்கள்.<br>• பெயரை எழுதச் சொல்லுங்கள். வரைந்த உருவத்தை வெட்டியெடுக்க உதவுங்கள்.<br>• இலைகளற்ற கிளையில் பெயர்களை ஒட்ட வழிப்படுத்துங்கள்.<br>மணலுள்ள பேசினுள் கிளையை ஊன்றிவிடுங்கள். கைமரம் காட்சியாகும். |
| கற்றல் விரிவாக்கல் | முன்பள்ளியில் உள்ள பொருட்களைக் காட்டி அவை பற்றிக் கூறும்படி கேட்கலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |

**வரவேற்கிறோம் - பாடல்**



வருக வருக என்று நாங்கள்
வரவேற்கிறோம் - உன்னை
வரவேற்கிறோம்.

வந்து சேர்ந்து பாடியாட
வரவேற்கிறோம் - நாங்கள்
வரவேற்கிறோம்



அன்பான எங்கள் செல்வம்
அறிவாயா நீ - இதை அறிவாயா நீ
இன்பம் பொங்க முறுவல் காட்டி
இங்கோடி வா - நீ
எழுந்தோடி வா

உன்னை நம்பி உலகம் இருக்கு
உணர்வாயா நீ – தங்காய்
உணர்வாயா நீ
உணர்ந்து கொண்டு உயரவேண்டும்
ஓடோடி வா – கற்போம்
ஓடோடி வா

வந்து சேர்ந்து பாடியாட
வரவேற்கிறோம் - நாங்கள்
வரவேற்கிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித அபிவிருத்தி

முன் பள்ளிக்கு வரும் பிள்ளைகள் சிறிதளவு கணித ஆற்றலோடுதான் வருகிறார்கள். அவர்களிடம் உள்ள அந்த ஆற்றலை விருத்தியுறச் செய்வதற்கான செயற்பாடுகளை ஆசிரியர்கள் வழங்கி வழிகாட்ட வேண்டும். அச்செயற்பாடுகள் அவர்களது ஆற்றலை வளர்தெடுப்பதற்கு வித்தாக அமையவேண்டும். அச்செயற்பாடுகள் பின்வருவனவற்றைக் கொண்டமைதல் வேண்டும்.

- இனங்காணல்
  - (i) தெரிதல்.
  - (ii) வகைப்படுத்தல்.
- வரிசைப்படுத்தல்..
- ஒன்றுக்கு ஒன்றான தொடர்பு.
- சமச்சீர்.
- அயல் - வித்தியாசங்களை அறிதல்.
- மாறின்மை - அளவு முறைகளை அறிதல்.
- அளத்தல்.
- பரப்பளவு.
- கனவளவு.
- காலம்.
- முழுவதும் அரைவாசியும்.
- கோலங்கள்.
- புதிர் விளையாட்டு.
- பணம்.
- எண்கள் - இலக்கங்களை அறிதல் அவற்றின் பெறுமானங்களை அறிதல்
- இலக்கங்களைக் குறிக்கும் அடையாளங்களை எழுதுதல்.

கணித எண்ணக்கரு விருத்தியில் வகைப்படுத்தல் அல்லது பிரித்தறிகை முக்கியமானது. பிள்ளைகளின் ஆற்றலுக்கு ஏற்ப பிரித்தறியும் செயற்பாடுகளை வழங்க வேண்டும். கணிதம் எண்களோடு தொடர்புடையது. கணிதம் கற்பதென்பது இலக்கங்களைக் கற்பது என்றொரு காலம் இருந்தது. இன்று முன்பள்ளிப் பருவத்தில் மேலெழுந்த வாரியாக இணைப்புறு செயல்வடிவங்களைக் கற்க உதவுகிறது. பார்த்து, கேட்டு, தொட்டளைந்து உறுதிப்படுத்துவர். தொடர்பு படுத்தல், வரிசைப்படுத்தல், அயல் அல்லது பக்கம் வித்தியாசங்களை அறிதல், பெரியது சிறியது, நீளமானது, கட்டையானது, போன்ற முக்கிய எண்ணக் கருக்களின் பின்னர்தான் இலக்கங்களைக் கற்பிக்க வேண்டும்.

முன்பள்ளிக் கற்றல் ஒரு தலைப்பின் கீழ் பல பாடங்களோடு ஒன்றிணைந்த உட்பொருளைக் கொண்டது. கணிதத்தை எந்நேரமும் எப்பொழுதும் ஒன்றிணைந்த கற்றலில் சேர்த்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பிள்ளையினதும் கணித அறிவாற்றல் விருத்தியினை மதிப்பிடுவதற்கு மிக அவதானம் தேவை. பிள்ளைகளது திறன்களை இனங்காண வேண்டும். ஒழுங்கான முறையில் பதிவேடுகளைப் பேணவும் வேண்டும்.

சிறார்கள் செய்து அறிதல் மூலம் அனுபவமாக்குகிறார்கள். தேடல்மூலமும், விரிவாக்கல் மூலமும் கணித அறிவாற்றல் திறனைக் கற்கிறார்கள். இயற்கைப் பொருட்களின் உருவமைப்பு, ஒப்பீடு, தெரிதல், பிரித்தறிதல், வகைப்படுத்தல் போன்றவற்றோடு சிப்பி, சிரட்டை, மரம், பிளாஸ்ரிக் துண்டங்கள். போன்ற பொருட்களோடு விளையாடும் போது. மணல். தண்ணீர் போன்ற பலவகை விளையாட்டின்போதும், கணித அறிவுத்திறனை விருத்தி செய்யலாம். இவ்வாறு செய்யும்போது கணித அறிவாற்றலைப் பெறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணித எண்ணக்கரு விருத்திக்குப் பொருத்தமான வழிகாட்டற் செயற்பாடுகள்.**

| இல | வயது 3 - 4 | வயது 4 - 5 |
|---|---|---|
| 01 | இனங்காணல் பழக்கமான பொருட்களை இனங்காண சந்தர்ப்பம் வழங்குதல். | வகை, நிறம், வடிவம். பண்பு, சிறிய, பெரிய, கூட,குறைய என்பன போன்ற எண்ணக்கருக்களுக்கான அனுபவங்களைப் பெற சந்தர்பங்களை வழங்குதல். |
| 02 | தெரிதல் தன்னிச்சையாக விளையாடி அனுபவம் பெறச் சந்தர்ப்பம் வழங்குதல்.<br>வகை – தோடம்பழம். மாம்பழம்<br>வடிவம் - வித்தியாசமான வடிவமுடைய வெவ்வேறு இலைகள்.<br>நிறம் - இரண்டு வகை நிறப் பூக்கள்.<br>அளவு – பெரிய, சிறிய, இரண்டு போத்தல்கள்.<br>பண்பு –பிளாஸ்ரிக். மரம், உலோக விளையாட்டுப் பொருட்கள். | வடிவம், வகை. நிறம், அளவு,பண்பு என்பவற்றை அறியச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும்<br><br>ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது மூன்று பொருட்களை உள்ளடக்க வேண்டும். |
| 03 | வகைப்படுத்தல்<br>இயல்பில் வேறுபடும் இரண்டு தொகுதிப் பொருட்களை வகை, வடிவம், நிறம் அளவு, பண்புக்கேற்ப வேறுபடுத்த சந்தர்ப்பம் அளித்தல். | வகை, வடிவம், நிறம், அளவு, பண்புக்கேற்ப மூன்று பொருட்கள் கொண்ட இரண்டு தொகுதிகள்.<br><br>மூன்று பொருட்கள் கொண்ட மூன்று தொகுதிகளை வகைப்படுத்த சந்தர்ப்பம் அளித்தல். |
| 04 | வரிசைப்படுத்தல்.மூன்று பொருட்களை ஒழுங்குபடுத்தசந்தர்ப்பம் வழங்கல்.<br>உதாரணம் : மூன்று வெவ்வேறு உயரமான பொம்மைகளைப் பயன்படுத்தலாம் | மூன்று பொருட்களை வரிசைப்படுத்த வழிப்படுத்தல் |

விளையாட்டு அல்லாத விளையாட்டு நூலில் 69 பயிற்சிகள் உள்ளன. ஒரு தவணைக்கு 23 பயிற்சிகள் வீதம் கற்பிக்கலாம். ஒவ்வொரு பயிற்சியையும் ஒழுங்குபடுத்தி விளையாட்டுச் செயற்பாடுகளாக்கிக் கற்பிக்க வழிப்படுத்த வேண்டும்.

| | 1 ஆம் தவணை: | 2 ஆம் தவணை: | 3 ஆம் தவணை: |
|---|---|---|---|
| 1 | தட்டுக்களை ஒழுங்காக வைப்போம் | ஒத்த உருவத்தைக் கண்டு பந்துகளை பிடித்தல் | இலக்கங்களுக்கு ஏற்பப் பந்துகளை வைத்தல். |
| 2 | சிறிய ஆட்டுக்கு நான்கு கால்கள். | கொஞ்சமும் அதிகமும் | மேளகாரர். |
| 3 | வெற்றிடத்தை நிரப்புவோம் | செய்வதுபோல் செய்வோம் | தட்டுக்களும் பேப்பர் கிளிப் தொங்கவிடல். |
| 4 | ஒரே மாதிரியும் வித்தியாசமும் | கடதாசிச் சங்கிலி | மீன் சங்கிலி |
| 5 | அண்மையிலும் தூரத்திலும் | உருவங்களின் வடிவங்கள் | முழுவதும் அரைவாசியும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 6 | தட்டுக்களை ஒழுங்காக வைப்போம் | உருவங்களை வேட்டை யாடுவோம் | இந்த இலக்கம் யாரிடம் உண்டு. |
| 7 | விளையாட்டுப் பொருட் தொகுதி | சரியான விடைக்குக் குரைக்கும் நாய் | எந்த எண்ணைக் காண வில்லை. |
| 8 | என்ன நிறம் | உருவங்களை அளத்தல் | சங்கீத எண்கள் |
| 9 | சோடி சேர்த்தல் | அளவைக் கண்டு பிடித்தல் | என்ன புத்தகம். |
| 10 | காணாமல் போகும் உருவம் | எவ்வளவு நீர் உள்ளது | பாத்திரங்களை ஒழுங்கில் வைத்தல் |
| 11 | ஒவ்வொருவருக்கும் ஒரு கல் | அயலவனைக் காணல் | இலக்கப் பலகை |
| 12 | விழும் கோல் | புள்ளியிட்ட அட்டைகள். | தாயக்கட்டை |
| 13 | ஒரே வடிவத்தை உடைய பொருளைக் கண்டு பிடித்தல். | விரைவாக கண்டுபிடித்தல். | பொருட்களைக் கண்டு பிடித்தல். |
| 14 | உருவங்களை ஆக்குதல் | எண்ணிக்கையை அறிதல் | விரைவாக கூட்டல் |
| 15 | போத்தல்களும் மூடிகளும் | அடுத்து வரும் உரு எது? | இலக்கு |
| 16 | பாரமற்றதும் பாரமுள்ளதும் | சுற்றி ஓடுதல் | பெட்டிக்குள் கீழே என்ன உள்ளது. |
| 17 | எமது கைகளை ஒப்பிடுவோம் | இலக்கங்களைப் பொருத்துதல் | பெருவிரல் அடையாள இலக்கம் |
| 18 | உயரமும் கட்டையும் | இலக்கங்களைப் பொருத்தமான இலக்கங்களை மேல் வைத்தல் | இலக்கு வை. |
| 19 | உயரம் | எண் பாய்ச்சல் | இலக்கம் படிப்போம் |
| 20 | நீளம் | சுற்றி ஓடுதல் | கைதிகள் |
| 21 | சமநிலை விளையாட்டு | பொருட்களை எண்ணுதல் | வீட்டுக்குள் செல்வோம் |
| 22 | சமநிலை விளையாட்டு | இலக்க அட்டையைத் தெரிதல் | இரண்டு கைகள் |
| 23 | உருவ நடை | சோடிகளைப் பொருத்த மாக்குதல் | எண் கழுத்து மாலை - பாம்புகளை அளப்போம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கான திட்டமிடல்

| | |
|---|---|
| பாடப்பரப்பு | **கணித எண்ணக்கரு விருத்தி** |
| செயற்பாடு | அளவுகளின் வித்தியாசங்களை ஒப்பிடுவோம். |
| நோக்கம் | வாய் மொழி மூலம் சொல்லுதலுக்கும் கேட்டலுக்கும் பயிற்சியளித்தலுடன் அளவின் வித்தியாசங்களை அறிதல். |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல். |
| அளவு | 5 – 10 நிமிடங்கள் |
| கற்றல் சாதனங்கள் | பென்சில், நிறச்சோக், பிறிஸ்ரல் போட், நிறத்தாள், நூல், நீண்ட தடித்த அட்டைகள், பசை கத்தரிக்கோல் போன்றன |
| செயல் முறை | 1. வகுப்பை வட்டமாக நிற்க விடுங்கள்.<br>• பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• வரவேற்புப் பாடலைப் பாடுங்கள்.<br>• சிலரைத் தங்களைப் பற்றிக் கூறச்சொல்லுங்கள். உங்களுக்கு என்ன நிறம் பிடிக்கும்? வீட்டில் என்ன செய்வீர்கள்? என்ன விளையாடப் பிடிக்கும். போன்ற வினாக்களைக் கேட்டு உதவுங்கள்.<br>• பிள்ளையிடம் ஒரு பெயர் அட்டையைக் காட்டுக. ஒரு படத்தையும் பக்கத்தில் பெயரையும் காட்டுக. மாற்றி மாற்றிக் காட்டுக. பிள்ளைகளின் பெயர்களை அட்டையில் எழுதுக.<br>• ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லவும். அந்தப் பெயருள்ள அட்டையை எடுக்கச் சொல்லவும்.<br>• பெயருக்குப் பக்கத்தில் தங்கள் படத்தை வரையச் சொல்லுங்கள்.<br>• பெயரெழுதிய அட்டைகளை மேசையில் வைக்கச் சொல்லவும்.<br>• பிள்ளைகளை வட்டமாக நிற்கச்சொல்லுங்கள். ஆசிரியர் சொல்கிறார். விளையாட்டைச் செய்வியுங்கள். ஆசிரியர் செய்வதுபோல் செய்யச் சொல்லுங்கள். பின் வருமாறு அறிவுறுத்துங்கள்.<br>• ஆசிரியர் சொல்கிறார் ‘கைகளை உயர்த்துங்கள். கூரைவரை உயர்த்துங்கள். கைகளைத் தட்டுங்கள். விரல்களை மூடி விரியுங்கள் போன்றன. நான் சொல்கிறேன்: இருங்கள்..<br>• கைகளை, விரல்களை, பெருவிரலை பதிக்கச் சொல்லுங்கள். பல்வேறு உருவங்களைப் பதிப்பியுங்கள்.<br>• பிள்ளைகளை இருக்கச் சொல்லுங்கள். பேப்பரில் கைகளை வைத்து வரையச் சொல்லுங்கள். அதற்கு நிறந்தீட்டச் சொல்லுங்கள்.<br>• பெயரை எழுதச் சொல்லுங்கள். வரைந்த உருவத்தை வெட்டியெடுக்க உதவுங்கள்.<br>• பெரியது சிறியது காட்டச் சொல்லுங்கள்.<br>• இலைகளற்ற கிளையில் பெயர்களை ஒட்ட வழிப்படுத்துங்கள்.மணலுள்ள பேசினுள் கிளையை ஊன்றிவிடுங்கள். கைமரம் காட்சியாகும். |
| கற்றல் விரிவாக்கல் | முன்பள்ளியில் உள்ள பொருட்களைக் காட்டி அவை பற்றிக் கூறும்படி கேட்கலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறார்களுக்குத் தர்க்க ரீதியாகச் சிந்திப்பதற்கு தேவையான திறன்கள்.**

அவதானிப்புத் திறன்கள் - இருபரிமாண, முப்பரிமாணப் பொருட்களைக் கவனமாகப் பார்ப்பதற்கு வழிப்படுத்த வேண்டும்.

வகைப்படுத்தும் திறன்கள். – மாற்றமில்லாதிருக்கும் அளவீட்டுக்கு ஏற்ப வகைப்படுத்து - வதற்குப் பிள்ளைகளுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். வகைப்படுத்தல் செய்யும் வகைகளைத் தாமே தீர்மானம் செய்யும் விதத்தில் பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும். கணிதம் என்பது தொடர்புகளைக் கற்பிக்கும் பாடமாகும். பொருட்கள் தொடர்பு பட்டிருப்பது எவ்வாறு என்பதைப் பிள்ளைகள் விளங்கிக் கொள்ள வேண்டும். குடும்பத் தொடர்புகள், சகோதரர்கள், சகோதரிகள், தாய் தந்தை மாமி, மாமா எவ்வாறு உறவு முறையில் தொடர்பு கொண்டுள்ளார்கள். போல் எண்ணிக்கையிலும் தொடர்பு உண்டு என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தரப்படுத்தல் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுமுகமாக பிள்ளைகளுக்குத் தேவையான அனுபவங்களை வழங்க வேண்டும்.

பொருட்களை ஒழுங்கு முறையாக வைப்பதற்குச் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். பெரிய, அதைவிடப் பெரிய போன்ற பொருத்தமான சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்த எற்சாகப் படுத்த வேண்டும்.

பொருட்களோடு பிள்ளைகள் விளையாடும்போது ஒப்புமை செய்யும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும். பெரிய, சிறிய பொருட்களை ஒப்பிட்டுப்பார்த்தல்.

ஒழுங்கு முறையாக வைக்கப்பட்ட பொருட்களின் கூட்டத்தைக் கலைத்து அதனை மீண்டும் ஒழுங்காக வைக்குந்திறனை வளர்க்க வேண்டும்.

**கணித எண்ணக்கரு விருத்திக்குப் பொருத்தமான வழிகாட்டற் செயற்பாடுகள் வழங்கி அனுபவமாக்கலாம்.**

| இல | தலைப்பு | வழங்கப்படவேண்டிய பொருட்கள் |
|---|---|---|
| 01 | இருவகைப் பொருட்களை வேறுபடுத்தல் | வெற்றுத் தீப்பெட்டி, மூடிகள்<br>இலை, பூ |
| 02 | ஒரு வகையில் மட்டும் வேறுபடும் இரு வகைப் பொருட்களை வேறுபடுத்தல்.<br>நிற அடிப்படையில்<br>வடிவத்தின் அடிப்படையில் | மஞ்சள் பூ, சிவப்பு பூ, செம்மஞ்சள் தோடம்பழம்,<br>பச்சைத் தோடம்பழம்,<br>மாவிலை, பூவரசமிலை |
| 03 | பெரிது, சிறிது என்பதை இனங்காணல் | பெரிய, சிறிய பொம்மைகள் இரண்டு |
| 04 | கூட, குறைய என்பதை இனங்காணல் | பாரம் கூடிய பொதி 1, பாரம் குறைந்த பொதி 1. |
| 05 | அமைவிடத்தைக் கூறுதல்<br>கிட்ட, தூர<br>முன், பின்<br>மேல், கீழ் | பொருத்தமான இரு பொருட்கள். |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஒருங்கிணைந்த அணுகுமுறையில் குறித்த ஒரு தலைப்பின் ஊடாக விருத்தி செய்யக்கூடிய கணித எண்ணக்கருக்கள்.**

| இல | தலைப்பு | வழங்கப்படவேண்டிய பொருட்கள் |
|---|---|---|
| 01 | விளையாட்டுச் சந்தை | தெரிதல் (வகை, நிறம், வடிவம், தன்மை)<br>இனங்காணல் (பெரிது, சிறிய, கூட, குறைய, முழுமை, பாதி)<br>அடங்கல்<br>ஒன்று - ஒன்று ஒத்திருக்கை<br>மாறின்மை<br>தொடர்பு<br>அயல்<br>வரிசைப்படுத்தல்<br>கோலங்கள்<br>நிறை, நீளம் (கூட, குறைய)<br>பணம் (அறிமுகம்)<br>எண்ணுதல் எண் குறியீடு இனங்காணல். |

**முன்பள்ளிச் சிறார்களுக்கு ஏற்றவகையில் கணித எண்ணக்கருக்களை வழங்குவதற்கான விளையாட்டுக்களையும், செயற்பாடுகளையும் ஒழுங்கு படுத்தல்.**

| இல | வயது 3 - 4 | வயது 4 - 5 |
|---|---|---|
| 01.1 | இனங்காணல்<br><br>பழக்கமான பொருட்களை இனங்காணல் | வகை, நிறம், வடிவம், பண்பு, சிறிய, பெரிய, கூட, குறைய என்பன போன்ற எண்ணக்கருக்களுக்கான அனுபவங்களைப் பெற சந்தர்ப்பங்களை வழங்குதல். |
| 01.2 | தெரிதல்<br>தன்னிச்சையாக விளையாடி அனுபவம் பெற சந்தர்ப்பம் வழங்குதல்<br>வகை - தோடம்பழம், மாம்பழம்<br>வடிவம் - வித்தியாசமான வடிவமுடைய வெவ்வேறு இலைகள்.<br><br>நிறம் - இரண்டு வகை நிறப் பூக்கள்.<br>அளவு - பெரிய, சிறிய இரண்டு போத்தல்கள்.<br>பண்பு - பிளாஸ்டிக் மரம், உலோக விளையாட்டுப் பொருட்கள். | வடிவம், வகை, நிறம், அளவு, பண்பு, என்பவற்றை அறியச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.<br><br>ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது மூன்று பொருட்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| 01.3 | வகைப்படுத்தல்<br>இயல்பில் வேறுபடும் இரண்டு தொகுதிப் பொருட்களை வகை, வடிவம், நிறம் அளவு, பண்புக்கேற்ப வேறுபடுத்த சந்தர்ப்பம் அளித்தல். | வகை, வடிவம், நிறம், அளவு, பண்புக்கேற்ப மூன்று பொருட்கள் கொண்ட இரண்டு தொகுதிகள்.<br><br>மூன்று பொருட்கள் கொண்ட மூன்று தொகுதிகளை வகைப்படுத்த சந்தர்ப்பம் அளித்தல். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 02 | வரிசைப்படுத்தல்.மூன்று பொருட்களை ஒழுங்கு படுத்த சந்தர்ப்பம் வழங்கல். உதாரணம் : மூன்று வெவ்வேறு அளவிலான (உயரமான) பொம்மை - களைப் பயன்படுத்தலாம் | மூன்று பொருட்களை வரிசைப்படுத்த வழிப்படுத்தல் |
| 03 | ஒன்று ஒன்றுக்கான தொடர்பு: உதாரணம் : போத்தல் - மூடி சப்பாத்து – காலுறை – போன்ற பொருட்களை வழங்கி தொடர்பு எனும் எண்ணக்கருவிற்கான அனுபவம் பெறும் சந்தர்ப்பம் வழங்கல். | எண்ணிக்கைக்கு ஏற்ப தொடர்பு படுத்தல். ஒன்று ஒன்றுக்கான ஒத்திகையை அறிய வழிப்படுத்தல். |
| 04 | சமச்சீர் - ஒருமுறை மடித்துச் சமச்சீர் பெறக்கூடிய தள உருவங்கள், வடிவங்கள் வழங்கி அவற்றை மடித்து விளையாடச் சந்தர்ப்பம் வழங்கல். | ஒருமுறை சமமாக மடிப்பதன் மூலம் சமச்சீரான பொருட்களை இனங்காண வழிப்படுத்தல். (செயற்பாடுகள் ஊடாக சமச்சீர் உருவங்களைப் பெற வழிப்படுத்தல்) |
| 05 | அயல் : கிட்ட, தூர<br>முன், பின்<br>மேல், கீழ் - எனும் எண்ணக்கருவை பதியச் செய்ய வழங்கல். | கிட்ட, தூர<br>முன், பின்<br>மேல், கீழ் - எனும் எண்ணக்கருவை அறிந்து கொள்ளும் செயற்பாடுகளைச் செய்ய வழிப்படுத்தல் |
| 06 | மாறின்மை : ஒரே வகையான இரு பாத்திரங்களைப் பயன்படுத்தி ஒரு பாத்திரனால் மணல், நீர் பயன்படுத்தி நிரப்பச் சந்தர்ப்பம் வழங்கல். | ஒரு பாத்திரத்தில் மணல் அல்லது நீரை நிரப்பி வெவ்வேறு பாத்திரங்களினுள் அவற்றை மாற்றுதல் மூலம் மாறின்மை பற்றி எண்ணக்கரு விருத்தியைப் பெற வழிப்படுத்தல். |
| 07 | அளத்தல் : நீளம் - வெவ்வேறு நீள அளவுள்ள (தடிகள், ஈர்க்குகள்) பொருட்களைப் பயன்படுத்தி நீண்ட, குறுகிய, உயரம். கட்டை என்பதை இனங்காணும் சந்தர்ப்பம் வழங்கல். விளையாட்டு தராசு ஒன்றினைப் பயன்படுத்தி வெவ்வேறு பாரமான. இலேசான பொருட்களைக் கையாளச் சந்தர்ப்பமளித்தல். | நீளம் கூடிய, குறைந்த, உயரமான, கட்டையான பொருட்களை இனங்காண வழிப்படுத்தல்<br>பாரமான, பாரமற்ற, பொருட்களை வழங்கி<br>• பாரமான பொருள்<br>• இலேசான பொருள் - இனங்காண வழிப்படுத்தல் |
| 08 | பரப்பளவு : ஒரே அளவான துண்டுகளைப் பயன்படுத்தி விளையாடச் சந்தர்ப்பமளித்தல். (சதுரம், செவ்வகம், முக்கோணம். சோடா மூடி போன்றன) | அலகுத் துண்டுகளைப் பயன்படுத்தி<br>• வெவ்வேறு கட்டங்களை நிரப்பி அடுக்க வழிப்படுத்தவும்.<br>• இரு வேறுபட்ட கட்டங்களை நிரப்பி அடுக்கி (பரப்பு) அளவுகளைக் கூட, குறைய, சமன் என ஒப்பிட வழிகாட்டல். (ஒன்றை நிரப்பிய பின் அதே அலகுக் கட்டைகளை எடுத்து மற்றையதை நிரப்ப வழிப்படுத்தவும்) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 09 | கனவளவு :<br>• கனவுரு, சதுரமுகிக் கட்டைகளைப் பெட்டி ஒன்றினுள் அடுக்குதல்<br>• வெவ்வேறு அளவுள்ள குவளை, பாத்திரம், சிரட்டை போன்றவற்றைப் பயன்படுத்தி மண் பிட்டுச் செய்தல்.<br>• வெவ்வேறு அளவுள்ள பாத்திரங்களை குவளை ஒன்றால் நிரப்புதலுக்குச் சந்தர்ப்பம் வழங்கல். (மணல், நீர் பயன்படுத்தல்) | • இரு வேறு அளவுள்ள பெட்டிகளில் ஒரேயளவான கட்டைகளை அடுக்கி ஒப்பிடுதல்.<br>• ஒரு பாத்திரத்தை நீர், மணல் பயன் படுத்தி நிரப்பி ஒப்பிடுதல்.<br>• நிரப்பிய பாத்திரத்தைப் பயன்படுத்தி இன்னொரு பாத்திரத்தை நிரப்புதல்.<br>• எண்ணுதலுக்கான அனுபவங்களைப் பெற்றபின் வெவ்வேறு பாத்திரங்களை ஒரு குவளையினால் நிரப்பும் தடவை களை எண்ணுதல் மூலம் ஒப்பிடல்.<br>• கண்ணாடிப் பாத்திரமொன்றினுள் இரு வேறு அளவுள்ள குவளைகளில் நிரப்பியதை ஊற்றி இறப்பர் பட்டியால் அடையாளமிடுவதன் மூலம் குவளை -களின் கொள்ளளவை ஒப்பிடல். |
| 10 | காலம் : காலை, இரவு நேரங்களில் நிகழும் சம்பவங்களைக் கலந்துரையாடி காலங்களை வெளிப்படுத்தல் படங்களைக் காட்சிப்படுத்தி:<br>• காலைக் காட்சி<br>• மாலைக் காட்சி<br>• மழை<br>போான்றவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பமளித்தல். | நேற்று, இன்று, நாளை, மதியம், மாலை போன்ற காலத்தில் நிகழும் சம்பவங்களைக் கலந்துரையாடல். பொருத்தமான படங்களைக் காட்சிப்படுத்தி அவற்றை அறிந்து, பயன்படுத்த வழிப்படுத்தல். |
| 11 | முழுவதும், அரைவாசியும் முழுமையான பொருட்கள், அவற்றின் பாதிகள் என்பவற்றைக் கையாளச் செய்வதன் மூலம்,பாதிகளைப் பொருத்தி முழுப்பொருளைப் பெறக்கூடிய சந்தர்ப் -பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். | முழுப் பொருட்களைப் பாதிகளாக்கவும், பாதிகளை முழுமைகளாக்கவும், பாதிகள் சமமானவை என அறிந்து கொள்வதற்கு வழிப்படுத்தல். |
| 12 | கோலங்கள் : இரு நிறங்களைப் பயன்படுத்தி தாமாகவே கோலங்கள் அமைக்க வழிப்படுத்தல். | • நிற அடிப்படையில் (2 நிறங்கள்)<br>• வடிவங்களின் அடிப்படையில் (2 வடிவங்கள்)<br>• எண் பற்றிய எண்ணக்கருவாக்கத்தின் பின் எண்களிலான கோலம் (1.2,3,4) போன்றவற்றை அடுக்குதல், ஒட்டுதல், அச்சுப்பதித்தல் மூலம் அமைக்க வழிப்படுத்தல் |
| 13 | புதிர் விளையாட்டு :<br>• திண்ம உருவங்களை வேறாக்கலும் பொருத்துதலும்.<br>• தளவடிவங்களைப் பயன்படுத்தி உருவங்களை அமைத்தல்.<br>• இரு பகுதிகளாக்கப்பட்ட உருவத்தைப் பொருத்துதல்.<br>• இவற்றிற்கான சந்தர்ப்பங்களை வழங்கல். | • பொருட் தொகுதியில் இருந்து வித்தியாசத்தைத் தெரிதல்.<br>• உருத்தொகுதியில் வேறு பட்டிருப்பதைத் தெரிதல்.<br>• 2,3 பகுதிகளாக்கப்பட்ட உருவத்தைப் பொருத்துதல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 14 | பணம் :<br>• வெவ்வேறு நாணயங்களைக் கையாள விடல்<br>• 2 வேறு வகை நாணயங்களைக் கொண்டு கோலம் அமைத்தல்.<br>• ஒரே வகை நாணயத்தைப் பயன்படுத்தி வடிவங்கள் அமைத்தல் | • நாணயங்களை வகைப்படுத்தல்.(25, 50, 1ரூபா)<br>• இரு வகை நாணயங்களைக் கொண்டு வெவ்வேறு கோலங்களை அமைத்தல்.<br>• நாணயங்களை அச்சுப்பதித்தல்<br>• வெவ்வேறு நாணயங்களைப் பயன்படுத்தி வடிவங்களை அமைத்தல் |
| 15 | எண்கள் : 10 வரை சுயாதீனமாக எண்ணுதல் | • விளையாட்டுக் கட்டை அமைத்தல் (மீதியின்றி)<br>• 10 வரை சுயாதீனமாக எண்ணுதல்<br>• 1 – 3 வரை பொருட்களுடன் எண்ணுதல்<br>• 1 – 6 வரை பொருட்களுடன் எண்ணுதல்<br>• கூட, குறைய (1 – 5 வரையான எண்ணிக்கையைக் அடிப்படையாகக் கொண்டு)<br>• பொருள் வேறுபட்ட போதும் சமமான எண்ணிக்கையை அறிதல்.<br>• 1 - 6 வரையான குறியீட்டை இனங்காணல்.<br>• ஒத்த எண் குறியீட்டை இனங்காணல்.<br>• பொருட் தொகைக்கேற்ப குறியீட்டைத் தொடர்புபடுத்தல்.<br>• உருத்தொகுதிக்கேற்ப எண்களை வைத்தல்<br>• வரிசைப்படுத்தல்<br>• எண் புத்தகம் அமைத்தல்<br>• முறைசாராக் கூட்டலுக்கான சந்தர்ப்பம் வழங்கல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் அறிமுகம்



தவளை - ஒன்று 1

இலக்கத்துக்கு நிறந்தீட்டவும்

1

புள்ளிகளை இணைத்து வரைக.

1

1 1 1 1 1 1

2



இரண்டு தவளைகள்

**இலக்கத்தில் உள்ள புள்ளிகளை இணைக்கவும்**

கீழுள்ள இலக்கங்களுக்கு நிறந்தீட்டவும்.

0 1 2 3 4

5 6 7 8 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பொருட்களையும் இலக்கங்களையும் அறிமுகம் செய்து பின்னர் எழுதத் தூண்டலாம்.

எத்தனை வட்டங்கள் உண்டு? வட்டங்களுக்கு நிறந்தீட்டுக.



**உருவங்களைத் தொடர்புபடுத்துக.**



1. இரண்டுக்கு அடுத்து வரும் எண் எது? ........ அதற்கு மஞ்சள் நிறம் தீட்டுக.
2. இலக்கம் ஒன்றுக்கு முன்னால் இருக்கும் எது? ...... அதற்கு நீல நிறந்தீட்டுக.
3. 2 , 4 இலக்கங்களுக்கு நடுவில் உள்ள இலக்கம் எது? ...... அதற்கு பச்சை நிறந்தீட்டுக.

**இவ்வாறு பயிற்சிகளைக் கொடுக்கலாம்.**

வளைந்த புத்தகம்,

ஒரு தாளை எடுத்து விரும்பியவாறு சதுரங்களாக ஒன்றன்மேல் ஒன்றாக மடிக்கவும். 5 அல்லது ஆறு பக்கங்கள் கொண்டதாக மடித்தெடுத்தால் வளைந்த புத்தகம் உருவாகிவிடும். இவ்வாறு வளைந்து செல்லும் புத்தகத்தை ஒவ்வொருவரையும் தயாரிக்கச் சொல்லுங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் இலக்கத்தையும், படத்தையும் எழுத்தையும் வரையச் சொல்லுங்கள். இது '2' என்று எழுத வழிப்படுத்துங்கள். மாணவர்களுக்கு எழுதுவதில் சிரமம் இருப்பின் ஆசிரியர் உதவவேண்டும். பாடநூலைப் பார்த்து எழுதுவதாயினும் 'பார் மறை எழுது பரிசீலனை செய்' நுட்பத்தைப் பயன்படுத்த அனுமதியுங்கள்.



முடிவில் - ஒவ்வொரு மாணவனும் தமது புத்தகத்தைக் காட்டுவார். ஆசிரியர் பாராட்ட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார், மறை, எழுது, பரிசீலனை செய் - என்னும் வழிமுறை. ( LCWC )

- 1 - 5 இலக்கங்களைத் தெரிவு செய்யுங்கள்.
- அவற்றைக் கரும்பலகை அல்லது அட்டையில் எழுதுங்கள்.
- மாணவர்களுக்கு அந்த இலக்கங்களை எவ்வாறு எழுதுவதென்று காட்டுங்கள்.
- காற்றில் விரலால் எழுதும்படி கூறுங்கள்.
- அவர்களது விரலால் கையில் அல்லது காலில் எழுதும்படி கூறுங்கள்.
- இலக்கங்களைத் திரும்பவும் பாருங்கள். கரும்பலகையில் அல்லது அட்டையில் இலக்கத்தின் மேல் தேய்த்து எழுதும்படி பணியுங்கள்.
- அந்த இலக்கங்களை மாணவர்களின் கொப்பிகளில் எழுதும்படி வழிப்படுத்துங்கள்.
- அட்டவணையைக் காட்டுங்கள். அல்லது அதனை பலகையில் தொங்கவிடுங்கள்.
- அந்த இலக்கங்களை மறையுங்கள்.
- மாணவர்களை இலக்கங்களை எழுதும்படி கூறுங்கள்
- இப்போது மறைத்த இலக்கத்தைத் திறவுங்கள்.
- மாணவர் எழுதியது சரியா? எனப் பார்க்கச் சொல்லுங்கள்.
- சரியாக எழுதும்படி அறிவுறுத்துங்கள்.



பார் - **Look**



மறை அல்லது அழி - **Cover or Erase**



அதனை எழுது - **Write**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதியதை பரிசீலனை செய்: இது சரியா? - Check

இதனை LCWC என அழைப்பார்கள். இம்முறை மாணவர் விரைந்து கற்பதற்கு உதவும்.

தேர்ச்சிகள்.

நிறங்களை இனங்கண்டு, வகைப்படுத்தி வேறுபடுத்துவர்

ஐந்துவரை எண்ணுவர்.

வகைப்படுத்துவர் - தெரிதல் (சிறிது, பெரிது, அதிகம், குறைவு, முழுமை, பாதி, தூரம், கிட்ட போன்றவற்றைத் தெரிந்திருப்பர்.

ஒன்றுக் கொன்று தொடர்பு படுத்துவர்.

சிறிய அளவுகளை அளப்பர்.

### சூழலைப் புரிந்து கொள்ளல்.

பிள்ளை ஐம்புலன்கள் ஊடாகச் சூழலைக் கண்டறிந்து புரிந்து கொள்கிறது. பிள்ளையைச் சூழவுள்ள அனைத்தும் சூழலில் அடங்கும். சூழலின் எல்லாக் கூறுகளும் பிள்ளையின் கவனத்தை ஈர்த்துப் பொருத்தமான கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்குகிறது. சூழலில் உள்ள உயிரிகளைக் கண்டறிவார்கள். மரஞ்செடி கொடிகளைப் பார்த்திருப்பார்கள். மழை, வெயில், இடிமுழக்கம். வெளிச்சம். வீசும் காற்று, ஒலி ஆகியவற்றை அறிய ஆர்வம் காட்டுவார்கள். சூழலில் உள்ளவற்றைப் பார்த்தும், கேட்டும், உணர்ந்தும், முகர்ந்தும், தொட்டளைந்தும் அனுபவங்களைத் தேடியறிவர். பல்வேறு செயற்பாடுகள் ஊடாக இக்கண்டு பிடிப்புகள் நிறைவேறும்போது அவதானித்தல், ஆக்கம். வரைதல், சங்கீதம். நடனம், ஆடல்பாடல். அடையாளங்காணல், விளங்கிக் கொள்ளல், போன்ற கற்றல் அனுபவங்கள் கிடைக்கின்றன. இயற்கைச் சூழலைவிட சமூகச்சூழலுடன் பிள்ளை தினமும் தொடர்புபட்டுள்ளது. பெற்றார், உறவினர், தமக்கு உதவுபவர்கள் ஆகியவர்களோடு தொடர்புபடுவதன்மூலம் பல்வேறு சமூகத் திறன்களைக் கற்றுக்கொள்கிறது. சமூகச்சூழலில் செயற்படுவதன்மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியுறுகிறது.

கற்றல் என்பது தெரிந்ததில் இருந்து தெரியாததற்கும், இலகுவானதில் இருந்து சிக்கலானதற்கும், படிமுறை வளர்ச்சியாக அமையவேண்டும்.. பாடசாலைத் தோட்டம் மரங்கள், செடிகொடி நிறைந்ததாக இருக்கவேண்டும் அங்கு பறவைகள். பிராணிகள். விலங்குகள் உலா வரவேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் கலகலப்பாக இருப்பார்கள். இதற்கு ஏற்றவகையில் விளையாட்டு முற்றங்கள் அல்லது விளையாட்டுப் பூங்கா அமையவேண்டும். அங்கே இயற்கை செயற்கைப் பொருட்கள் நிறைந்து கிடக்கவேண்டும்.

பிள்ளைகள் சூழலைக் கண்டறிந்து அனுபவங்களைப் பெறும் வழிகளை முன்பள்ளிகள் அளிக்கவேண்டும். பிள்ளைகளின் விருப்பங்களை அறிந்து அதற்கேற்ப செயற்பாடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது முன்பள்ளி ஆசிரியர்களது கடமையாகும்.

விளையாட்டல்லாத விளையாட்டு நூலில் 38 பயிற்சிகள் உள்ள. முதலாந் தவணையில் 13 பயிற்சிகளையும், இரண்டாந்தவணையில் 13 பயிற்சிகளையும் மூன்றாந்தவணையில் 12 பயிற்சிகளையும் முடிக்கலாம். பயிற்சிக்கான தலைப்புகளை அட்டவணையில் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1 ஆம் தவணை: | 2 ஆம் தவணை: | 3 ஆம் தவணை: |
|---|---|---|---|
| 01 | குடும்பத்துக்கு உதவுவோம் | தண்ணீருக்கு உருவம் இல்லை | பூச்சியின் விருந்து |
| 02 | எங்கள் முன்பள்ளி | பாத்திரத்தின் உருவைத் தண்ணீர் கொள்ளும். | சேற்றுக்கும் மணலுக்கும் வித்தியாசம். |
| 03 | போத்தலைச் சுழற்றுதல் | மழை பெய்கிறது | இலைகளை ஒப்பிடல் |
| 04 | நண்பர்களின் ஒதுக்கிடம் | தண்ணீரும் பொருட்களும் | மரக்கறியும் பழங்களும். |
| 05 | காற்று | விலங்குகள் வாழுமிடம் | வானிலை அசைவுகள் |
| 06 | மழை மேகம் பொருட்கள். | இயற்கையில் கிடைக்கும் | மீன் பிடித்தல். |
| 07 | சவர்க்காரக் குமிழ்கள் | வீட்டு மிருகம் | காந்தம் |
| 08 | துப்பறியும் பொம்மை | மணத்தினால் அறிதல் | பெட்டியில் அடுக்குதல் |
| 09 | அதிசயப் பொதி | ஒலி உலா | பெண்டியூலம் |
| 10 | உணரும் பெட்டி | ஒலிப் பெட்டிகள். | மலையிலிருந்து சறுக்கல். |
| 11 | எல்லாம் விழுகிறது | விதைகளைச் சேகரித்தல் | சூரியக் கடிகாரம் |
| 12 | தாழுதலும் மிதத்தலும் | நாற்று வளர்கிறது | பரசூட் செய்தல் |
| 13 | தண்ணீர் நிறைந்து விட்டதா? | கற்குவியல் | மீட்டல் |

ஆசிரியர்களின் தேவை கருதி மேற்காட்டிய பாட அலகுகளை எவ்வாறு தயாரிப்பதென்பதற்கு முதலாந்தவணையில் உள்ள முதலாம் பாடத்துக்குரிய செயற்பாட்டை உதாரணமாகத் தருகிறோம்.

நாளுக்கான திட்டமிடல்

| பாடப்பரப்பு | சூழலை விளங்கிக் கொள்ளுதல் |
|---|---|
| செயற்பாடு | போத்தலைச் சுழற்றி விடுதல் |
| நோக்கம் | வாய் மொழி மூலம் சொல்லுதலுக்கும் கேட்டலுக்கும் மற்றப் பிள்ளைகளோடு பழகுவதற்கும் உதவுதல். |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல் |
| அளவு | 5 – 10 நிமிடங்கள் |
| கற்றல் சாதனங்கள் | பிளாஸ்ரிக் போத்தல்கள், நிறத்தாள், நூல், நீண்ட தடித்த அட்டைகள், பசை, கத்தரிக்கோல் |
| செயல் முறை | 1. வகுப்பை வட்டமாக நிற்க விடுங்கள்.<br>• பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• வரவேற்புப் பாடலைப் பாடுங்கள்.<br>• சிலரைத் தங்களைப் பற்றிக் கூறச்சொல்லுங்கள். உங்களுக்கு என்ன நிறம் பிடிக்கும்? வீட்டில் என்ன செய்வீர்கள்? என்ன விளையாடப் பிடிக்கும். போன்ற வினாக்களைக் கேட்டு உதவுங்கள்.<br>• பிள்ளையிடம் ஒரு பெயர் அட்டையைக் காட்டுக. ஒரு படத்தையும் பக்கத்தில் பெயரையும் காட்டுக. மாற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | மாற்றிக் காட்டுக. பிள்ளைகளின் பெயர்களை அட்டையில் எழுதுக.<br>• பிள்ளைகளைக் குழுக்களாக்கி வட்டமாக இருக்கச் சொல்லுங்கள்.<br>• ஆசிரியர் ஒரு குழுவின் வட்டத்தில் சேர்ந்து பிளாஸ்ரிக் போத்தலைச் சுழற்றி விடுவார். போத்தலின் சுழற்சி நின்று போத்தலின் கழுத்துப்பகுதி யார் பக்கம் காட்டுகின்றதோ அவரிடம் ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கு விடை கூறவேண்டும்.<br>• ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லவும். அந்தப் பெயருள்ள அட்டையை எடுக்கச் சொல்லவும்.<br>• பெயருக்குப் பக்கத்தில் தங்கள் படத்தை வரையச் சொல்லுங்கள்.<br>• பெயரெழுதிய அட்டைகளை மேசையில் வைக்கச் சொல்லவும்.<br>• பிள்ளைகளை வட்டமாக நிற்கச்சொல்லுங்கள். ஆசிரியர் சொல்கிறார். விளையாட்டைச் செய்வியுங்கள். ஆசிரியர் செய்வதுபோல் செய்யச் சொல்லுங்கள். பின் வருமாறு அறிவுறுத்துங்கள்.<br>• ஆசிரியர் சொல்கிறார் 'கைகளை உயர்த்துங்கள். கூரைவரை உயர்த்துங்கள். கைகளைத் தட்டுங்கள். விரல்களை மூடி விரியுங்கள் போன்றன. நான் சொல்கிறேன்: இருங்கள்..· கைகளை, விரல்களை, பெருவிரலை பதிக்கச் சொல்லுங்கள். பல்வேறு உருவங்களைப் பதிப்பியுங்கள்.<br>• பிள்ளைகளை இருக்கச் சொல்லுங்கள். பேப்பரில் பிளாஸ்ரிக் போத்தலை வைத்து வரையச் சொல்லுங்கள். அதற்கு நிறந்தீட்டச் சொல்லுங்கள்.<br>• பெயரை எழுதச் சொல்லுங்கள். வரைந்த உருவத்தை வெட்டியெடுக்க உதவுங்கள்.<br>• பெரியது சிறியது காட்டச் சொல்லுங்கள்.<br>• போத்தல்களுக்குள் பேசினுள் உள்ள மணலை அள்ளி நிரப்புமாறு கூறுங்கள்.<br>முன்பள்ளியில் உள்ள பொருட்களைக் காட்டி அவை பற்றிக் கூறும்படி கேட்கலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கச் செயல் விருத்திச் செயற்பாடு

ஆக்கச் செயற்பாட்டில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது. ஆக்கச் செயற்பாட்டுக்குத் தேவையான பொருட்களையும். அனுபவங்களையும். நுட்பங்களையும் வழங்கவேண்டும். ஆசிரியர் புதுமைகள் நிறைந்த பாதுகாப்பான சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளையின் ஆக்கமும் ஆராயும் தன்மையும் விருத்தியுறும். (Every child is an artist) ஒவ்வொரு பிள்ளையும் ஒரு கலைஞனே எனக் கல்வியியலாளர்கள் குறிப்பிடுவர். ஒரு பிள்ளை தனது ஆக்கற் செயல்விருத்தியைக் காண்பியல் சித்திரம். இசை, நடனம். ஆகிய அழகியல் திறன்கள் மூலம் வெளிப்படுத்துகிறது. ஐம்புலன்களும் ஈடுபடும் செயற்பாடுகளான தொடுதல், மணத்தல். பார்த்தல், கேட்டல், சுவைத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் இச்செயற்பாடுகளைத் தூண்டுகின்றன. வகுப்பறையில் பொருட்களையும், வெவ்வேறு வழிமுறைகளில் முயற்சித்து பிள்ளைகளுக்கு உற்சாகத்தை வெளிப்படுத்த விடுவது சிறந்த முறையாகும்.

## ஆக்கச் செயலில் சித்திரங்களின் பங்கு

இரண்டு வயதுக் குழந்தையின் விரல், தசைநார் வளர்ச்சியடைந்திராது. பென்சிலை அல்லது வெண்கட்டியைப் பிடித்து ஒழுங்கற்றுக் கிறுக்கும். கிறுக்கல்தான் எழுதுவதற்கான முதற்படியாகும். தசைநார் தொடர்புகள் விருத்தியுறும்போது கிறுக்கலில் ஒழுங்குமுறை காணப்படும்.. சித்திரப் படிமுறை வளர்ச்சி சாதாரணமாக ஒழுங்கற்ற கிறுக்கலாகவே தொடங்கும். சிறார்களுக்குச் சித்திரம் வரைவதற்குச் சந்தர்ப்பங்களை வழங்குவதாயின் தூண்டுதலும், ஊக்குதலும், உபகரணங்களும் கொடுக்க வேண்டும். சித்திரம் வரைதல் செயற்பாட்டில் போட்டிகளுக்குப் பதிலாக ஆளுக்காள் உதவும் பண்பை வளர்க்கவேண்டும். போட்டிகள் மனவெழுச்சி விருத்தியைக் குழப்பிவிடும். போட்டி பொருத்தமற்ற செயற்பாடாகும். போட்டியை முன்பள்ளிகளில் தவிர்க்கவேண்டும்.

நிறங்களைக் கலத்தல், உருவங்களைச் சேர்த்தல், குழுக்களாக இருந்து இவ்வேலைகளைச் செய்வதற்குச் சாதகமான மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். பிள்ளைகளது சித்திரங்களை அவர்களது கண்மட்டத்துக்குக் காட்சிப் படுத்தவேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ **ஆக்கச் செயற்பாட்டினால் பிள்ளை பெறும் பயன்கள்**

- கருத்து வெளிப்பாட்டுத் திறனை பிள்ளை பெற்றுக் கொள்ளும்.
- கைத்திறனில் விருத்தி ஏற்படல்.
- ஒன்றைத் தன்னால் படைக்கமுடியும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும்.
- உபகரணங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவர்.
- பல்வேறு ஊடகங்களை கையாளும் திறன் பெறுவர்.
- இரசனையின் பால் நயத்து திருப்தியடைதல்.
- புதியன புனையும் ஆற்றல் பெறுவார்.

**குழந்தைகளின் கிறுக்கல், சித்திரச் செயற்பாடுகளின் பல்வேறு பருவங்கள். குழந்தைகளின் கிறுக்கலையும், சித்தரிப்புத்தன்மையையும் நான்கு முக்கிய பருவங்களாக பிரிக்கலாம்.**

1. ஆரம்ப அனுபவ நிலைப்பருவம் - கிறுக்கி விளையாடும் பருவம்.
2. குறியீட்டுப் பருவம்.
3. விளக்கத்துடன் கூடிய குறியீட்டுப்பருவம்.
4. வெளிப்பாட்டுச் சக்திப்பருவம்.

☞ **ஆரம்ப அனுபவ நிலைப்பருவம்** கிறுக்கி விளையாடும் பருவம்: 2 வயது - 4 வயது

இந்நிலைப்பருவம் 3 பிரிவுகளை கொண்டது.

i. ஒழுங்கற்ற கிறுக்கல் நிலைப்பருவம்.
ii. கட்டுப்படுத்தும் கிறுக்கல் நிலைப்பருவம் - ஒழுங்கான கிறுக்கல் நிலை
iii. கிறுக்கலை பெயரிடும் பருவம்.

☞ **ஒழுங்கற்ற கிறுக்கல் நிலைப்பருவம்** 2 வயது – 2½ வயது

- பென்சில், நிறக்கட்டி, வரைகருவியை சரியாக பிடிக்கமுடியாது.
- பிடிப்பதற்கு பல்வேறு வழிகளைக் குழந்தைகள் கையாள்வார்கள்.
- கைகள் முன்னும் பின்னும் மாத்திரமே அசையும். கிடைநிலை அசைவு அதிகளவு சாதகமாக இருக்கும்.
- மனதில் உள்ள எதையும் வெளிப்படுத்த முடியாது. கிறுக்கலில் குழந்தை மகிழ்ச்சி கொள்ளும்.
- கிறுக்கல் கோடுகள் பிள்ளைகளுக்கு கவர்ச்சி மிக்கதாக இருக்கும்.
- பெரும்பாலும் வன்மையான கிறுக்கலாக அமையும்.
- கிறுக்கும் தளப்பரப்பை குழந்தை பார்ப்பதில் அக்கறை கொள்ளாது.
- கிறுக்கும் தளம், சுவர், நிலம், புத்தகம், மேசை, கடதாசி, தளபாடம், தனது கை, கால், மேனி என விரிந்து காணப்படும்.
- கிறுக்கலைப் பெயரிடும் பருவம்: 3 வயது – 3½ வயது.
- பிடித்தல் நிலை இலகுவாக அமைந்திருக்கும்.
- கிறுக்கும் தளத்தையும் கிறுக்கல் கோடுகளையும் அவதானிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உற்சாகமாகக் கிறுக்குவார்.
- நிலைக்குத்து அசைவுகளும், சுழற்சி அசைவுகளும் காணப்படும். அதனால் நிலைக்குத்துக் கோடுகளும் வளை கோடுகளும் அமையும்.
- பல நிறங்களைப் பரீட்சித்துப் பார்ப்பார்.
- பல நிறங்களைக் கையாள்வார்.
- கவர்ச்சிகரமான கோலங்கள் உருவாகும்.
- பெற்றோர், மற்றவருடன் கிறுக்கலைப் பகிர்ந்து கொள்ள விரும்புவார்.

☞ **கிறுக்கலை பெயரிடும் பருவம்:** 3½ வயது – 4 வயது

- உடற்செயற்பாட்டில் மாற்றம், சிந்தனையில் மாற்றம் ஏற்படும் காலம்.
- கோடுகளில் பலவித அசைவுகள், கவனங்களைப் பார்க்கமுடியும்
- உடல் அசைவும், வெளிச் சூழலும் இணைத்துக்கொள்ளும் உன்னத பருவம்.
- வரைதளத்தை அதிகளவு பயன்படுத்துவர் (சித்தரிப்பு வியாபித்து இருக்கும்)
- கிறுக்கலையும் பெயரிடுவர் உ+ம் : எனது பூனைக்குட்டி, எனது அப்பா, எனது அம்மா.
- கிறுக்கல் உருவத்தை வர்ணிப்பார் ஆயினும் வேறு ஒரு நேரத்தில் அதனை வேறுவிதமாக வர்ணனை செய்வார்.
- வட்டக்கோடுகளை, நேர்கோடுகளுடன் சுலபமாக இணைப்புச் செய்வார்.
- தாம் வரைந்து கொண்ட ஆக்கப் படைப்பில் உண்மை அர்த்தம் காண்பார்.

☞ **மேற்குறித்த பருவ காலங்களில் குழந்தையின் சூழலைச் சாதகமாக்கல்.**

- கிறுக்கி விளையாட மகிழ்ச்சி கொள்ள போதிய இடம் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வரைவதற்கு பொருத்தமான பொருட்களை வழங்குதல்

A.) வரைதளங்களின் வகை, அமைவிடம் என்பவற்றுக்கு மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

உ + ம் : காகிதம் ⟶ மட்டை (Boards) வெள்ளை ⟶ வர்ணங்கள்

சுவர், வரைதல் பலகையின் (தளத்தின்) சாய்வு

A.) தரையில் அமர்ந்திருத்தல், ஆசனங்களில் அமர்ந்து இருத்தல், நிற்றல் போன்ற நிலைகளில் மாற்றம் ஏற்படுத்திக் கொடுத்து செயற்படவைத்தல்.

A.) போதிய சுதந்திரம் அளித்தல்.

B.) குழந்தையின் சித்தரிப்பு பற்றி அவர்கள் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

C.) காட்சிப்படுத்தல், பாராட்டுதல்.

**குறியீட்டுப்பருவம்** 4 வயது - 7 வயது

- கிறுக்கலை விட உணர்வுபூர்வமான படைப்பில் ஈடுபடும்
- குறியீடுகள் மூலம் தொடர்பாடலில் ஈடுபடும்.
- வடிவமைப்புடன் கூடிய இரேகைகளை வரைவர்.
- மன , அனுபவங்கள், கற்பனை, சிந்தனைகள் சித்தரிப்பில் தென்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 5ம் வயதின் பின் குறியீடுகளில் தெளிவினைக் காணலாம். குறியீடுகளை வேறுபடுத்தக் கூடியதாக அமையும்.
  உ + ம் :- மனிதர், மரம், பூக்கள்

- சித்தரிப்பு வரைதளம் முழுவதும் பரவிக்காணப்படல்.
- உத்வேகத்தடன் செயற்பாட்டில் ஈடுபடும்.
- நிறங்களை விரும்பி பயன்படுத்துவர் ஆனால் இயற்கையுடன் தொடர்பின்றிக் காணப்படும்.
- 4½, 5½ வயதுடையவர்கள் தாம் விரும்பிய நிறங்களையே சித்தரிப்பில் பயன்படுத்துவர்.
- 6ம் வயதின் பின் அங்கீகரிக்கப்பட்ட கலைப்படைப்பாக அமையும்.

**இப்பருவ காலத்தில் சாதகமாக்கல் வழிமுறைகள்**

A) தகுந்த சூழல், அனுபவங்களை கொடுத்தல்.

B) போதிய கலை அனுபவங்களை கொடுத்தல்.

C) படைப்பாற்றலுக்காக அவர்கள் விரும்பும் நேரத்தை வழங்குதல்.

D) என்ன வரைகின்றனர், எதை வரைகின்றனர் என்பதில் உற்சாகமுள்ளவர்களாக நாம் மாறுதல். (அவதானித்தல்)

E) நாமும் விளையாட்டில் ஈடுபடல்.

F) காட்சிப்படுத்தல், மதிப்பளித்தல், பாரட்டுதல்.

**விளக்கத்துடன் கூடிய குறியீட்டுப்பருவம்** 7 வயது – 9 வயது

- விரிவான அறிவாற்றல் விருத்தியினால் தன்னைப்பற்றி, மனிதனைப்பற்றிய ஓர் எண்ணக்கருக்களைப் பெறும் பருவம்.
- சூழலை நன்கு பார்வையிடும், வேறுபிரித்து அறிவும் தன்மையும் நன்கு விருத்தி கண்டு காணப்படும்.
- முன்னைய சித்தரிப்பை விட கைத்திறனில் குறிப்பிட்ட முன்னேற்ற நிலையை அவதானிக்கலாம்.
- சூழலின் வாய்ப்பை பொருத்து பிள்ளையின் அறிவு நிலை, மனவெழுச்சி உடலியக்க அனுபவம் என்பவற்றுக்கேற்ப சித்தரிப்பு தெளிவுபட்டுக் காணப்படும்.
- பென்சில், பேனா, பஸ்ரல் எனும் வர்ண ஊடக நிலையிலிருந்து தூரிகை பயன்பாடும் விருத்தி காணும் பருவம்.
- தூரிகையில் நேர்கோடுகள், வரிகள், இலகுவாக வரைதல் ஈடுபட வாய்புகள் காணப்படும்.
- பழங்களை தூரிகையால் வர்ணப்படுத்தவும் முடியும்.

**வெளிப்பாட்டுச் சக்திப்பருவம்** 9 வயது – 12 வயது

- முக்கிய கண்டுபிடிப்பின் கட்டம் ஆக்கபூர்வமான சித்தரிப்பு அமைந்திருக்கும்.
- உடல், உள, அறிவு வளர்ச்சி காரணமாக சித்தரிப்பில் வேறுபாடுகளை தெளிவாகக் காட்டும் பருவம்.
  உ + ம் : ஆண் / பெண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- சித்தரிப்பில் நுண்ணிய விபரங்களை வெளிப்படுத்துவர்.
- கலைத்திறமை விருத்தியடைந்திருக்கும், அனுபவங்களின் பதிவுகளை சித்தரிப்பில் காணலாம்.
- நிறங்களைப் பயன்படுத்துவதில் ஒழுங்குமுறை காணப்படும் பொருத்தப் பாட்டுடன் பயன்படுத்தியிருப்பர்.
- குறித்த தலைப்பிற்கு பொருத்தமாக சித்தரிப்பில் ஈடுபடுவார்.
- தமது சித்தரிப்புப் பற்றி விபரிப்பர், விமர்சனங்ளை விரும்புவர்
- ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் எதிர்பார்ப்பர்.
- புதியன படைப்பதில் ஆர்வமுடையவராக இருப்பர்.

**பிள்ளைகளில் சித்திர ஆக்கச் செயற்பாட்டை விருத்தி செய்வதற்கு ஆசிரியரின் பங்கு.**

- பிள்ளை கிறுக்குவதற்கும், வரைவதற்கும் போதிய இடவசதியை வழங்குதல்.
- பிள்ளைக்கான போதிய நேரம் வழங்குதல்.
- தம் சிந்தனையில் கவனம் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருத்தமான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- நிறந்தீட்டுவதிலும், ஆக்கச் செயற்பாட்டிற்கும் பிள்ளை ஊக்குவிப்பதற்கு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருத்தல்.
- சுயமான கற்பனைப் படைப்பில் ஈடுபட ஊக்குவித்தல்.
- செயற்பாடுகள் முடிந்த பின் அவைபற்றி அவர்களே பேச ஊக்குவித்தல்.
- பல ஊடகங்கள், உபகரணங்களைப் பிள்ளை சேர்த்து அரிய வாய்ப்பளித்தல்.
- பிள்ளைகளின் மத்தியில் வேலை செய்யும் போது உற்சாகமாக இருத்தல்.
- உபகரணங்களையும், கருவிகளையும் பேணும் முறைப்பற்றி அனுபவப்படுத்தல்.
- ஆக்கங்களைக் கண்மட்டப் பார்வையில் காட்சிப்படுத்தல்.

விளையாட்டல்லாத விளையாட்டு என்ற நூலில் 43 செயற்பாடுகள் உண்டு. ஒரு தவணையில் 14 செயற்பாடுகள் வீதம் கொடுக்கலாம். செயற்பாடுகளின் தலைப்புக்களை இங்கே தருகிறோம். விளையாட்டல்லாத விளையாட்டு நூலை வாசித்து அதற்கேற்பச் செயற்பாடுகளைத் தயாரித்துக் கற்பியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1 ஆம் தவணை: | 2 ஆம் தவணை: | 3 ஆம் தவணை: |
|---|---|---|---|
| 1 | இயற்கையாக நிறந்தீட்டல் | சுருங்கிய பேப்பரினால் சித்திரம் | அசையும் வடிவம் |
| 2 | கிறயோன் தேய்த்தல் | வடிவங்கள் | முகமூடி அச்சு |
| 3 | இலைகளினால் ஒட்டுச் சித்திரம் | அதிசயச் சித்திரம் | பென்சில் சீவல் சித்திரம் |
| 4 | இலைகளால் கையணி | விரும்பும் கிண்ணம் | அட்டைகளில் ஜரிகை |
| 5 | இயற்கை நெசவு | இயற்கைச் சித்திரம் | கண்ணாடி யன்னலில் கறைச்சித்திரம் |
| 6 | வட்டத் தறிகளில் நெசவு | இயற்கைப் பொருட்களால் சித்திரம் | நிறங்களில் சிந்திய சித்திரம் |
| 7 | நிறத்தினால் வித்தை | களியில் ஆக்கம் | கரடுமுரடான சித்திரம் |
| 8 | சிவப்பின் நிற பேதம். | முன்பள்ளிக் கொடி | ஜப்பான் படகு |
| 9 | இரட்டை வர்ணம் பூசுதல் | குச்சிகளால் வடிவம் | பறக்கும் தட்டு |
| 10 | புதிர் உருவாக்கல் | பாலம் கட்டுவோம் | நெளியும் பாம்பு |
| 11 | நிறம் பூசுவோம் | சூரிய அடையாளம் | துளைச் சித்திரம் |
| 12 | பஞ்சினால் சித்திரம் | பேப்பர் மணிகள் | கோபுரம் அமைத்தல் |
| 13 | இனிக்கும் சித்திரம் | விரலில் பாவைகள் | ஒட்டுச்சித்திரம் |
| 14 | பேப்பர் அமைப்பு | பந்தினால் நிறந்தீட்டல் | நீரடிக் காட்சி |
| 15 | கழிவுத் துண்டுகளால் | சிற்பம் பந்தினால் நிறந்தீட்டல் | நீரடிக் காட்சி |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாளுக்கான திட்டமிடல்

| | |
|---|---|
| பாடப்பரப்பு | ஆக்கச் செயல் அபிவிருத்தி – காண்பியல் சித்திரம் |
| செயற்பாடு | இலைகளைப் பதித்தல் - நிறந்தீட்டல் |
| நோக்கம் | பல்வகை நிறங்களைக் உருவாக்கும் முறைகளைக் கண்டு பிடித்தல் |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல் |
| அளவு | 5 – 10 நிமிடங்கள் |
| கற்றல் சாதனங்கள் | வெள்ளைத்தாள், நிறக் கிறயோன், கரடுமுரடான தளமுள்ள பொருட்கள். நாணயம், சீப்பு, இலைகள் கற்கள். நீண்ட தடித்த அட்டைகள், பசை, கத்தரிக்கோல் |
| செயல் முறை | 1. பிள்ளைகளை முன்பள்ளியைச் சுற்றி உலாவரச் சொல்லுங்கள். கண்ணில் படும் இலை, கற்கள். சீப்பு நாணயம் போன்ற தடித்ததளமுள்ள பொருட்களைக் கொண்டுவரச் சொல்லுங்கள்<br>• பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• வரவேற்புப் பாடலைப் பாடுங்கள்.<br>• சிலரைத் தாங்கள் கொண்டு வந்த பொருட்களைப் பற்றிக் கூறச்சொல்லுங்கள். உங்களுக்கு என்ன விளையாடப் பிடிக்கும். போன்ற வினாக்களைக் கேட்டு உதவுங்கள்.<br>• பிள்ளையிடம் நிறக் கிறயோன் சோக்கைக் கொடுங்கள். பக்கவாட்டில் தேய்பதற்கு அறிவுறுத்துங்கள். பேப்பரைக் கொடுங்கள். இலைகளை அல்லது அவர்கள் கொண்டு வந்த பொருட்களின் மேல் பேப்பரை வைத்து, கிறயோனால் அழுத்தித் தேய்க்கச் சொல்லுங்கள். கீழே உள்ள பொருளின் படம் தாளில் பதிந்திருக்கும். பதிந்த படத்தையும் கீழ் வைத்த பொருளையும் ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லுங்கள்.<br>• பிள்ளைகளைக் குழுக்களாக்கி வெளியில்வட்டமாக இருக்கச் சொல்லுங்கள்.<br>• ஆசிரியர் ஒரு குழுவின் வட்டத்தில் சேர்ந்து பிளாஸ்ரிக் போத்தலைச் சுழற்றி விடுவார். போத்தலின் சுழற்சி நின்று போத்தலின் கழுத்துப்பகுதி யார்பக்கம் காட்டுகின்றதோ அவரிடம் ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கு விடை கூறவேண்டும்.<br>• ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லவும். அந்தப் பெயருள்ள அட்டையை எடுக்கச் சொல்லவும்.<br>• பெயருக்குப் பக்கத்தில் தங்கள் படத்தை வைக்கச் சொல்லுங்கள். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | • படத்தைப் பற்றி பிள்ளைகளைக் கதைக்கச் சொல்லுங்கள்.<br>• கைகளை, விரல்களை, பெருவிரலை பதிக்கச் சொல்லுங்கள். பல்வேறு உருவங்களைப் பதிப்பியுங்கள்.<br>• பிள்ளைகளை இருக்கச் சொல்லுங்கள். பேப்பரில் பிளாஸ்ரிக் போத்தலை வைத்து வரையச் சொல்லுங்கள். அதற்கு நிறந்தீட்டச் சொல்லுங்கள்.<br>• பெயரை எழுதச் சொல்லுங்கள். வரைந்த உருவத்தை வெட்டியெடுக்க உதவுங்கள்.<br>• நீங்கள் வரைந்த வண்ணத்துப் பூச்சிப் படங்களைக் கொடுத்து நிறந்தீட்டச் சொல்லுங்கள்.<br>• பெரியது சிறியது காட்டச் சொல்லுங்கள். |
| | முன்பள்ளியில் உள்ள பொருட்களைக் காட்டி அவை பற்றிக் கூறும்படி கேட்கலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |

**நிறந்தீட்டும்படி அறிவுறுத்துங்கள்.**



விளையாட்டல்லாத விளையாட்டு நூலில் ஆக்கச் செயல் அபிவிருத்திப் பகுதியில் காண்பியல் சித்திரம் ( 5.1) பகுதியல் 43 பயிற்சிகள் உள்ளன. முதலாந்தவணையில் 14 பயிற்சிகளையும், இரண்டாந்தவணையில் 15 பயிற்சிகளையும், மூன்றாந்தவணையில் 14 பயிற்சிகளையும் பயிற்றுவிக்கலாம். (5.2) ஆக்கச் செயல் அபிவிருத்தி சங்கீதம் பகுதியில் 28 பயிற்சிகளும் உள்ளன. அவற்றையும் ஆசிரியரின் விருப்பத்துக்கு ஏற்ப மூன்றாக வகுத்துக் கற்பிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை / சங்கீத / நடன / நாடகச் செயற்பாடுகள் ஆக்க விருத்தியை விரிவுபடுத்துகின்றன.

இளஞ்சிறார்கள் சூழலில் உள்ள ஒலிகளைக் கேட்டு பாவனை செய்யத் தொடங்குவார்கள். பெரியவர்கள் பாடுவதை, வானொலி.யில் கேட்பவற்றைச் செவிமடுத்துப் பாடுவார்கள். இசையோடு பாடி கைகளைத் தட்டி அசைந்து ஆடுவார்கள். இசைக்கருவிகளைத் தாங்களாகவே தட்டி ஒலியெழுப்பி மகிழ்வார்கள். கிலுக்கிகள். சல்லாரி, பேணிகளில் செய்த உபகரணங்களை இயக்குவார்கள். முன்பள்ளியில் இதற்கான சந்தரப்பங்கள் வழங்கி பிள்ளைகளை மேலும் ஊக்கப்படுத்தவேண்டும். சிறு பாடல்களைப் பாடவும், அதற்கேற்ப ஆடவும் சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும்.

**இசையும் அசைவும்**

ஒரு பிள்ளை சுதந்திரமாகச் செயற்படும் போது இயல்பாகவே வெளிப்படும் வாய் ஒலிகளும், நாதமும், உடல் உறுப்புக்களின் மூலம் காட்டப்படுகின்ற அசைவுகளும், முகத்தில் தென்படுகின்ற பாவங்களும், உபகரணங்கள் மூலம் ஏற்படுத்தும் சப்தங்களும் பிள்ளையிடம் இயல்பாகவே உள்ள அழகியல் உணர்வை வெளிப்படுத்துகின்றன.

**இசையுடனான அசைவுகள்**

இசைக்கேற்ப சுயமாகவோ அல்லது ஆசிரியருடைய வழிகாட்டலுடனோ பிள்ளை இசைக்கேற்ப அசையும் திறனுடையது. இசையுடனான அசைவுகளை 3 சிறு தலைப்பின் கீழ் பார்ப்போம்.

1) **ஒத்திசையுடனான அசைவுகள்**
முறுக்குதல், ஆடுதல், சுற்றுதல், முழங்காலிடல், தவழுதல், நீளுதல், சுருங்குதல், ஆகியவற்றை விரைவாகவும் மெதுவாகவும், கிரமமாக குறைந்த அளவில் இருந்து கூடிய வேகமாகவும், கட்டுப்பாட்டுடனும் செய்து பாவம் மூலம் கருத்தை வெளிப்படுத்தல்.

2) **தாளத்துடனான அசைவுகள்**
நடத்தல், ஓடுதல், பாய்தல், கெந்திப்பாய்தல், சுற்றுதல், குனிதல், நீட்டல், இருத்தல், எழும்புதல், ஆகியவற்றை ஒரே வேகத்திலும் இருவகையான வேகத்திலும் செய்தல்.

3) **அபிநயத்துடன் அசைவு**
கருத்து வெளிப்பாடான அசைவுகள் பாடலில் கூறப்படும் கருத்தை வெளிப்படுத்துவனவாக அபிநயம் அமையும். இந்த அபிநய அசைவானது தனித்து நின்ற இடத்தில் நின்று கொண்டே முன், பின் பக்கங்களில் அசைந்து செய்வனவாகவும் அமையும் அல்லது இடத்தைப் பயன்படுத்தி அசைந்து செய்வனவாயும் அமையும்.

4) **நர்த்தன அசைவு**
பிள்ளைகளது கற்றல் தொடர்பான பாடப்பரப்பிலே அசைவு சார் செயற்பாடுகளுக்கு முக்கிய இடம் உண்டு. இச் செயற்பாடுகள் அவற்றின் குறிக்கோள்களுக்கமைய முக்கியமான இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.

1. உடலியக்க நர்த்தன அசைவுகள்
2. உள வெளிப்பாட்டு நர்த்தன அசைவுகள்

விளையாட்டுக்கள், உடல் அப்பியாசங்கள் என்பன உடலியக்க நர்த்தன அசைவில் அடங்கும். சூழலுடன் கொள்ளும் தொடர்பினால் பெறப்படும் அனுபவங்களை வெளிப்படுத்தும் அசைவுகள் உள வெளிப்பாட்டு நர்த்தன அசைவுகள் என்னும் பகுதியில் அடங்கும். இவ்விரு வகையான நர்த்தன அசைவுகளும் மனிதன் இயல்பாகவே பெற்றிருக்கும் அடிப்படையான நர்த்தன அசைவு விதிகளை ஆதாரமாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டவை. நடத்தல், ஓடுதல், துள்ளுதல், உயரத்துள்ளுதல், சுழற்றுதல், குனிதல் போன்ற இயல்பான அசைவுகள் உடலியக்க அசைவுகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் விலங்குகளும் பல்வேறு கருமங்களிலும் பல்வேறு தருணங்களிலும் அவை ஈடுபடும் சமயங்களில் அவற்றின் அசைதற் கோலங்களையும் அவதானிப்பதன் மூலம் உடலின் அங்கங்கள் பற்றிய உணர்வும் அசைவுகளில் பல்வேறு இயல்புகள் பற்றிய அறிவும் பிள்ளைக்கு ஏற்படுகிறது. மேலும் நடத்தல், ஓடுதல் போன்ற இயல்பான அசைவுகளை உடலின் பல்வேறு பகுதிகட்கு செலுத்துவதன் மூலம் கணநேர, வேகமான, அதிவேகமான, மிதமான, மெதுவான இயல்புகளை வெளிப்படுத்தல் தாள நடைக்கமைய அசைவுகளை வழிநடத்தும் ஆற்றலையும் தாள லயத்திற்கேற்ப அசைவுகளை வழிநடத்தும் ஆற்றல்.

பல்வேறு தாளங்களுக்கும் பல்வேறு திசைகட்கும் பரவும் அசைவுகள் கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவதற்கு உகந்த அசைவுகளை தெரிந்தெடுக்கும் வல்லமை என்பன நர்த்தன அசைவுகள் மூலம் பெறப்படும் கற்றல் விளைவுகளாகும். ஒரு பிள்ளை அசைவில் ஈடுபடும் போதே அவ்வசைவின் தன்மையை உடல் ரீதியாக ரசிக்கின்றது. தனது உடலின் அசைவு இயல்புகளை இதனூடாகப் பிள்ளை வெளிக்கொணர்கிறது. இதன் பலனாக பல்வேறு உடல் அசைவுப்பாங்குகளுக்கும் பிள்ளையின் உடல் பரிச்சயப்படுகிறது.

அசைவுகளை அவதானித்தலும், அதைப்பற்றி ஆய்வு செய்தலும் சுயமான வெளிப்பாடு - களுக்கு வழிவகுக்கும். சுயமான வெளிப்பாடுகளின் ஊடாக புதிய ஆக்கங்கள் பிறக்கும். நர்த்தன அசைவை, அசைவு, கலைத்துவ அசைவு என இரண்டு பிரதான பிரிவுகளின் கீழ் பிரிக்கலாம்.

நர்த்தன அசைவு

அசைவு | கலைத்துவ அசைவு

**அசைவு**

- உடல் சார் அசைவுகள்
- செயற்பாடுகளின் வகைகள்.
- அசைவில் தெற்றெனத் தெரியும் இயல்புகள்.
- வெளியில் இயல்பான அசைவுகள் இடம்பெறும் விதம்.
- அசைவுகளுக்கிடையே காணப்படும் அந்நியோன்யம்.

**கலைத்துவ அசைவு**

அசைவின் விருத்தி தாளத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமையும். இது எப்பொழுதும் குறிப்பிட்டதொரு கலைத்துவ அசைவுக்கு அமைய இடம் பெறும். குறிப்பிட்ட ஒரு அசைவும் பாங்கைத் திடமான தாள மாத்திரைகளுக்கமைய மீண்டும் மீண்டும் செய்யும் பொழுது ஒரே வகையான திடமான கோலத்தைக் காட்டும் கலைத்துவ அசைவொன்று உருவாகும். இவ்வாறு திடமான தாளத்தினுள் அசைவை அமைத்தல். தாளத்திற்கமைந்த அசைவு எனப்படும். திடமான தாளக் கட்டமைப்பினுள் அசைவு நிகழ்தல் தாளத்திற்கமைந்த அசைவின் பிரதான சிறப்பியல்பு ஆகும்.

**ஆக்க நடனம்**

முன் பள்ளிக் கல்வி பெறும் வயதெல்லையைச் சேர்ந்த இயற்கையாகவே செயற்பாடு மிக்க பிள்ளையாக அமையக் காணலாம். சூழலைப்பற்றி வரையறையற்ற ஆர்வம் மிக்க ஆராயும் தன்மையை ஒரு பிள்ளை தன்னுள் கொண்டிருக்கும். சூழலில் பிள்ளை காணும், கேட்கும், சுவைக்கும் நுகரும், ஸ்பரிசிக்கும் பொருட்கள் அதனுடைய உள்ளத்தில் தீவிரமாகப் பதிகிறது. சூழலில் வாழும் மக்கள், விலங்குகள் போன்ற உயிரினங்களையும் வாகனங்கள் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களையும் மழை, காற்று போன்றவற்றையும் பார்த்து பாவனை செய்வதில் பிள்ளை பெரு விருப்புக் காட்டுகிறது. இப்பண்புகளின் மூலம் தேவையானவிடத்து இவற்றைப் பாவித்து தனது சுய வெளிப்பாடுகளை காட்டுமிடத்து பிள்ளையில் இயல்பாகவே உள்ள ஆக்கத்திறன் விருத்தியடைகிறது. பிள்ளையின் ஆக்க ஞானத்தையும் கற்பனா சக்தியையும் வழிப்படுத்தி அவனை செயற்பாடுகளில் ஈடுபடுத்தலானது அவனது உள்ளார்ந்த பண்புகளை மென்மேலும் கூர்மையாக்க வழிவகுக்கும்.

பிள்ளையின் ஆக்கங்களில் தனித்தன்மையும் சுதந்திரமான தன்மையும், புதுமையும் இடம் பெறக் காணலாம். பிள்ளையின் சுதந்திரமான ஆக்கத்தை சிருஸ்டி எனவும் குறிப்பிடுவர். உடல் அசைவுகளை ஊடகமாகக் கொண்டு பிள்ளை செய்யும் வெளிப்பாடு சிருஸ்டிக்கப்பட்ட நர்த்தன அசைவு என்றும் ஆக்க நடனம் என்றும் சொல்லலாம். மரம் கொடி காற்று என்பவற்றை ஆக்க நடனம் மூலம் அசைந்து வெளிக்காட்டுவது மாணவர் இயல்பு. தனக்கு விரும்பிய சிறுவர் பாடலுக்கு அபிநயத்துடன் கூடிய ஆக்க நடனம் செய்வது மாணவருக்கு பிடித்தமானதொன்று. தாமே ஆக்கும் நடனங்களில் நடனக் கோலங்களை அமைத்தும் செய்வர்.அவர்களது எண்ணக் கருத்துக்களை சுயமாக வெளிப்படுத்துவதற்கு ஆக்க நடனம் ஓர் சிறந்த ஊடகமாகும்.

**கிராமிய நடனங்கள்**

உள்ளுணர்ச்சிகளை தெளிவாக எடுத்துக்காட்டும் கண்ணாடி போன்றவை உடலசைவுகள். ஆதி மனிதனின் முதன் மொழியே இவ்வசைவுதான். இவ்வசைவுகள் பலதரப்பட்ட சூழ்நிலைகளிலும், சந்தர்ப்பங்களிலும் பல்வேறு விதமாக உருவெடுத்து வளர்ந்து வந்தது. இன்றும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதைத்தான் பாமர நடனம் என்று அழைக்கின்றோம். பண்படுத்தப்படாவிடினும் கரைபுரண்டு ஓடாமல் வற்றாத கற்பனையும் இயற்கை எழிலும் பெற்று திகழ்வது பாமர கலைகள். சாஸ்திரீய கலைகளினின்று மாறுபட்டிருப்பினும் சாஸ்த்திரீய கலைகளை விடவும் இப்பாமர கலைகள் எவ்விதத்திலும் தாழ்ந்தவையல்ல. இன்னும் சொல்ல போனால் சாஸ்திரீய இசையும் நடனமும் பாமர கலை வடிவங்களிலிருந்துதான் பிறந்தவை என்பது வரலாற்று உண்மையாகும். பாமர நடனம் பழமையானது. மரபு அடிப்படையில் திகழ்வது. ஆனால் எழுதப்படாத இலக்கணம் கொண்டது.

**பாமர நடன கலைகளை பின்வருமாறு பிரித்து கொள்ளலாம்.**

1. வெறி கொண்டு ஆடும் ஆட்டம். (பூசாரி போன்றவர்களுக்கு சாமி வந்து ஆடுதல் என்று கூறுவர்)
2. சமயம் தொடர்பாக ஆடும் ஆட்டம் - காவடி, கரகம்
3. களிப்புண்டு விழாக்காலத்தில் ஆடுதல் - (கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம்)
4. தொழில்சார் நடனங்கள்
5. வீதி நடனங்கள் (தெருக்கூத்து)

பிறப்பு முதல் இறப்பு வரை இசையும் நடனமும் பின்னிப் பிணைந்துள்ளது. யாவற்றிற்கும் நடனம் தேவைப்படுகிறது. பிறப்பு, திருமணம், வழிபாடு, குறிசொல்லல், மழைக்கு வேண்டல், நோன்பு போன்ற எல்லாவற்றிற்கும் நடனமாடுவது பாமர மக்களின் மரபு. நடனம் ஒரு சமுதாய கூட்டு அனுபவமாக திகழ்கிறது. இங்கு ஆடுபவர் பார்ப்பவர் என்ற பாகுபாடு இல்லை.

## தொன்று தொட்டு இருந்து வரும் சில கிராமிய நடனங்கள்.

கும்மி, கோலாட்டம், பின்னல் கோலாட்டம், ஒயிலாட்டம், கரகம், காவடி, பொய்க்கால் குதிரையாட்டம் (புரவியாட்டம்), தெருக்கூத்து. பொம்மலாட்டம், குறத்தி நடனம், அருவி வெட்டு நடனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்மி

கிராமிய மக்களும் இதனைக் கையாள்வர், நடுத்தர வகுப்பினரும் ஆடுவர். கூடையில் நவதானிய முளைப்பாரி வைத்து பொங்கல் முதலிய விழாக்களில் கைகொட்டி சுற்றி நகர்ந்து ஆடிப் பின் முளைப்பாரியை நீரில் கரைப்பது வழக்கம். இது கும்மியின் பொது இலக்கணம். நடுத்தர மக்கள் பாடும் பாடல்களும் கிராமிய மக்கள் பாடும் பாடல்களும் சற்று மாறுபடும்.
கும்மியடித்தல் பெண்களுக்கே உரிய விளையாட்டு. வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக் கொட்டி இசைத்திடுமோ கூட்டெழுத்துப் பாட்டு என்று கும்மிக்குப் பாரதியார் இலக்கணம் வகுத்துள்ளார். வாத்தியக்கருவிகள் இல்லாத போது தோன்றிய மிகவும் பழமை வாய்ந்த நடனம் இது. பெண்களால் ஆடப்படும் இந் நடனம் பூந்தட்டிக் கும்மி, தீபக்கும்மி, கதிர்க்கும்மி, இளமைக்கும்மி, எனப் பல வகைப்படும். பெண்கள் குழுவாக வட்டமாக நின்று பாட்டின் தாளத்திற்கேற்ப கைகளைத்தட்டி ஆடும் நடனம் இது. ஒற்றுமை என்ற பண்பாட்டு விழுமியப் பண்பு குழுவாக ஆடும் ஆடற்கலை மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. (கோலாட்டமும் குழு நடனமே)

## கோலாட்டம்

இது பெண்களாலோ அல்லது ஆண்களாலோ ஆடப்படும். ஆனால் இவர்கள் சேர்ந்து ஆடுவதில்லை. சுற்றி நின்று கைகளில் உள்ள கோல்களை கொண்டு தாமேயும், மற்றவருடைய கோலிலும் தட்டித் தாளத்துடன் சத்தப்படுத்திக்கொண்டு ஆடுவது கோலாட்டமே ஆகும். நடுத்தர வகுப்பினர் செய்யும் போது கர்நாடக இசையின் சாயல் இருக்கும். கிராமிய மக்கள் செய்யும் போது வேறுபாணியில் இருக்கும்
கும்மிகளினால் தாளத்தை தட்டிக்காட்டுவர் (Guide)

## காவடி

இந்த ஆட்டம் முருகப்பெருமானின் வழிபாட்டிற்கு உகந்ததாகும். "காவடி சிந்து" என்று ஒரு பிரத்தியேக சிந்துக் கவிநடையே இயற்தமிழில் இந்த ஆட்டத்திற்காக எழுந்துள்ளது. அண்ணாமலை செட்டியாரின் காவடிச்சிந்துப் பாடல்கள் மிகப் புகழ்பெற்றவை தெய்வத்தன்மை வாய்ந்தவை.

காவடி என்பது ஒரு வழிபாட்டு முறையாகும். இது வேண்டுதலின் பெயரில் செய்வதாகும். காவடிகள் பால், பன்னீர், மலர்க்காவடி, போன்று பல விதங்களில் எடுக்கப்படும். காவடியை தோளில் தூக்கிச் சென்று ஆலயத்தில் இறக்கி வைப்பது காவடி ஆட்டத்தின் பொதுவான மரபு. அழகாக அலங்கரிக்கப்பட்ட காவடியை யார் வேண்டுமானாலும் தூக்கி ஆடலாம். ஆனால் இதனையே ஒரு கலையாக வளர்த்து ஆடும் சில பாமர கூத்தர்களின் காவடி ஆட்டத்தில் பிரமிக்கத்தக்க வித்தைகளும் (கழைக்கூத்தாடிகள் போல்) அமைந்திருக்கும். காவடி நடனத்தில் லாவன்யம் மிக அற்புதமாக இருக்கும்.

## கரகம்

இது முற்காலத்தில் குடக்கூத்து என்று அழைக்கப்பட்டது. இது தெய்வ வழிபாட்டைச் சேர்ந்த ஒரு நடனமாக ஆடப்பட்டு வருகிறது. அனேகமாக முருகப்பெருமானுக்கும், மாரியம்மனுக்கும் தான் கரகம் ஆடுவது என்ற மரபு சில நூற்றாண்டு காலமாக இருந்து வருகிறது.

அம்மனை குடத்தில் ஆவாகனம் செய்து அதனை தலையில் வைத்துக்கொண்டு ஆடுவது கரகம். கைகளால் குடத்தை பிடித்துக் கொள்ளாமல் ஆடவேண்டும். கரகம் அவரவர் மனதிற்கும் மரபிற்குமேற்ப அலங்கரிக்கப்படும். கரக குடத்துள் பால், மஞ்சள் நீர், அரிசி போன்ற பொருட்கள் வைப்பதுண்டு. "அம்மன் கொண்டாடி" என்று இதனை சில இடங்களில் அழைப்பர். ஆண் பெண் யார் வேண்டுமானாலும் ஆடலாம். சிலருக்கு ஆவேசம் வருவதுமுண்டு. வேப்பிலை கரகம் ஆடுபவர்களுமுண்டு. கரகத்தில் ஆட்டம் நிதானமாகவும் உருவேற்றுவதாகவும் அமைந்திருக்கும். நம்பிக்கை கலந்த பழமையின் அரிய நினைவுகள் உடலியக்க வடிவில் கரக நடனமாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொம்மலாட்டம்

பொம்மைகளை கயிற்றினால் கட்டி அசையச்செய்து ஆட்டி வைப்பது என்பது தொன்மை வாய்ந்த கலை. துணி, மரம் இவற்றாலான பொம்மைகள் பயன்படுத்தப்படும். இவை சுமார் இரண்டு அடிக்கு மேல் இராது. தலை கைகள் ஆகியவற்றில் கயிறு கட்டியிருப்பார்கள். நீளமான உடை அணிவிக்கப்பட்டிருக்கும். நான்கு அடிக்கு மேல் உயரமில்லாத அரங்கில் பொம்மைகள் ஆட்டப்படும். திரைக்குப் பின்னால் ஆட்டிவைக்கும் கலைஞர்கள் மறைந்து நிற்பர். கயிற்றை ஆட்டுகையில் தகுந்தவாறு பொம்மைகள் அசையும். நகரும். ஆட்டுவிப்பவரே பாடி பேசி நடிப்பார்.குழந்தைகள் நல்ல கதைகளை அறிய பொம்மலாட்டக் கலை உறுதுணையாக இருக்கின்றது. பக்க வாத்தியங்களும் இதற்கு உண்டு.

## ஒயிலாட்டம்

ஆண்கள் கைகளில் கைக்குட்டை ஏந்தி ஆடும் ஆட்டம். கதைகளைப் பாட்டின் மூலம் சொல்லி தாண்டவ முறையில் ஆடுவர். கதைப்பாடல்களின் இசையும் இந்த நடனத்திற்குச் சிறப்பூட்டுகிறது.

அரிவி வெட்டு நடனம், மீனவர் நடனம், குறத்தி நடனம், சுளகு நடனம், பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்றவையும் கிராமிய நடனங்களுள் அடங்கும்.

**ஒரு முன்பள்ளி ஆசிரியர் இவற்றை அறிந்திருந்தால் வேண்டிய நேரத்தில் பிள்ளைகளுக்கு வேண்டியவாறு நல்ல அனுபவங்களைச் செயற்பாடுகளாக்கி மகிழ்ச்சிகரமான முன்பள்ளியாக ஆக்கலாம். கவர்ச்சிகரமான முன்பள்ளியை நாடிப் பெற்றார்கள் படையெடுப்பார்கள்.**

### இசை கற்பிக்கும் முறைகள்:

அழகியற் கல்வியின் ஒரு அங்கமான இசையின் அம்சங்கள், அதன் மூலம் எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகள், இசை கற்பிக்கும் முறைகள் என்பன பற்றி இப்பகுதியிலே கற்றுக்கொள்வோம். இசை கற்பிப்பதன் மூலம் மாணவரிடையே பின்வரும் திறன்களை வளர்த்துக் கொள்ளலாம்.

1. இசையைக் கேட்டுக் கிரகித்தல்
2. இசை மீளாக்கம் - கற்றதை மீண்டும் பாடுதல்
3. இசையாக்கம் - புதிய ஆக்கம்

எனவே, இசை கற்பிக்கும் போது மேற்குறிப்பிட்ட திறன்களை வளர்க்கக் கூடியவாறு ஆசிரியரின் கற்பித்தல் அமைய வேண்டும் என்பது அவசியமாகிறது. இத்திறன்கள் ஒவ்வொன்றையும் நாம் தனித்தனியே பார்ப்போம்.

1. **இசையைக் கேட்டுக் கிரகித்தல்**

   பிரதான அம்சங்கள்

   01. சப்தங்களைக் கேட்டல்.
   02. பல்வேறு வகையான பாடல்களைக் கேட்டல்.
   03. இசை நாடக உரையாடல்களைக் கேட்டல்.
   04. வாத்திய இசையைக் கேட்டல்.

**கற்றல் விளைவுகள்**

- நாதத்தையும் இரைச்சலையும் பிரித்தறிதல்.
- வாய்ப்பாட்டு வாத்தியங்களின் இசையையும் இலட்சணங்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுதல்.
- நாட்டுப்பாடல், மெல்லிசைப்பாடல், பிறமொழி/ தேசப்பாடல்கள் எனப் பாடல்கள் பலவகைப்படும் என்பதனை அறிதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இசை மீளாக்கம்

இசை மீளாக்கம் என்பது பாடல்களைத் திரும்பத் திரும்ப இசைத்து மீட்டுப் பார்த்தலைக் குறிக்கும். ஆரம்ப வகுப்பு மாணவர்கள் பின்வரும் பாடல்களை இசை கூட்டிப்பாடுவதன் மூலம் பாடுந்திறனை விருத்தி செய்யலாம்.

01. குழந்தைப்பாடல்.

02. நாட்டுப்பாடல்.

03. சமய பக்திப் பாடல்கள்.

04. கதைப் பாடல்கள்.

05. இசை நாடகப் பாடல்கள்.

**கற்றல் விளைவுகள்**

- குரலைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்.
- பாடலுக்கேற்ப தாளம் போடுந்திறன்.
- இலகுவான கருவிகளைக் கையாளும் திறன்.
- புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தும் ஆற்றல்.

## 3. இசை ஆக்கம்

01. புத்தளிப்புக் கருவி மூலம் இசையை எழுப்புதல்.

02. சிறிய பாடல்களை இயற்றிப் பாடுதல்.

03. சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கக்கூடியவாறு இசையையும், இசைக்கருவிகளையும் பொருத்தமாகப் பயன்படுத்துதல்.

**கற்றல் விளைவுகள்**

- புத்தளிப்புக் கருவிகளை ஆக்கி இசைக்கும் திறனைப் பெறுதல்.
- சிறிய பாடல்களை ஆக்கி இசையைக் கூட்டிப்பாடுதல்.
- புயல், மழை, விபத்து போன்ற சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இசையமைக்கும் திறன்.

### கற்பித்தல் முறை

அழகியல் பாடத்தைப் பொறுத்தவரை சிறுவர்களை வகுப்பறையில் வைத்துக் கட்டுப்பாட்டுடன் கற்பித்தலானது இசைப் போதனை முறைக்குப் பொருத்தமற்ற தொன்றாகும். ஆரம்ப மாணவர் சுயமாக இயங்கும் தன்மையுடையவர்களாதலால் அவர்களுக்கேற்ற ஓர் தனியான வெளியிடம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது ஓர் சிறந்த ஆசிரியரின் கடப்பாடாகும். கரும்பலகையில் எழுதிக் கற்பிப்பதும் உகந்ததல்ல.அது ஆசிரியர் மாணவர்களோடு இணைந்து சுயமாக இயங்கும் தன்மைக்கு இடையூறாகும். இனி கற்பித்தல் முறை பற்றிப் பார்ப்போம்.
இங்கு நாம் குறிப்பிட்ட ஓர் பாடலை ஆரம்ப மாணவர்களுக்கு கற்பிக்கும் போது கையாள வேண்டிய முறைகள் பற்றிப் பார்ப்போம்.

**பாடல் :** தம்பி தங்கை வாருங்கள்

தாளம் தட்டி ஆடுங்கள்

தும்பி போல வட்டமாய்

சுற்றி நின்று பாடுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. வகுப்பை அரைவட்டமாக்க வேண்டும். பாடலை ஆசிரியர் மாணவர் விரும்பும் வகையில் அழகாகவும் இனிமையாகவும் தெளிவாகவும் பாடிக்காட்டுதல் வேண்டும். மாணவர் அவதானத்துடன் செவிமடுத்தல் வேண்டும். இரண்டு, மூன்று தடவைகள் பாடிக் காட்டும் போது மாணவர் பாடலைக் கிரகித்துக் கொள்ளும் தன்மை ஏற்பட வாய்ப்புண்டாகிறது.

02. பாடல் பற்றிய விளக்கம் அளித்தல் வேண்டும். தம்பி, தங்கை தும்பி பற்றி கலந்துரையாடுதல். இக்கலந்துரையாடலின் போது மாணவர் சுயமாக தம் கருத்துக்களை வெளிப்படுத்த ஆசிரியர் இடமளித்தல் வேண்டும்.

03. பாடலைப் பகுதி பகுதியாக இசையோடு கற்பித்தல் வேண்டும்.

04. மாணவரும், ஆசிரியரும் இணைந்து பாடுதல்.

05. மாணவர் தனித்துச் சேர்ந்தும், குழுவாகவும் பாடல்

06. ஆசிரியர் பாட மாணவர் சுயமாக அபிநயம் செய்தல்.

07. ஆசிரியரது வழிகாட்டலுடன் மாணவர் அபிநயம் செய்தல்.

08. மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அபிநயத்துடன் பாடச் செய்தல்.

09. ஒரு குழு பாட மற்றைய குழுக்கள் அபிநயம் செய்தல்.

10. தாளத்துடன் சேர்ந்தும் தனித்தும் தாளத்துடன் பாடல்.

11. பாடலுக்கேற்ப தாளக்கருவிகள் பயன்படுத்தல். சிரட்டை, சோடா போத்தல் மூடியில் செய்த சல்லாரி என்பன உபயோகிக்கலாம்.

12. பாடலைச் சரிவரத் தனியாகத் தாளத்துடன் பாடல்.

**நாளுக்கான திட்டமிடல்**

| | |
|---|---|
| பாடப்பரப்பு | ஆக்கச் செயல் அபிவிருத்தி – இசை |
| செயற்பாடு | உடலசைவு அபிவிருத்தி |
| நோக்கம் | பல்வகை நிறங்களைக் உருவாக்கும் முறைகளைக் கண்டு பிடித்தல் |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல் |
| அளவு | 5 – 10 நிமிடங்கள் |
| கற்றல் சாதனங்கள் | வகுப்பு மாணவர்களால் உருவாக்கப்பட்ட இசைக்கருவிகள் |
| செயல் முறை<br>(சின்னத் தலை பத்திரம்<br>சின்ன நெற்றி பத்திரம்<br>சின்னப் புருவம் பத்திரம்<br>சின்னக் கண் பத்திரம்)<br>இவ்வாறு உடலுறுப்புக்களைப்பாடலாக்கி உடலசைவோடு பாடலாம்) | 1 1. வகுப்பை வட்டமாக நிற்க விடுங்கள்.<br>• பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• பிள்ளைகளிடம் தமது உடலின் உறுப்புக்களைச் சொல்லும்படி கூறுங்கள்.<br>• "சின்னத் தலை பத்திரம்" பாடலைப் பாடுங்கள்.<br>• பிள்ளைகள் கவனமாகக் கேட்க வேண்டும்.<br>• ஆசிரியர் பாடப் பிள்ளைகள் பாடவேண்டும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | • ஆசிரியரும் பிள்ளைகளும் சேர்ந்து பாடுதல்<br>• பிள்ளைகளை அசைவோடு ஆடியாடிப் பாடச் சொல்லுங்கள்.<br>• கற்றல் வட்டநேரத்தில் மெதுவாகவும். விரைவாகவும் பாட வழிப்படுத்துங்கள்.<br>• சின்னத் தலை பத்திரம், சின்னத் தோள்கள் பத்திரம் இவ்வாறு உறுப்புக்களை சொல்லிப் பாடுக.<br>• பிள்ளைகளைக் குழுக்களாக்கி வெளியில்வட்டமாக இருக்கச் சொல்லுங்கள்.<br>• ஆசிரியர் ஒரு குழுவின் வட்டத்தில் சேர்ந்து பிளாஸ்ரிக் போத்தலைச் சுழற்றி விடுவார். போத்தலின் சுழற்சி நின்று போத்தலின் கழுத்துப்பகுதி யார்பக்கம் காட்டுகின்றதோ அவரிடம் ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கு விடை கூறவேண்டும். |
| | முன்பள்ளியில் உள்ள பொருட்களைக் காட்டி அவை பற்றிக் கூறும்படி கேட்கலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |

**விளையாட்டல்லாத விளையாட்டு நூலில் 28 செயற்பாடுகள் உள்ளன. அவற்றோடு நீங்களும் சிலவற்றை உருவாக்கிச் சேர்த்து ஒரு தவணைக்கு 10 செயற்பாடுகளாகக் கற்பியுங்கள்.**

| | **1ஆம் தவணை** | **2ஆம் தவணை** | **3ஆம் தவணை** |
|---|---|---|---|
| 1 | உங்கள் பெயரென்ன? | மழைப் புயல் | குப்புவும் சுப்புவும் |
| 2 | இசையில் லயித்தல் | சங்கீத விளையாட்டு | பெரிய மீனும் சிறிய மீனும் |
| 3 | சங்கீதக் கதிரை | இசை வடிவங்கள் | இசைக்கு வரைதல் |
| 4 | இசையும் அசைவும் | ஊதுகுழல் செய்வோம் | பாவை ஒன்று தாருங்கள் |
| 5 | ஒலி அலைகள் | இசைப் பொருட்களை செய்வோம் | இரண்டு புகைவண்டி |
| 6 | பல்வேறு குரல்கள் | ஒலியைக் கேட்டு அறிதல் | இசை ஆக்கம். |
| 7 | யார் பாடியது? | முன்பள்ளி பான்ட் இசை | முன்பள்ளி பான்ட் இசை |
| 8 | தொலைந்த பசு | ஒலியைத் தேடுதல் | சங்கீதக் கதிரை |
| 9 | ஒலியை இனங்காணல் | ஒலிகளை இனங்காணல் | சங்கீதக் கதிரை |
| 10 | பல்வேறு ஒலிகளை எழுப்புதல். | மேலும் கீழும் | சங்கீதக் கதிரை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடிப்பாற்றல் செயற்பாடுகள் ஆக்க விருத்தியை விரிவுபடுத்துகின்றன.**

ஒருவரைப்போலச் செய்து பார்ப்பதில் சிறார்கள் வல்லவர்கள். பிள்ளைகள் வேறு ஆட்களைப்போல் உடையணிந்து பாவனை செய்ய விரும்புவார்கள். பொம்மைகள், தொலைபேசி, தொப்பி போன்றன நடிப்பாற்றலை விருத்தி செய்யவல்லன. பல்வேறுபட்ட மீளாக்கப் பொருட்களில் இருந்து வேண்டிய விளையாட்டுப் பொருட்கள் செய்வர். ஆசிரியர் அவர்களது ஈடுபாட்டை உன்னிப்பாகக் கவனித்து உற்சாகத்தை அளிக்க வேண்டும். முகமூடிகளை அணிந்து கொண்டு பிள்ளைகள் பாத்திரங்களை ஏற்று நடிப்பார்கள். ஆசிரியரின் வழிகாட்டு இதற்கு அவசியம் தேவை. தொட்டுணரும் அனுபவங்கள் பிள்ளைகளின் ஆற்றலுக்கு உதவுகின்றன. மென்மை, கரடு, முரடு, ஈரம், வரட்சி, வெப்பம், குளிர்ச்சி போன்ற அனுபவங்களைப் பெறுவர்.

- சிறுவர்களால் நன்கு சோதிக்கப்பட்ட ஆக்கற் சித்திரச் செயற்பாடுகள் உடல் முதிர்ச்சியுடன் கையாளும் திறன் விருத்தியுடனும் தொடர்புடையது.
- முன்பள்ளிப் பருவத்தில் ஆக்கச் சித்திரப் படிமுறை வளர்ச்சி ஒழுங்கற்ற கிறுக்கலில் தொடங்கி ஒழுங்கான கிறுக்கலுக்கு மாறி, பின் வரைதல் நிலைக்கு வருகிறது.
- பாடல்களைக் கேட்பதிலும் பாடிப் பரீட்சையமாக்குவதிலும், இசைக்கருவிகளைப் பயன்படுத்தி விளையாடுவதிலும், சாதகமான மகிழ்ச்சியான சங்கீத அறிமுகச் செயற்பாடு ஏற்படும்.
- கூச்சமின்றிப்பேசுதல், மனவெழுச்சிக்காக நாடகம் நடித்தல், பொம்மை விளையாட்டுக்கள் போன்றன பிள்ளைகளைப் பல்வேறு நடத்தைகளுக்கும் குரல் வளங்களுக்கும், கற்பனைக் கதைகளுக்கும் ஊக்கமூட்டுகின்றன.
- தொடுதலும், மணத்தலும் ஆக்கச் செயல்களுக்கு உந்து சக்தியாகின்றன.
- ஆக்கச் செயற்பாட்டு விருத்தியில் போட்டியைத் தவிர்த்து ஒத்துழைப்பை நல்கும் படிமுறை ஊக்குவிப்புத் தேவை.
- ஆக்க விருத்திச் செயற்பாடுகள் ஆசிரியருக்கு வகுப்பிலுள்ள பிள்ளைகளைப் பற்றி அறிய சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

கதைகளை ஆசிரியர் சொல்லும்போது மாணவர்கள் பாத்திரங்களாக நடித்தல். கதைகளை நாடகமாக்கி நடிப்பித்தல்.

பூனைக்கு மணி கட்டுவது யார்? கதையை சிறிய நாடகமாக்கி நடிப்பித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெழுச்சி விருத்தி

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகளையும், உடலியல் தாக்கங்களையும் உள்ளடக்கியது. மனவெழுச்சியைத் தரும் பாதிப்புக்கள் அல்லது தூண்டிகள் உடலில் மாற்றங்களை ஏற்படுத்தும். குழந்தைப் பருவத்திலேயே மனவெழுச்சிகள் தோன்றுவதாக உளவியலாளர்கள் கருதுவர். அழுதல், சிரித்தல், கோபம் கொள்ளல், அசைவுகள் என்பன மனவெழுச்சிகளின் வெளிப்பாடே. மகிழ்ச்சி. கோபம். கீழ்ப்படிவு, பயம், என்பன மனவெழுச்சிகளைப் பிரதிபலிக்கும் செயல்களாகும்.

மகிழ்வற்ற, கோபம் கொண்ட பிள்ளையின் கண்கள் சிவக்கும்.கண்ணீர் வடியும். அதேபோல் பயங்கொண்ட பிள்ளையின் கண்கள் பீதியடையும். உமிழ்நீர் வற்றும். குரல் கரகரத்து அடைக்கும். கைகால் முதலிய உறுப்புகளுக்கு குருதியோட்டம் விரைவாக ஓடும். இவற்றின் காரணமாகப் பிள்ளையின் சமிபாடு மந்தமாகும். குடற்புண்கள் தோண்றும். உடல் வளர்ச்சி குன்றல் போன்றனவும் ஏற்படலாம்.

அன்பும் ஆதரவும் பாதுகாப்பும் கிடைக்கும் பிள்ளைகளது செயற்பாடுகள் மகிழ்ச்சிகரமானதாகவும். எதிர்கால வாழ்க்கைக்குப் பாலமாகவும் அமையும். அன்பினால் உலகை ஆளலாம். குழந்தை அன்பையும் பாதுகாப்பையும் ஆதரவையும் நாடுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு பெற்றோரும். முன்பள்ளி ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு உற்சாகமான சூழலை வழங்கினால் குதூகலமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம்.

### சமூக மனவெழுச்சி விருத்திக்கான சில எதிர்பார்ப்புக்கள்

**3 – 4 வயதினர்.**

தெரிந்தவர்கள் மேல் நம்பிக்கை வைத்தல்.

குடும்பத்தோடும் நண்பர்களோடும் தொடர்புடையவர்களாய் இருத்தல்.

சில வேளைகளில் மற்றவர்களோடு விளையாடுவர். அல்லது ஒரு புறமிருந்து கவனிப்பர்.

பெற்றோரிடமும். ஆசிரியர்களிடமும் நம்பிக்கையூட்டத் தங்கியிருத்தல்.

தனக்கு தேவையானது கிடையாத போது கண்ணீர் மல்கிக் கோபம் கொள்ளல்.

பகிர்ந்து கொள்ளத் தொடங்குதல்.

வீட்டிலும் பாடசாலையிலும் உதவ விரும்புதல்.

தனது சொந்த அடையாளத்தை உணரத் தலைப்படுதல்.

தன்னம்பிக்கையைப் பெறத் தொடங்குதல்.

**4 – 5 வயதினர்**

விசேட தோழமையை நாடல்.

மற்றப் பிள்ளைகளுடன் தோழமையுடன் ஒன்றுதல்.

குடும்பத்தோடு இணைந்த வளர்ந்தோரிடம் பயமின்மை.

எதனைச் செய்லாம், எதனைச் செய்யக் கூடாது என்பதனைத் தெரிந்து கொள்ளல்.

ஏன் என்று கேட்பதும், வளர்ந்தோர் சொல்வதையெல்லாம் எந்த நேரமும் செய்ய முன்வராமை.

விதிகளை விளங்கிக் கொள்ளத் தொடங்குதல்.

சிறு பிள்ளைகளைக் கவனிப்பதில் கவனம் செலுத்துதல்.

பாதுகாப்பான சூழலில் தன்னம்பிக்கைளை வளர்த்தல்.

எப்பொழுதும் தான் முதலாவதாக முடியாது என்பதனை விளங்கிக் கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது திருப்திக்கேற்ப ஒரு செயலைச் செய்யமுடியாதபோது விரக்தியுறுதல்.

குழுக்களாக் கூடிவிளையாடுவதில் இன்புறல்.

மற்றவர்களோடு சேர்ந்து பகிர்ந்து கொள்வதையும், சுழற்சிமுறையையும் ஏற்றுக் கொள்ளல்.

பிறருக்கு உதவுவதில் பங்கெடுத்தல்.

இதற்கேற்றாற்போல் நாளாந்த வேலைத்திட்டத்தைத் தயாரித்துக் கற்பித்தால் நல்லதொரு மாணவருலகை நாம் காணலாம்.. சமூக மனவெழுச்சி சார்ந்த 32 பயிற்சிகள் விளையாட்டு அல்லாத விளையாட்டு நூலில் உள்ளன. மூன்று தவணைகளுக்கும் ஏற்றாற்போல் பகிர்ந்து செயற்பாடுகளை வழங்க ஆசிரியருக்கு இடமுண்டு.

| | **1ஆம் தவணை** | **2ஆம் தவணை** | **3ஆம் தவணை** |
|---|---|---|---|
| 1 | தன்னை அறிமுகஞ் செய்தல் | அசைவுத் தொடர்பு | களைத்த முயல் |
| 2 | எனது வெற்றி | கதைக்கும் கோல் | மந்திரக் கோல் |
| 3 | படம் ஒட்டும் புத்தகம் | நண்பனைச் சந்தியுங்கள் | உணரும் மணிக்கூடு |
| 4 | தலைவரைப் பின்பற்றுதல் | நட்பு மணிகள் | மந்திரத் தொப்பி |
| 5 | குடும்பப் படம் | ஆற்றைக் கடத்தல் | ஒலி மூலம் உணர்தல் |
| 6 | குழுவின் படம் | நடிப்போம் | உணர்ச்சிகளை ஊகித்தல் |
| 7 | கையை அடையாளம் காணுதல் | கண்ணாடி விளையாட்டு | முகங்களின் உணர்ச்சி |
| 8 | வாழ்த்துக்கள் | சங்கீதக் கதிரை | சந்தோஷமாயிருத்தல் |
| 9 | யார் பாடுவது? | பொம்மை செய்தல் | உணர்ச்சியை வெளிக்காட்டல் |
| 10 | குழு நடிப்பு | நண்பருக்கு அன்பளிப்பு | கதை உருவாக்கல் |
| 11 | வாழ்த்து அட்டை | அட்டை பொருத்துதல் | மாம்பழக் கதை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளுக்கான திட்டமிடல் -**

| | |
|---|---|
| பாடப்பரப்பு | மனவெழுச்சி அபிவிருத்தி – நடிப்பு |
| செயற்பாடு | தன்னை அறிமுகம் செய்தல் |
| நோக்கம் | பல்வகை வழிகளில் தற்துணிவை ஏற்படுத்தல் |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல் |
| அளவு | 5 – 10 நிமிடங்கள் |
| கற்றல் சாதனங்கள் | பழைய நாளிதழ், தடித்த நூல், வண்ணப் பேப்பர், பிறிஸ்ரல் போட், நிறக் கிறயோன், பசை, கத்தரிக்கோல் |
| செயல் முறை | 1. பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• பிள்ளைகளை வட்டமாக இருக்கச் சொல்லுங்கள். பிள்ளைகளுக்குத் தொப்பி செய்யும் முறையைக் காட்டிக் கொடுங்கள். செய்த தொப்பிகளை மேசையில் பரத்தி வைத்திருக்க வேண்டும்.<br>• "நான் அழகான ஒரு பரிசைத் தருகிறேன். இந்தத் தொப்பி உனக்காக. எனது பரிசு" எனக்கூறி ஆசிரியர் ஒரு தொப்பியை ஒரு பிள்ளைக்குக் கொடுப்பார்.<br>• பரிசைப் பெற்ற பிள்ளை எழுந்து தன் பெரைச் சொல்லி, அந்தத் தொப்பிப் பரிசை வேறு ஒரு பிள்ளைக்கு ஆசிரியர் சொன்னதைப்போல் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்பிள்ளை அடுத்த பிள்ளைக்குக் கொடுக்க வேண்டும். இச்செயற்பாடு தொடர்ந்து கடைசிப் பிள்ளைவரைக்கும் தொடரவேண்டும்.<br>• ஆசிரியர் அவதானித்து உதவவேண்டும்.<br>• பிள்ளைகள் வெவ்வேறு ஒலிகளுடன் சொல்லவேண்டும். அதாவது இசையோடு கூறவேண்டும்.<br>• தொப்பியின் படங்களை வரைந்து நிறந்தீட்டிக் காட்சிப்படுத்த வேண்டும்.<br>• ஒவ்வொரு பிள்ளையும் தொப்பியை எடுத்துத் தனக்கு விரும்பிய நண்பருக்கு அல்லது குடும்ப உறுப்பினருக்கு "இந்தத் தொப்பி எனது அன்புப் பரிசு" எனப்பாடிக் கொடுக்க வழிப்படுத்துக.<br>• பிள்ளைகளைக் குழுக்களாக்கி வெளியில் வட்டமாக இருக்கச் சொல்லுங்கள்.<br>• ஆசிரியர் ஒரு குழுவின் வட்டத்தில் சேர்ந்து பிளாஸ்ரிக் போத்தலைச் சுழற்றி விடுவார். போத்தலின் சுழற்சி நின்று போத்தலின் கழுத்துப்பகுதி யார்பக்கம் காட்டுகின்றதோ அவரிடம் ஆசிரியர் வினாக்களுக்கு விடை கூறவேண்டும்.<br>• ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லவும். அந்தப் பெயருள்ள தொப்பியை எடுக்கச் சொல்லவும். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | • தொப்பியைத் தலையில் வைத்துக் கொண்டு நடித்து நடக்க வேண்டும். தனக்கு விரும்பிய பிள்ளைகளைக் கைகாட்டி அழைத்துப் பின்னாலும் பக்கவாட்டிலும் நடக்கும்படி கூறி நடக்க வேண்டும். எல்லாரும் எழுந்து நடையில் பங்கு கொள்ளும் வரை விளையாட்டைத் தொடரலாம். பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் செய்வார்கள். |
| | முன்பள்ளியில் உள்ள பொருட்களைக் காட்டி அவை பற்றிக் கூறும்படி கேட்கலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |

# சமூக மனவெழுச்சி விருத்தி

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகளையும், உடலியல் தாக்கங்களையும் உள்ளடக்கியது. மனவெழுச்சியைத் தரும் பாதிப்புக்கள் அல்லது தூண்டிகள் உடலில் மாற்றங்களை ஏற்படுத்தும். குழந்தைப் பருவத்திலேயே மனவெழுச்சிகள் தோன்றுவதாக உளவியலாளர்கள் கருதுவர். அழுதல், சிரித்தல், கோபம் கொள்ளல், அசைவுகள் என்பன மனவெழுச்சிகளின் வெளிப்பாடே. மகிழ்ச்சி. கோபம். கீழ்ப்படிவு, பயம், என்பன மனவெழுச்சிகளைப் பிரதிபலிக்கும் செயல்களாகும் என்பதை அறிந்தோம்.

மகிழ்வற்ற, கோபம் கொண்ட பிள்ளையின் கண்கள் சிவக்கும்.கண்ணீர் வடியும். அதேபோல் பயங்கொண்ட பிள்ளையின் கண்கள் பீதியடையும். உமிழ்நீர் வற்றும். குரல் கரகரத்து அடைக்கும். கைகால் முதலிய உறுப்புகளுக்கு குருதியோட்டம் விரைவாக ஓடும். இவற்றின் காரணமாகப் பிள்ளையின் சமிபாடு மந்தமாகும். குடற்புண்கள் தோண்றும். உடல் வளர்ச்சி குன்றல் போன்றனவும் ஏற்படலாம்.

அன்பும் ஆதரவும் பாதுகாப்பும் கிடைக்கும் பிள்ளைகளது செயற்பாடுகள் மகிழ்ச்சிகரமானதாகவும். எதிர்கால வாழ்க்கைக்குப் பாலமாகவும் அமையும். அன்பினால் உலகை ஆளலாம். குழந்தை அன்பையும் பாதுகாப்பையும் ஆதரவையும் நாடுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு பெற்றோரும். முன்பள்ளி ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு உற்சாகமான சூழலை வழங்கினால் குதூகலமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம்.
தனிமனித மனவெழுச்சியின் தொகுப்பே சமூகத்தினது வெளிப்பாடாகும். மனவெழுச்சிப் பயிற்சிகளையும், ஏலவே செய்த ஏனைய செயற்பாட்டுப் பயிற்சிகளில் இருந்து தெரிந்தெடுத்துத் செய்விக்கலாம்.

## மனவடுக்களுக்குள்ளான பிள்ளைகளை இணைத்துக் கொள்ளல்.

மனவெழுச்சி ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவது. உணர்ச்சிகளையும், உடலியல் தாக்கங்களையும் மனவெழுச்சி உள்ளடக்கியது. பிள்ளைகளது மனவெழுச்சியின் விருத்தியில் பல காரணிகள் பங்கு கொள்கின்றன. குடும்பப் பின்னணி முக்கிய பங்கினை வகிக்கின்றதைப் பலரும் ஏற்றுள்ளனர். குடும்பங்களிடையே உள்ள முரண்பாடு, வீட்டு வன்முறைகள். இடப்பெயர்வுகள், குடும்பத்தில் தாய் தந்தை போன்றோரின் இழப்புக்கள். சிற்றன்னை, சிற்றப்பன் கொடுமை. இன்னுமொரு குழந்தை பிறத்தல், வறுமை. தாய் வெளிநாடு செல்லல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற காரணிகள் பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்தியில் முக்கிய ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. இவை பிள்ளைகளின் வாழ்க்கையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. சில சமயங்களில் அவர்களை விரக்தியின் விளிம்பில் கொண்டு போய்த் தள்ளி, வன்முறைக்கு ஆளாக்கி விடுகின்றன.

இலங்கையில் வடகிழக்குப் பிரதேசத்திலும் பலகாரணிகள் பிள்ளைகள் மனவெழுச்சி விருத்தியில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. அவர்களது கற்கும் ஆற்றலைத் தடுத்து நிறுத்திவிட்டன. பெற்றார்களும் தமது சிறார்கள் பற்றிய கவலையில் ஆழ்ந்தனர். அவர்களது திறன் திசைத்திருப்பப்பட்டது. இதனால் பலர் கல்வி கற்கும் காலத்தை வீணடித்து விட்டார்கள். தேர்ச்சியைப் பெறத் தவறினார்களே அன்றி அவர்கள் விவேகமற்றவர்களோ, தரமற்றவர்களோ அல்ல. மொழியறிவு, சொற்களஞ்சிய அறிவு போதுமானதல்ல. காரணம் அவர்களது வழமையான இளமைக்காலப் பாடசாலை நாட்களைத் தவறவிட்டவர்கள். அதனால் தேர்ச்சி மட்டத்தைத் தவறவிட்டவர்கள். அதனால் அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகி, மனங்கலங்கி இருப்பார்கள். அவர்களுக்கு விசேட தேவைகள் இருக்கும். அவர்களது மனவெழுச்சி பாதிக்கப்பட்டு அவர்களிடையே மனவடுக்களை உருவாக்கிவிட்டிருக்கலாம். அப்படிப்பட்டவர்களோடு மிகக் கவனமாக முன்பள்ளி ஆசிரியர்கள் செயற்படவேண்டும்.

முன்பள்ளியில் அப்பிள்ளைகளுக்கு நம்பிக்கை உருவாகும் சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும். பிள்ளை சொல்வதைக் கேட்கவும், வாக்குறுதிகளை நிறைவேற்றவும், நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும், சிந்தனா சக்தி விருத்தியுறவும், ஆக்கத்திறனும் உணர்வுகளையும் வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்களும் கிடைக்கக் கூடிய இன்பகரமான இடமாக முன்பள்ளி அமையவேண்டும். செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்யும்போது மன அதிர்ச்சியிலிருந்து மீளும் வகையில் அமையவேண்டும்.

ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் ஆக்கிரமிப்பு, அடக்குமுறை போன்றவற்றை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை அடக்கிய விளையாட்டுக்கள், நாடகங்கள் போன்றவற்றின் ஊடாக பிரச்சினைகளில் இருந்து திசைதிருப்பப்பட்டு மனமகிழ்ச்சி, அமைதி தோன்றும் வழிவகைகளை உள்ளடக்கியதாக அமையவேண்டும். இதற்கான செயற்பாடுகளாக சமூக மனவெழுச்சிச் செயற்பாடுகளைச் செய்விக்கலாம். விளையாட்டு அல்லாத விளையாட்டு என்ற நூலில் 29 செயற்பாடுகள் உள்ளன. அதனோடு நீங்களும் பொருத்தமான செயற்பாடுகளைச் சேர்த்து கற்றலை வழிப்படுத்துங்கள். இங்கே தரப்பட்ட தலைப்புகளில்தான் அமையவேண்டும் என்றில்லை. உங்கள் சமார்த்தியத்தைப் பொறுத்து வசதியான, கவர்ச்சியான செயற்பாடுகள் மூலம் கற்பித்தலை மேற்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1ஆம் தவணை | 2ஆம் தவணை | 3ஆம் தவணை |
|---|---|---|---|
| 1 | கைமரம் செய்தல் | ஆடும் ஊஞ்சல் | செருப்பு வேட்டை |
| 2 | வீட்டில் கைமரம் | தடை தாண்டல் | ஒரு பொம்மை இரு பிள்ளை |
| 3 | அவர் எப்படி இருக்கிறார்? | சோடி விளையாட்டு | பொம்மை விளையாட்டு |
| 4 | எனக்கு உதவுங்கள் | பந்தை நகர்த்தல் | போதாது |
| 5 | பிறருக்கு உதவுதல் | பந்தை உதைத்தல் | இழுத்து விரித்தல் |
| 6 | எனது விருப்பம் | உருட்டிப் பிடி | நாங்களாக இருந்தால் |
| 7 | விடையளிக்கும் பெட்டி | நண்பருக்கு உதவுதல் | பாதுகாப்புத் தீவு |
| 8 | கிழிப்பதற்கு எண்ணம் | சணலினால் படங்கள் | நீ என்ன செய்வாய்? |
| 9 | நற்செயல்கள் | நண்பருடன் வரைதல் | சமாதானக் கதிரைகள் |
| 10 | மென்மையான சித்திரம் | சிலந்தி வலை | கைமரம் செய்தல் |
| 11 | மீட்டல் - மதிப்பீடு | மீட்டல் - மதிப்பீடு | மீட்டல் - மதிப்பீடு |

**நாளுக்கான திட்டமிடல் -**

| | |
|---|---|
| பாடப்பரப்பு | மனவெழுச்சி அபிவிருத்தி – மனவடுக்குள்ளான.. |
| செயற்பாடு | கைமரம் செய்தல் |
| நோக்கம் | எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்படும் உணர்வுக்கு உற்சாகப் படுத்தல் |
| மாணவர் தொகை | வகுப்பில் உள்ளோர் - குழுக்களாகச் செயற்படல் |
| அளவு | 5 – 10 நிமிடங்கள் |
| கற்றல் சாதனங்கள் | வெள்ளைத் தாள், தடித்த நூல், வண்ணப் பேப்பர், பிறிஸ்ரல் போட், நிறக் கிறயோன், பசை, இலைகளற்ற சிறிய மரக்கொப்பு, கத்தரிக்கோல் |
| செயல் முறை | 1. பிள்ளைகளை வட்டத்தில் வரச்செய்து ஒவ்வொருவரது பெயர்களையும் கேட்டு வரவேற்புச் செய்யுங்கள்.<br>• பிள்ளைகளைக் குழுக்களாக்கி, ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளைத்தாளை வழங்குங்கள்.<br>• குழுக்களை வட்டமாக இருக்கச் சொல்லுங்கள். பிள்ளைகளுக்குத் தாள்களின் மீது தங்கள் கைகளை வைத்து ஐந்து விரல்களும் பதியுமாறு பதிக்கும் முறையைக் காட்டிக் கொடுங்கள்.<br>• வரைந்த படங்களுக்கு நிறந்தீட்டச் சொல்லுங்கள்.<br>• இலைகளற்ற கொப்புகளைத் தேடி முதல்நாளே வைத்திருக்க வேண்டும். அக்கொப்பை ஒரு பேணியினுள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | வைத்து மண்நிறைத்துக் கொள்ள வேண்டும்.<br>• நிறந்தீட்டிய கைகளில் பிள்ளைகளது பெயர்களை எழுத உதவுங்கள்.<br>• வரைந்த கைகளை அந்தந்தக் குழுக்கள் தமது மரக்கொப்பில் இலைகளைப் போல் ஒட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.<br>• ஆசிரியர் அவதானித்து உதவவேண்டும்.<br>• பிள்ளைகளின் கைகள் மரக்கொப்பில் தொங்கும். அழகாக இருக்கும். அக்கைமரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். |
| | முன்பள்ளியில் உள்ள பொருட்களைக் காட்டி அவை பற்றிக் கூறும்படி கேட்கலாம். இச்செயற்பாடு தொடரலாம். |
| மதிப்பீடு | பிள்ளைகள் செய்வதை அவதானித்து மதிபிட வேண்டும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடுகளைப் பதிவு செய்வதற்கான மாதிரி படிவம்.

| இல | உடல்விருத்தி | மொழி | கணிதம் | சூழல் | சித்திரம் | இசையும் அசைவும் | மனவெழுச்சி | மன வடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாடுகள் நிறைவேற்றிய திகதி | | | | | | | | |
| 01 | | | | | | | | |
| 02 | | | | | | | | |
| 03 | | | | | | | | |
| 04 | | | | | | | | |
| 05 | | | | | | | | |
| 06 | | | | | | | | |
| 07 | | | | | | | | |
| 08 | | | | | | | | |
| 09 | | | | | | | | |
| 10 | | | | | | | | |
| 11 | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13 | | | | | | | | |
| 14 | | | | | | | | |
| 15 | | | | | | | | |
| 16 | | | | | | | | |
| 17 | | | | | | | | |
| 18 | | | | | | | | |
| 19 | | | | | | | | |
| 20 | | | | | | | | |
| 21 | | | | | | | | |
| 22 | | | | | | | | |
| 23 | | | | | | | | |
| 24 | | | | | | | | |
| 25 | | | | | | | | |
| 26 | | | | | | | | |
| 27 | | | | | | | | |
| 28 | | | | | | | | |
| 29 | | | | | | | | |
| 30 | | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAXPRO

Published By:
**MAXPRO PUBLICATION**
e-mail: maxpropub@gmail.com
Sales Hotline: 0774537194

Distributed By:
**LANKA BOOK DEPOT**
F.L. 1.14, Dias Place,
Gunasingapura, Colombo 12,
Tel: 011-2-341942

ISBN 978-955-0984-08-

A/C/002 Pric

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org